கலையின் சுவடு

பதிப்பாசிரியர்
கென்பூலோலியூ
ஸ்ரீ சதீஸ்

கலைஞான்கேசரி கணபதிப்பிள்ளை பிரஞ்சோதி ஞாபகார்த்த
வெளியீடு

வடமராட்சியின் வசந்தம்
கலைஞானகேசரி
கணபதிப்பிள்ளை பரஞ்சோதியின்

கலையின் சுவடு

பதிப்பாசிரியர்
தென்புலோலியூர் பரா.ரதீஸ்
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.

கணபதிப்பிள்ளை பரஞ்சோதி ஞாபகார்த்த
வெளியீடு
துன்னாலை,
யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

நூலின் பெயர்	: கலையின் சுவடு.
பதிப்பாசிரியர்	: பரா.ரதீஸ்.
உரிமை	: திருமதி சரஸ்வதி பரஞ்சோதி.
முதற்பதிப்பு	: 2004, வைகாசி.
வெளியீடு	: கலைஞானகேசரி க.பரஞ்சோதி ஞாபகார்த்த வெளியீடு, துன்னாலை, யாழ்ப்பாணம்.
அட்டை வடிவமைப்பு	: கோ.கோகிலரதன்.
அச்சுப்பதிப்பு	: பிள்ளையார் அச்சகம், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
பக்கங்கள்	: 86
பிரதிகள்	: 500
Title	: Kalainn Suvadu
Editor	: Para.Rathees.
Copy Right	: Mrs.Saraswathy Paramsothy.
First Edition	: 2004, May.
Publication	: Kalaignanakesari K.Paramsothy Memorial Publication. Thunnalai, Jaffna.
Cover Page	: K.Kokilarathan.
Printers	: Pillaiyar Printers, Point Pedro Road, Jaffna.
No of Pages	: 86
No of Copies	: 500

உ

சிவமயம்

எங்கள் கலை இலக்கியப் பயணத்தின் பிதாமகன்

கலை முதுசொத்தின் பங்காளன்

மூத்த இசைநாடகக் கலைஞர், பௌராணிகர், பாடகர், கவிஞர்

கலைஞானகேசரி கணபதிப்பிள்ளை

பரஞ்சோதிக்கு...

- இசைநாடகம் தந்த கவி
  – பரா.ரதீஸ் –
- இசைநாடகமும் இளைய தலைமுறையும்
  – வேல். நந்தகுமார் –
- கிராமியக் கலை; ஒரு நோக்கு
  – ம.பங்கயன் –
- நாடக உலகின் திலகம் கே.வி.நற்குணம்
  – பரா.ரமேஸ் –

✸ சுவிதையியல்

- பார்புகன்ற பணியாளர்
  – ந.சிவகுப்பிரமணியம் –
- என் திசைகாட்டி சரிந்துவிட்டது
  – வே.செந்திவேல் –
- மரணங்களால் கலைஞர்கள் மடிவதில்லை
  – பெ.ஜங்கரன் –
- இசைத்தமிழின் சுருதி சுரங்கெட்டுவிட்டது.
  – ம.பகீரதன் –
- எப்பிறப்பில் காண்போம் இனி
  – ம.குந்தவி –

✸ செவ்வியியல்

- மூத்த இசைநாடகக் கலைஞர் "கலைஞானகேசரி" கணபதிப்பிள்ளை பரஞ்சோதி
  – சந்தித்தவர் க.அருளானந்தன் –
- கலைஞானகேசரி க.பரஞ்சோதியோடு
  – தொடுத்துவன் நாகாஸ்திரன் –

✸ பின்னிணைப்பு

- கலைஞனின் விழுதுகள்

இம்மலரின் இதழ்களாக...

✸ நுழைவாயில்

- அணிந்துரை
  – கலாநிதி சி.சிவலிங்கராஜா –
- உங்களோடு
  – பரா.ரதீஸ் –
- இசைநாடக உலகின் இமயம் சரிந்தது
  – பிரம்மஶ்ரீ க.புருஷோத்தமக்குருக்கள் –
- எங்களூர்க் கலைஞன் கண்ணகை கழல் அடைந்தான்.
  – சிவஶ்ரீ சி.இந்திரராஜாக்குருக்கள் –

✸ கட்டுரையியல்

- மாண்பை மறப்போமா?
  – இ.வீரவாகு –
- ஈழத்து தமிழ் அரங்கியற் கலைச்சுவடு; 'கலைஞானகேசரி' அமரர் க.பரஞ்சோதி அப்பா
  – க.அருளானந்தன் –
- மீண்டும் ஒரு சோகம்; அமரர் கலைஞானகேசரி க.பரஞ்சோதி அவர்களின் மறைவு தந்த சில மனப்பதிவுகள்
  – கலாநிதி. த.கலாமணி –
- கலைஞானகேசரி க.பரஞ்சோதியின் வாழ்க்கைப் பின்புலமும் விழுதுகளும்
  -கோ.கோகிலரதன் –
- சைவத்தமிழ்ப் பணியில் ஐயா
  – ம.கோசலை –
- நாட்டுப்புறவியலும் கூத்துக்கலையும் ஒரு சுருக்கக்குறிப்பு
  – இரா.அகிலன் –

நுழைவாயில்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி.சிவலிங்கராஜா அவர்கள் உவந்தளித்த

அணிந்துரை

இசை நாடகக் கலைஞர் கலைஞானகேசரி கணபதிப்பிள்ளை பரஞ்சோதியின் நினைவாக வெளிவரும் 'கலையின் சுவடு' என்னும் மலர் சாதாரண நினைவு மலர் போல் அல்லாது காத்திரமான ஞாபகார்த்த வெளியீடாக வெளிவருவதைக் கண்டு மகிழ்கின்றேன். பதிப்பாசிரியர் பரா.ரதீஸ், இம்மலரின் உருவாக்கத்திற்காகக் கடினமாக உழைத்திருக்கின்றார் என்பது தெளிவாகின்றது.

யாழ்ப்பாணக்குடாநாட்டின் புவியியல் அமைப்பிலே வல்லைவெளியாலும், தொண்டமனாறு கடல் நீரேரியாலும் பிரிக்கப்பட்டு தனியே இருப்பதனாலும், நெய்தலும் மருதமும் நெருங்கி சூழ்ந்திருப்பதனாலும் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை துறைமுகங்களின் பயன்பாட்டினாலும் வடமராட்சிப் பிரதேசம் சில தனித்தன்மைகளைக் கொண்டு விளங்குகின்றது என்பர்.

கரவை வேலன் கோவை முதல், காதலியாற்றுப்படை வரை இப்பிரதேசத்தில் எழுந்த செந்நெறி இலக்கியங்களின் போக்கையும் நோக்கையும் புலப்படுத்தும். ஈழத்துத் தமிழ்ப் புலமை மரபிலே தமது சுவடுகளை ஆழமாகப் பதித்த உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் முதல் பேராசிரியர் சிவத்தம்பி வரை இப்பிரதேசத்தில் உருவானவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, உயர் இலக்கிய இலக்கண முயற்சிகள் ஒரு தளத்திலும் நாட்டார் கலை இலக்கிய முயற்சிகள் இன்னொரு தளத்திலும் வளர்வது, அல்லது பேணப்படுவது வழக்கமாயினும் வடமராட்சிப் பகுதியிலே இந்த இரு தளங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்பட்டமையை விதந்து குறிப்பிடலாம். இம்மரபின் பிரதிநிதியாக அண்மையில் மறைந்த திரு.பரஞ்சோதி அவர்கள் விளங்கினார்கள். இசைநாடகங்களில் ஈடுபாடு கொண்டு

அதைப்பேணிப் பாதுகாத்து வளர்த்து வருகின்ற அதே வேளையில் 'புராணபடனத்'தில் ஈடுபாடு கொண்டு அதில் கரிசனை காட்டியோருள் கலைஞர் பரஞ்சோதிக்குத் தனித்துவமான ஓர் இடம் உண்டு.

அவரின் நினைவாக வெளிவரும் மலர் நுழைவாயிலைத் தொடர்ந்து கட்டுரையியல், கவிதையியல், செவ்வியியல் எனப்பகுக்கப்பட்டு வெளிவருகின்றது. முப்பரிமாணத்திலே கலைஞர் பரஞ்சோதியின் ஆளுமையைப் புலப்படுத்தவென மலரும் இம்மலர் இசைநாடகம் பற்றிய செய்திகளையும், தரவுகளையும், ஆய்வுகளையும் உள்ளடக்கியுள்ளமை பாராட்டுக்குரியது. கலாநிதி கலாமணி முதலான ஆய்வறிஞர்களும் நந்தகுமார் முதலான ஆய்வு மாணவர்களும் எழுதியுள்ள கட்டுரைகள் மிகவும் பயனுடையவை. இளைய தலைமுறைக்கு எமது பாரம்பரிய வேர்களைத்தேட துணைபுரிவையாகப் பல கட்டுரைகள் அமைந்துள்ளன. கலைஞானகேசரி கணபதிப்பிள்ளை பரஞ்சோதியைப் போலவே கலாமணியும் இரண்டு தளங்களிலும் ''நின்று பிடிக்கும்'' தகுதிப்பாடுடையவர். அவரின் கட்டுரை இம்மலருக்கு பொலிவையும் வலுவையும் சேர்க்கின்றது.

இம்மலரில் இடம்பெறும் எல்லாக்கட்டுரைகளுமே எதோ ஒரு வகையில் ஆவணப்படுத்தப்படவேண்டிய விடயங்கள் பற்றியே பேசுகின்றன. நான்கு தலைமுறைக் கலைஞர்களுடன் தொடர்புபூண்டிருந்த அமரரின் செவ்வி இம்மலரில் இடம்பெறுவது போற்றுதற்குரியது. அச்செவ்வி தரும் செய்திகள் இளைய தலைமுறையினருக்குச் சமர்ப்பணமாகட்டும்.

குறுகிய காலத்தில் பரா.ரதீஸ் அவர்கள் இம்மலரைச் சிறப்புடன் வெளிக்கொணர்வதற்கு எடுத்த முயற்சிகளைப் பாராட்டுகின்றோம். கலைஞானகேசரி கணபதிப்பிள்ளை பரஞ்சோதியின் சுவடுகள் தொடர்க என வாழ்த்துகின்றேன்.

தமிழ்த்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா.

உங்களோடு...

அனைவருக்கும் வணக்கம் "கலையின் சுவடு" மூலம் மீண்டும் உங்களைச் சந்திக்கின்றேன்.

கலைஞன் நாட்டின் முதுகெலும்பு; கலைஞன் நாட்டின் பொக்கிசம்; கலைஞன் நடமாடும் தெய்வம். இவை கலைஞர்களுக்குரிய கௌரவிப்புக்கள். எழுத்துக்களிலும், மேடை முழக்கங்களிலும் காணலாம். நிஜத்தில், அது கேள்விதான்... போகட்டும்.

ஒரு நாட்டின் அல்லது ஒரு சமூகத்தின் அல்லது ஒரு இனத்தின் கலை கலாசாரங்களை ஆராயவேண்டுமேயானால், கலைக்காகவே வாழ்ந்த தனி மனிதர்கள் பற்றிய தேடல்கள் மிகவும் இன்றியமையாதவை. இந்த வகையில் ஏறத்தாழ 50 ஆண்டுகள் கலைக்காக வாழ்ந்து, கலைமகளின் கழலடைந்த, கலைஞானகேசரி கணபதிப்பிள்ளை பரஞ்சோதி ஞாபகார்த்தமாக இந்நூலை வெளியிடுவதில் நாம் நிறைவு காண்கின்றோம்.

பரஞ்சோதிக்கு ஆறு பிள்ளைகள். பதினேழு பேரப்பிள்ளைகள். குட்டிக்கிராமம். பேரப்பிள்ளைகளில் "மூத்தவன்", "பெரியவன்" என்ற உரிமையோடு இந்நூலைப் பதிப்பிப்பதற்கு வாய்ப்புத்தந்த என் சொந்தங்களுக்கு அன்பும், பணிவும்.

இந்நூலின் உருவாக்கத்திற்கு பல்வேறு வழிகளிலும் ஆலோசனை வழங்கிய எனது ஆசான்கள் தா.ஜெயவீரசிங்கம், க.அருளானந்தன், கலாநிதி த.கலாமணி ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகள்.

நூலுக்குரிய காத்திரமான அணிந்துரையினை மிகக்குறுகிய காலத்திலே தந்துதவி, நூலுக்குப் பெறுமதி சேர்த்த எனது அன்புக்கும், மதிப்பிற்குமுரிய யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி.சிவலிங்கராஜா அவர்களுக்கு பணிவான நன்றிகள். கூடவே, இவ் வணிந்துரையைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புத்தேடித்தந்த எனது அன்பு மாணவன் வே.நந்தகுமாருக்கு அன்பான நன்றிகள்.

இந்நூலிற்குப் பெறுமதி கொடுத்த கட்டுரை ஆசிரியர்கள், க்விஞர்கள், செவ்விகளைத் தந்துதவியோர் எனது அன்புக்கும், நினைவுக்கும் என்றும் உரியவர்கள்.

எப்பொழுதும் எனக்குப் பக்கபலமாக இருந்து என்னை உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கின்ற எனது மாணவச் செல்வங்கள் கோ.கோகிலரதன், வே.நந்தகுமார், ம.பகீரதன், பெ.ஐங்கரன், செ.உதீஸ்திரன், சி.தனேந்திரன், செ.றஞ்சன், ந.நவநீதன், கி.செந்தூரன், ம.பங்கயன் ஆகியோருக்கு அன்பான நன்றிகள். கூடவே அகில இலங்கை இளங்கோ கழகத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இந்நூலின் உருவாக்கத்திற்கு ஆரம்பத்தில் இருந்து நிறைவு வரை என் உடனுறைந்து, பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய என் அன்புச் சகோதரன் சு.சதீஸ்வரன் (மாணவன், மெய்யியற்துறை, பேராதனைப் பல்கலைக் கழகம்) அவர்களுக்கு என்றும் கடப்பாடுடையேன்.

இந்நூலுக்கான பிரதியினை ஒப்புநோக்கி சீர் செய்து தந்த எனது உறவுகள் பரா. ராதிகா, ம.கோசலை ஆகியோருக்கு எனது நன்றிகள். கூடவே, இந்நூலிற்கான வேலைப்பழுக்களை என்னோடு சேர்ந்து சுமந்த சக விழுதுகள் பரா.ரமேஸ், சி.கார்த்திகா, த.தர்ஷன், ம.குந்தவி, தெ.ரீனா, க.அருண்குமார் ஆகியோருக்கு இதயங்கனிந்த நன்றிகள்.

இந்நூலினை அழகுற கணினியில் வடிவமைப்புச் செய்துதந்த பிள்ளையார் அச்சகத்தினருக்கு என்றும் கடப்பாடுடையேன்.

நிறைவாக, கலையின் அரசனாக இருந்து எம்மையெல்லாம் வாழ்வித்துக்கொண்டிருக்கின்ற ஆதிமூலநாதனாம் சிவன்தாழ் பணிந்து அவனருள் வேண்டி அமைகின்றேன்.

வாழ்க தமிழ் வளர்க கலை.

"கலைக்கோயில்"
சின்னத்தாய்,
புலோலி தெற்கு, புலோலி.

என்றும் அன்புடன்,
பரா.ரதீஸ்.
(பதிப்பாசிரியர்)

இசை நாடக உலகின் இமயம் சரிந்தது

பிரம்மஶ்ரீ கபுருஷோத்தமக்குருக்கள்,
சமாதான நீதவான்,
பிரதமகுரு,
'வல்லிபுராலயம்'
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வாக்கிற்கிணங்க வாழ்ந்து காட்டியவர் மூத்த இசைநாடகக் கலைஞர் "கலைஞானகேசரி" கணபதிப்பிள்ளை பரஞ்சோதி என்று கூறினால் மிகையாகாது. இவரைப் பற்றிக் கூறினால் கூறிக்கொண்டே போகலாம். துன்னாலை வடக்கு கணபதிப்பிள்ளை தம்பதிகளின் மகனான இவரை, நான் எனது சிறுவயது முதலே நன்கு அறிவேன். இசை நாடகம் என்றால் பரஞ்சோதி என்று கூறுமளவிற்கு மிகுந்த புகழுடையவராக வாழ்ந்தவர். துன்னாலையிலே பரஞ்சோதி என்று கூறினால் தெரியாதவர் எவருமே இருக்க முடியாது.

இவர் இசை நாடகங்களில் பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடித்தவர். அரிச்சந்திரா - காலகண்ட ஐயர், வள்ளி திருமணம் - நாரதர், விருத்தன்:, பாஞ்சாலி சபதம் - விதுரர்: சத்தியவான் சாவித்திரி - சுமாலி, காத்தவராயன் சிந்துநடைக்கூத்து - சிவன், இசை நாடகத்துறையில் கொண்டிருந்த நாட்டம் காரணமாகத் தனது மூத்தமகன் பரராஜசிங்கத்தை 1970இல் துன்னாலை கலாசார மன்றத்தின் வாயிலாக சிலம்புச்செல்வி என்ற இசை நாடகத்தின் மூலம் இசை நாடகத்துறைக்கு அறிமுகப்படுத்தினார்.

இவருடைய சாந்தமான குணம், கருணையான பார்வை, தள்ளாத வயதிலும் நிறைந்த மனத்துணிவு, வயது அதிகரித்தாலும் சற்றும் கனிவு குறையாத இனிமையான பேச்சு என்பன காண்போரை இவர் பக்கம் ஈர்க்கச் செய்தன. பொன்னகையை விடப் புன்னகையே

மதிக்கத்தக்கது. இதை மகுடமாகக் கொண்டு, எப்போதும் தன் முகத்தில் புன்னகையைத் தவழ விடுவார். எமது இனத்திற்கெனத் தனிப்பண்பாடு, கலைமரபுகள் என்பன உள்ளன. சினிமா மோகம் கூடும் இக்காலத்தில் இவை எல்லாம் அழிந்து போகாமல் இன்றுவரை நிலைத்திருப்பதற்கு இசை நாடகங்களும், இவரைப் போன்ற கலைஞர்களின் பணியும் காரணங்கள் என்றால் அது மிகையாகாது. இத்தகைய இவருடைய இழப்பு இசை நாடகத்துறைக்கு பேரிழப்பாகும். இவரைப் போல வேறொருவர் பிறந்ததுமில்லை, இனிப்பிறக்கப்போவதுமில்லை என்றே கூறலாம். இவருடைய இனிய முகமும், கனிந்த பேச்சும் என்றும் எம்நெஞ்சை விட்டகலாது. தமிழ்க்கலை மரபுகளைப் பேணிய இவர் போன்ற கலைஞர்களைக் கௌரவிக்க வேண்டியது தமிழர்கள் ஆகிய எமது கடமையாகும். வரலாற்றை நாம் கூறக்கூடாது, வரலாறு எம்மைப் பற்றிக் கூற வேண்டும் என்ற கொள்கைப்படி சரித்திரத்தில் இடம் பெற்று இசைநாடகத் துறைக்காக வாழ்ந்து ஆண்டவன் அடி சென்றுவிட்ட கலைஞர் க.பரஞ்சோதி அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி

எங்கள் ஊர்க் கலைஞன் கண்ணகை கழல் அடைந்தான்

சிவஶ்ரீ.சி.இந்திரராஜாக்குருக்கள்,
பிரதமகுரு,
மிந்திரன் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்,
துன்னாலை.

ஈழநாட்டின் சிரசு எனக்கூறப்படும் யாழ்ப்பாணத்தின் இரு கண்கள் என விளங்குபவை பொன்னாலையும் துன்னாலையுமாம். கல்வியறிவு, வீரம், நற்பண்பு போன்றன கைவரப்பெற்ற வடமராட்சி மண்ணில் ஒரு பகுதியாக விளங்குவது துன்னாலை. இத் துன்னாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் தான் மறைந்த கலைஞர் கணபதிப்பிள்ளை பரஞ்சோதி. இவர் சிறுவயதிலிருந்து நாடகத் துறையில் ஆர்வம் கொண்டவர். இசை நாடகத் துறையில் பெரு வளர்ச்சி கண்டு பல பட்டங்களைப் பெற்றுக் கொண்டவர். ஆலயங்களிலே நடைபெறும் புராணப் படிப்பின் போது புராணங்களை வாசிப்பதிலும் பயன் சொல்வதிலும் மிகுந்த அனுபவம் உடையவர்.

ஒரு சமூக சேவையாளன். துன்னாலை மண்ணிற்கே பெருமை தேடித்தந்தவர். இவரது இழப்பு நாடகத்துறைக்கு மட்டுமன்றி துன்னாலை மண்ணிற்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும். இவரை இழந்து துயருறும் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு கலைஞரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மாண்பை மறப்போமா

இவீரவாகு
ஓய்வு பெற்ற அதிபர்

நிமிர்ந்த தோற்றம்; ஒளிவிடும் முகம்; மடித்த உத்திரியம்; மாண்புறு மனப்பண்பு இவை எல்லாம் எம்மை மயக்காமல் விடுமா. நாடகத்துறைக்கு நீங்கள் காட்டிய பேரார்வம், சங்கீதத்திற்கு நீங்கள் கொடுத்த மெருகு, சபையோரை நீங்கள் வசீகரிக்கின்ற கவர்ச்சி, தாளம், வாத்தியம் எல்லாமே சேர்தர ஏன் தலையாட்டம் இவை எல்லாம் எப்படி மறையும்.

முத்தமிழ் வித்தகரே! இவற்றை நடைமுறையில் காட்டி மயக்கிய பொக்கிசமே! நாம் மறக்கமுடியாது, எண்பதைத் தாண்டுகின்ற வயதிலும் எம் இதயத்தை எடுத்தீர்கள்.

இலக்கிய இரசனையில் நீங்கள் கொடுக்கின்ற இராக அமைவுகள், பாவனை ரூபங்கள் எவரையும் சிந்தை கலக்கும்.

புராண படனங்களில் நீங்கள் காட்டுகின்ற இன்ப ஓசை என்றும் எம்மனதை விட்டு அகலாது. மண்சுமந்த சருக்கம் - பாண்டியன் விசாகுலம் "ஆதியாம் கடவுள் எந்தை" என்னும் பாட்டின் ஈற்றில் 'நீதியாம் தவத்தின் மிக்கார் நெஞ்சகம் புழுங்க மண்மேல் தீதியாம் செய்ததுண்டோ?' என்று ஆற்றின் பெருக்கைக் கண்டு அழுவதும்,

வந்தி என்னும் பெண்ணின் துயரில் "பிட்டினை விற்று உண்போர்க்கு பேரிடும்பை உளதாமோ?' என்னும் அடிகளை நீங்கள் ஆலாபரணம் செய்யும்போது யார்தான் இரசிக்காமல் இருந்தார்.

ஏன் கந்தபுராணத்திலும் சூரனுக்கு, மைந்தன் இரணியன் புத்திகள் கூறுகின்றான். விதி விடவில்லை. சூரன் இறக்கின்றான். மகன் கூறும் அடிகள்

"நல்லார்களிற் றேரின் நானே தலையன்றோ" என்பதைப் பாடுவீர்கள். பதைக்காதவர் யார்?

இன்னும் கோவிற்கடவையில் கூட்டுப்பிரார்த்தனையில் "ஞானமுதல்வனே நாயகனே - நலம் நல்கிடும் சித்தி விநாயகனே" என்பீர்கள். தூணும் தலை சாய்க்கும். எம் துயரெல்லாம் பறந்தோடும்.

இந்த வகையில் சின்னத்தாய், புற்றளை, உபயகதிர்காமம், கோவிற்கடவை, அல்லையம்பதி முருகன், இந்திரன் அம்மன், வல்லிபுரக்கோவில், வெல்லிக்கம் தோட்டம், வல்லியானந்தம் ஆகிய பதிகளில் உங்கள் பெருமை அழியாது கமழும்.

இன்னும் உங்கள் பணியைப் பரப்ப பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் உளர். அவர்களும் இதே வழிதான். யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

ஈழத்து தமிழ் அரங்கியற் கலைச்சுவடு; "கலைஞான கேசரி" அமரர் க.பரஞ்சோதி அப்பர.

க.அருளானந்தன்
B.A.Dip. in. mass. com (SL)

ஈழத்துத் தமிழரின் தொன்மையினையும் வரலாற்றுத் தொடர்பினையும் வெளிப்படுத்தும் வரலாற்று மூலச்சான்றுகள் மிக அருந்தலாகவே உள்ளன. ஆயினும், தமிழரின் வாழ்வியல், வழிபாடு,, பண்பாட்டு மரபுகளின் தொன்மை நிலைமையையும் மறுத்து விடவும் முடியாது. இன்றைய நிலையில் இருப்பவற்றை பேணுவதற்கும் மூத்த தலைமுறையிடமிருந்து பேணிப் பாதுகாப்பதற்கும் தமிழர்களாகிய நாம் மறந்தே விடுகின்றோம். கி.பி.19ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய பிரதேசங்களில் தமிழரின் வாழ்வியல், வழிபாடு, பண்பாடுகளின் மரபுகள் செழுமை பெற்றிருந்தமை நாம் அறிந்ததே. இப்பிரதேசங்களில் பிறந்து தங்கள் ஒப்பற்ற தொண்டுகளால், தமிழ்மொழிக்கும் இலக்கியத்திற்கும் மட்டுமல்லாது தமிழர் பண்பாட்டு மரபிற்கும் வளம் சேர்த்த தமிழ்ச் சான்றோர்கள் பலர். அவர்கள் காலத்தில் அவர்கள் பெற்ற அனுபவங்கள் பற்பல. இவை பற்றிய பூரண ஆவணப்படுத்தல் அரிதாகவே நூல், ஆய்வுக்கட்டுரை வடிவங்கள் பெற்றுள்ளன.

நூல் வரிசையில், மட்டக்களப்பு வித்துவான் க.செபரத்தினத்தின் "வாழையடி வாழை" (1962), "விபுலானந்த அடிகளாரின் வாழ்வும் வளமும்" (1964), "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" (2002) ஆகிய நூல்களும் இவ் ஆசிரியரின் ஆய்வுக்கட்டுரையாக 1968 வீரகேசரி இதழில் பிரசுரமான "நல்லைநகர் நாவலரும் காரைநகர் வித்தகரும்" எனும் ஆக்கமும் ஆவணப்படுத்தும் முன்

முயற்சியாக எம்மை ஊக்குவித்தன. இந்த வகையில் ஈழத்துத் தமிழ் அரங்கியலின் வரலாற்றினையும் அவ்வரலாற்றின் செந்நெறிகளையும் வெளிப்படுத்தும் சிந்தனை எனது மதிப்புக்குரிய ஆசான் பேராசிரியர் கா.சிவத்தம்பி மூலம் எனக்குள் ஆர்வத்தை ஏற்படுத்தியது. இந்த வழியில் ஈழத்து தமிழ் அரங்கியல் வரலாற்றில் சுவடுகள் பதிந்த அரங்கியற்துறைச் சான்றோர்களைத் தொடர்பு கொண்டேன். இச்சான்றோர்களின் ஆற்றல்களையும், அவர்கள் சார்ந்த அரங்கியல் வடிவங்களையும், அவர்கள் அறிந்த அரங்கியல் சார்ந்த தலைமுறை வரலாற்றையும் அறியும் வாய்ப்புக் கிட்டியது. இச்சான்றோர்களின் வாழ்வியலின் துன்ப துயரங்களையும் அவர்களின் சேவைக்குரிய போற்றுதல் பாராட்டுதல் இன்மையையும் உள்ளபடி அறிய முடிந்தமை எனக்குப் பெரும் ஏக்கத்தை தோற்றுவித்து வருகின்றது.

எனது தேடல் ஆவணமாக "அரங்க ஆற்றுகைகளும் ஆய்வு வழிகாட்டியும்" எனும் ஈழத்துத் தமிழ் அரங்கியல் நூலை 2003இல் வெளிப்படுத்தியுள்ளேன். மேலும் பல தகவல்களைத் தொகுத்து நூலாக்கும் முயற்சிக்கு முயலுகின்றேன். அந்த முயற்சியில் ஏற்பட்ட பின்னடைவு வடமராட்சிப் பிரதேசத்தின் மூத்த அரங்கியலாளர் "பரஞ்சோதி அப்பாவின்" இழப்பு. வடமராட்சிப் பிரதேசத்தில் நிகழ்வுற்ற நிகழ்வுறும் அரங்கியல் கலை வடிவங்களின் வரலாற்று மரபினை அறியவும், தொகுக்கவும், காய்தல், உவத்தல் இன்றி மரபினை அறியவும் தந்துதவிய மூத்த அரங்கியல் கலைச்சான்றோர் துன்னையூர் "கலைஞானகேசரி" அமரர் கணபதிப்பிள்ளை பரஞ்சோதி ஆவார். இப்பெரியோரின் நேர்மையும், நடுநிலையும், அனுபவமும், ஆளுமையும் எனக்குக் கிடைத்த தகவல்களின் பெருமைக்குச் சான்றாகும். தன்னை முதன்மைப்படுத்தாது வடமராட்சிப் பிரதேசத்தில் 1910-1915கள் முதல் நிகழ்வுற்று வந்த நாட்டைப் பண் கூத்துக்கள் முதல் இன்றைய இசை நாடகங்கள் நவீன நாடக அரங்குகள் பற்றித் தொடர் வரலாற்றின் கலைப்பாரம்பரியத்தை அறியும் கலைக் களஞ்சியமாக விளங்கினார். இந்த அரங்குகளில் கலைச்சுவடுகள் பதித்துள்ள ஈழத்து இசை நாடக முன்னோடி நெல்லியடித் தவசர், புலோலி-திகிரி அண்ணாவியார் தாமு, அவர் வழிவரும்

திரு.கிருஷ்ணபிள்ளை சிவக்கொழுந்து, தும்பளைச் செல்லர் (அனுமான் பாத்திரம் ஏற்றவர் இராமாயணக் கூத்தில்) அல்வாய் அண்ணாவிமார்களான ச.தம்பிஐயா, பெரியபொடி, குண்டுமணி (மயானகாண்டத்தைக் கூத்து வடிவில் நடித்தும் பழக்கியும் வந்தவர்கள்), திரு.மா.அனந்தராஜன், கரவெட்டி "சுபத்திரை" ஆழ்வார் (எம்.வி.கிருஷ்ணாழ்வார்), "ஐயா மாமா" கந்தவனம், கே.வி.நற்குணம், பொலிகண்டி சதாசிவம், திரு.வே.க.பாலசிங்கம், துன்னாலை "பபூன்" எம்.ஏ.சிதம்பரப்பிள்ளை, கண்டியரசன் எம்.ஏ.மகாலிங்கம், திரு.அ.தட்சணாமூர்த்தி ஐயர், திரு. தம்பையா ஐயர், ஸ்திரிபாட் நடிகர் திரு.த.கண்ணதாசக்குருக்கள், புலோலி திரு.க.ப.பரராஜசிங்கம் (பப்பா), மாதனை திரு.ந.சிவசுப்பிரமணியம் (சிவப்பு), அமரர் மகாலிங்கம், திரு.க.கணபதிப்பிள்ளை (சின்னமணி), சிந்துநடைக்கூத்து நடிகர், பாடகர் கற்கோவளம் மு.தணிகாசலம் ஆகிய அரங்கியற் கலைக் கலைஞர்களின் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பாசிரியராக விளங்கியவர் எங்கள் "கலைஞானகேசரி" க.பரஞ்சோதி.

வல்லிபுரக்கோயில், நெல்லண்டைபத்திரகாளி அம்மன் கோயில், புற்றளைப் பிள்ளையார் கோயில், கோவிற்கடவை ஆகிய இடங்களில் நிகழ்வுற்ற கூத்துக்களரிகள், கூத்து வடிவங்கள், அண்ணாவி மரபில் வந்த நாட்டைப் பண் கூத்து, சிந்து நடைக்கூத்து, கூத்து வடிவிலான மயான காண்டம், இன்றுவரை நிகழும் இசைநாடக உள்ளடக்கங்கள், தனிச்சிறப்புக்கள் பொதுப்பண்புகளை இராகம், தாளம், அபிநயம்; அரங்க நிர்மாணம் என்பவற்றை தான் அனுபவித்துக் கூறுவதோடு மட்டுமன்றி இன்றைய தலைமுறையினரான எம்மையும் தமது தகவல் தரும் பண்பால், செயற்பாடுகளால், பாடல்களால் அக்கலை வடிவங்களின் காலச்சூழலுக்கு அழைத்துச் செல்லும் ஆளுமை மிக்க ஆற்றல் உள்ள கலைஞனாக அவரைக் காணுகின்றோம். இந்தப் பண்புடைய கலைஞர்கள் வெகு அருமையாகவே வடமராட்சிப் பிரதேசத்தில் காணப்படுகின்றனர்.

இசை நாடக மரபின் வரலாற்றை, ஈழத்து இசைநாடக முன்னோடி தவசர் முதல் இற்றைவரை உள்ள காலத்தை நான்கு தலைமுறைக் காலமாக வகுத்து தெளிவுபடுத்திய கலைமரபு வரலாற்று ஆசானாக தனது அனுபவ முத்திரைகளைத் திரட்டித் தந்த பெருமைக்குரியவர். எனக்கு மட்டுமல்ல தமிழ் நாடக அரங்கியல் கலையை பல்கலைக்கழகத்தில் கற்பவர்களிற்கும், பட்டப்பின் படிப்பு ஆய்வுக் கல்வி மாணவர்களிற்கும் இப்பெரியார் உதவியுள்ளார்.

எங்கள் பரஞ்சோதி அப்பாவிடம் பன்முக ஆளுமையையும், உள்ளதை உள்ளபடி கூறுகின்ற நடப்பியல் பண்பையும், வயது வேறுபாடின்றி சமநிலை மனித நேயத்துடன் தோழமையாகப் பழகும் பண்பையும் நான் கற்றுக்கொள்ள முடிந்ததை பெரும் பேறாகக் கருதுகின்றேன். நடிகராக, பௌராணிகனாக, அரங்கியலாளராக, மனிதாபிமானியாக விளங்கியதோடு "நக்கீரத் தன்மை" மிக்கவராகவும் விளங்கிய உன்னதமான கலைச்சான்றோர். இவருக்குப் பெருமை, சிறப்பு உரிய காலத்தில் வழங்கப்படாமை எமது பிரதேசம் செய்த தவக்குறை என்றே கூறுகின்றேன்.

மீண்டும் ஒரு சோகம் : அமரர் கலைஞானகேசரி க.பரஞ்சோதி அவர்களின் மறைவு தந்த சில மனப்பதிவுகள்

கலாநிதி த.கலாமணி,
கல்வியியற்துறை,
யாழ்பல்கலைக்கழகம்.

'நாடகமும் அரங்கியலும்' இன்று நன்கு 'பேசப்படும்' துறை. இத்துறை சார்ந்த செய்திகள், தகவல்கள், விமர்சனங்கள் இன்று பல்கிப் பெருகுவது கண்கூடு. மூத்த கலைஞர்களுக்கு இன்று வழங்கப்படும் கௌரவமும் அங்கீகாரமும் அவர்களைப் பெருமிதம் கொள்ள வைக்கின்றது. தமது வாழ்வின் சில பக்கங்களைப் புரட்டிப் பார்த்து சுகம் காணும் நிலையில் வாழ்வு அவர்களுக்கு அர்த்தமுள்ளதாகின்றது. மரபுக்கலைகளின் வேர்களைத் தேடும் இளம் ஆய்வாளர்களின் கலை உள்ளங்களைக் காணும் தோறும் தமது கலைவாழ்வின் மனப்பதிவுகளை நன்கு 'ஒப்புவித்து'விட வேண்டும் என்ற ஆர்வம் இம்மூத்த கலைஞர்களுடனான செவ்விகளில் நன்கு வெளிப்படுகின்றது.

இவை ஒரு புறமிருக்க, மறு புறத்தில், இம்மூத்த கலைஞர்களின் அகவயத்தன்மை கொண்ட 'சுய புராணங்கள்' வரலாறாகுமோ என்ற வினாவும் இவற்றை எவ்வாறு மரபுத்தேடலின் மூலவேர்களாகக் கொள்ள முடியும் என்ற ஐயப்பாடும் எழுந்து, ஆய்வியல் நோக்கில் இம்மூத்த கலைஞர்கள் கூறும் செய்திகளைத் தாங்கிவரும் எழுத்துக்களைப் புறந்தள்ளிவிடும் நிலையும்கூட இன்று வழமையாகிவிட்டது. மேலும், 'சுயபுராணங்களில்' தெரிவிக்கப்படும் கருத்துக்களை அறிவியல் ஆய்வு அடிப்படையில் எவ்வாறு

நம்பகமான தரவுகளாகக் கொள்ளமுடியும் என்ற நிலையில், ஆய்வியல் நோக்கிலன்றி அவற்றை வெறும் செய்திகளாகவே நோக்குகின்ற போக்கும் இன்று நிலைத்துவிட்டது.

ஆனால், காலம் கடந்து மரபுகளின் வேர்களைத்தேடும் பணியில் இந்நிலைமை தவிர்க்க முடியாதது. இப்பணியில் ஈடுபடும் ஒவ்வொருவரும் இந்நிலைமையை எதிர்கொள்ளத்தான் வேண்டும். தாம் மேற்கொள்வது "பண்புசார் உசாவல் (Qualitative Inquiry) என்பதனை எப்போதும் அவர்கள் மனங்கொள்ள வேண்டும். றொபேர்ட் கோல்ஸ் (Robert Coles) எனும் மனோதத்துவவியலாளர், அவ்வாறாக வருவதற்கு முயற்சித்துக்கொண்டிருந்த ஆரம்ப காலத்தில் அவர் எதிர்கொண்ட இடர்ப்பாட்டைக்கண்டு அவரின் மேற்பார்வையாளர் கூறிய அறிவுரை இங்கு நோக்கத்தக்கது:

"எங்களைக் காணவரும் மக்கள் தங்களுடைய கதைகளை (Stories) எங்களிடம் கொண்டு வருகிறார்கள். தமது வாழ்க்கையின் உண்மைகளை நாம் நன்கு விளங்கிக்கொள்ளக்கூடிய அளவுக்கு அவற்றை எம்க்குச் சொல்லிக்கொள்வதாகவே அவர்கள் நம்புகிறார்கள். தமது கதைகளை எவ்வாறு சரியாக வியாக்கியானஞ் செய்ய வேண்டும் என்பதை நாம் நன்கு அறிந்தவர்கள் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே அவர்கள் அவற்றைக் கூறுகின்றார்கள். நாம் அவர்களது சொந்தக் கதைகளையே கேட்கின்றோம் என்பதை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்."

மனோதத்துவ நிபுணர்களும் ஆய்வாளர்களும் தாம் கேட்கும் கதைகளிலிருந்து கொள்ளும் பயன்பாடுகள் வெவ்வேறாயினும் இக்கதைகளை நன்கு செவிமடுக்க வேண்டும் என்பது இருசாராருக்கும் அவசியமானது. குறிப்பாக, பண்பறிநிலை ஆய்வாளர்கள் (Qualitative Researchers) தாம் செவிமடுக்கும் தனிமனிதரது கதைகளை (Personal Stories) பகுத்து நோக்கும் முறையில் அவற்றை அர்த்தமுள்ளதாக்குகின்றனர். ஆனால், அகவயமான இக்கதைகளிலிருந்து புறநிலை மெய்ம்மையை

எவ்வாறு கண்டறிய முடியும் என்பதே இன்று பலரிடத்து எழும் வினாவாகும். இதன் விளைவாகவே இத்தனிமனிதரது கதைகளில் அதிக அக்கறைப்படாது அவற்றைச் 'சுயபுராணங்கள்' என்று புறந்தள்ளும் நிலையும் உருவாகியுள்ளது. ஆயினும், இத்தனிமனிதரது கதைகளின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதற்கு ஆய்வு முறையியல் பற்றிய விளக்கம் அவசியமாகிறது.

ஆய்வு முறையியல் இன்று இருபெரும் பிரிவுகளாக நோக்கப்படுகின்றது. அளவறிநிலை ஆய்வு (Quantitative Research), பண்பறி நிலை ஆய்வு (Qualitative Research) என அமையும் இவ்விரு பிரிவுகளும் எடுகோள், நோக்கம், அணுகுமுறை, ஆய்வாளர் வகிபங்கு போன்ற பல்வேறு அம்சங்களிலும் தம்முள் வேறுபடுவன. அளவறிநிலை ஆய்வானது, 'சமூக நேர்வுகள் புறநிலை மெய்ம்மை உடையன' என்ற சேவையையும் எடுகோளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு பொதுமை காணலையும் எதிர்வு கூறலையும். கூறலையும் காரண-காரிண விளக்கமளித்தலையும் நோக்கங்களாகக் கொண்டது. ஆனால், 'மெய்ம்மை என்பது சமூகத்தால் கட்டி எழுப்பப்படுவது' என்ற எடுகோளின் அடிப்படையில் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த, சிக்கலான சமூக மெய்ம்மைகளை அவற்றின் குழமைவுப் பின்னணியில் விளங்கி அவற்றை வியாக்கியானஞ் செய்வதை நோக்கமாகக் கொண்டது பண்பறிநிலை ஆய்வாகும்.

சமூக யதார்த்தம் கொண்ட, சிக்கலானதும் என்றும் மாறிக்கொண்டிருப்பதுமான உலகினைப் படம்பிடித்துக்காட்ட முனையும் பண்பறிநிலை ஆய்வாளர், ஆய்வில் பங்குகொள்வோர் (Participants) காணும் பல்வேறு தரிசனங்களையும் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். ஆய்வில் பங்குகொள்வோருடனான ஆழமான, நீண்டகால இடைவினைகள் (in-depth, Long - term interactions) பண்பறிநிலை ஆய்வாளன் சமூக மெய்ம்மையின் சிக்கற் தன்மையை நேர்மையான முறையில் விளங்கிக் கொள்ளத் துணை புரியும். அதேவேளை, பல்வேறு பங்குகொள்வோரினால் ஒரு சமூகப்பின்னணியில் கட்டி எழுப்பப்படுகின்ற உலகானது என்றுமே சிக்கல் நிறைந்தது என்பதும்

அச்சிக்கற் தன்மையின் ஒரு சில முடிச்சுக்களையே தமது ஆய்வின் மூலம் அவிழ்த்துக்கொள்ள முடியுமென்பதும் பண்பறிநிலை ஆய்வாளர் ஒவ்வொருவருமே கவனத்திற் கொள்ள வேண்டியன. 'றோசா என்பதை அதன் இலத்தீன் பெயரினால் மாத்திரம் அறிந்து, அதன் நறுமணத்தை அறிந்து கொள்ளாதிருப்பது றோசாவின் அர்த்தத்தைச் சரியாக விளங்கிக் கொள்ளாமையையே சுட்டும்' என்ற ஐஸ்னரின் (Eisner) கூற்றும் பண்பறிநிலை ஆய்வின் செல்நெறியினை வலியுறுத்துவதாகும்.

பண்பறிநிலை ஆய்வு குறித்த உசாவல் தரும் விழிப்புணர்வே அமரர் கலைஞானகேசரி கணபதிப்பிள்ளை பரஞ்சோதி அவர்களின் கலை உலக அனுபவங்கள் குறித்த பதிவுகளுக்கான இத்தேடலிலும் மேலோங்குகிறது. எண்பது ஆண்டுகள் இம்மண்ணில் கலை ஈடுபாடு கொண்டு வாழ்ந்து மறைந்த ஒரு கலைஞன் பற்றிய பதிவுகள் அவதானமாகவும் மிகவும் நிதானமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நாம் மறத்தலாகாது.

இசைநாடக மரபின் வேர்களைத்தேடும் பணியில் கலைஞானகேசரி பரஞ்சோதி அவர்களின் வாழ்வின் முக்கியத்துவம் பல்வேறு அம்சங்களில் நோக்கப்படத்தக்கது:

1. கலைக்குடும்பத்திற் பிறந்து கலைச்சூழலில் வாழ்ந்து வந்தமை (கலைஞான கேசரியின் மாமன் கந்தையா வடமராட்சியின் சிறந்த இசை நாடகக் கலைஞர்)
2. நான்கு தலைமுறைக் கலைஞர்களுடன் வாழும் ஆயுள் பெற்றமை.
3. பல்வேறு இசை நாடகங்களில் பிரதம பாத்திரங்களில் மாத்திரமன்றி பல்வேறு துணைப் பாத்திரங்களிலும் பங்கேற்றமை.
4. ஒரே நாடகத்திலேயே பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு பாத்திரங்களை ஏற்ற வகையில் பல்வேறு இசை நாடகப் பாத்திரங்களின் குணவியல்புகளை வெளிக்கொணரும் வாய்ப்புப்பெற்றமை.

5. வடமராட்சியின் புகழ்பெற்ற அண்ணாவிமார்களான தாமு (திகிரி), ச.தம்பிஜயா(அல்வாய்), சுபத்திரை ஆழ்வார் (கரவெட்டி), பெரியபொடி (கரவெட்டி), 'ஜயாமாமா' கந்தவனம் (நெல்லியடி) ஆகியோருடன் தொடர்பு கொண்டிருந்தமை.

6. அன்றைய சுபத்திரை ஆழ்வார் முதல் இன்றைய இரத்தினகுமார் ஈறாக ஒரு நீண்ட பட்டியலில் அடங்கும் பல்வேறு கலைஞர்களுடன் இசை நாடகங்களில் இணைந்து நடித்தமை.

7. இசை நாடகங்களை நெறியாள்கை செய்தமை

8. இசை நாடகப் பிரதிகள் பலவற்றை உருவாக்கிய வேளைகளில் பிரம்மஶ்ரீ அ.தெட்சணாமூர்த்தி ஐயா அவர்களுடன் இணைந்து பங்களிப்புச் செய்தமை.

9. புராண படனத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தமை.

10. தனக்குப் பின்னால் கலை ஈடுபாடு கொண்ட வாரிசுகளை உருவாக்கியுள்ளமை (கலைஞானகேசரியின் மகனான 'பப்பா' க.ப.பரராஜசிங்கம் அவர்கள் நாடறிந்த ஓர் இசைநாடகக் கலைஞர், பேரனான ப.ரதீஸ் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளராக விளங்குவதோடு இசைநாடக மரபு குறித்த ஆய்வுகளிலும் மிகுந்த ஆர்வம் காட்டி வருபவர்)

11. 2001ஆம் ஆண்டு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சினால் 'கலைஞான கேசரி' எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.

இசை நாடக மரபு குறித்த தேடலில் கலைஞானகேசரி பரஞ்சோதி அவர்களின் வாழ்வியல் அம்சங்களின் பங்களிப்பை உணர்ந்துகொள்வதற்கு கலைஞானகேசரியின் வாய்மொழி மூலப்பதிவுகள் இன்றியமையாதவை. இந்த வகையில் அண்மையில் வெளியிடப்பட்ட க.அருளானந்தன் அவர்களின் 'அரங்க ஆற்றுகைகளும் ஆய்வு வழிகாட்டியும்' என்ற நூலில் இடம்பெறும் கலைஞானகேசரியின் செவ்வியும் அண்மையில் கலைஞானகேசரியின் மறைவுக்கு முன்னர் அவருடன் நாகாஸ்திரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட செவ்வியும் பல செய்திகளையும்

தகவல்களையும் கொண்டிருப்பதோடு, இசைநாடக மரபு குறித்த பண்பறிநிலை ஆய்வின் தரவு மூலங்களாகவும் இனங்காட்டுகின்றன.

'மரபுக் கூத்துகள் அவற்றுக்குரிய வடிவத்தில் பேணப்படவேண்டும். அப்பேணுகைக்குரிய வாய்ப்புகளும் தொழில்நுட்ப வசதிகளும் பெருகியுள்ள இன்றைய கணினியுகத்தில் இக்கலை மரபுகளை அழிய விடுவோமாயின் நாளைய தலைமுறைக்கு எதனை விட்டுச் செல்லப்போகிறோம்' என்று கலைஞான கேசரி எழுப்பும் வினா கலைஞானகேசரியின் தீர்க்க தரிசனமான பார்வையின் வெளிப்பாடாகும்.

"திறமைகள் வளரப் பாராட்டுகள் அவசியம். எமக்கெனக் கலைமரபுகள், தனிப்பண்பாடு உள்ள இனமாகிய நாம், இன்றைய கலைஞர்கள், வீரர்களுக்குக் காண்பிக்கும் உற்சாகம், பாராட்டுகள் உண்மையாக இருக்க வேண்டும். திறமையானவர்களைக் கண்டு போலி முகஸ்துதி செய்யாத, கௌரவித்தல், பாராட்டுதல் சமூகக் கடமைகளாகும்" எனக்கூறும் கலைஞானகேசரி இசைநாடக ஆய்வாளர் சிலர் சில கலைஞர்களை இருட்டடிப்புச் செய்கிறார்களேயென நாகாஸ்திரன் சுமத்தும் குற்றச்சாட்டையும் ஏற்றுக்கொள்கிறார். "சில ஆய்வாளர்களிடத்தே காணப்படுகின்ற பக்கச்சார்புத்தன்மை, நேர்மையீனம், அர்ப்பணிப்பின்மை, கடின உழைப்பின்மை போன்ற காரணங்களால் சில கலைஞர்கள் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றார்கள். இது இசைநாடகத்துறைக்கு ஆரோக்கியமான ஒன்றன்று. இது பற்றி நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. காலம் பேசும்" எனவும் குறிப்பிடும் கலைஞானகேசரி, இசைநாடக மரபு குறித்த வரலாறு திரிந்து போனமைக்கு சில ஆய்வாளர்கள் மாத்திரமன்றி சில கலைஞர்களும் காரணமே என்றும் கூறுகிறார். தம்மைப்பற்றியே கலைஉலகம் பேச வேண்டும் என்ற எண்ணமும் தம்மைவிடப் பிறர் முன்னேறக்கூடாது என்ற சிந்தனையும் தம்மிடமுள்ள சில ஆற்றல்கள் / விடயங்கள் மற்றவர்களைச் சென்றடைந்தால் அவர்களும் உயர்ந்துவிடுவார்கள் என்ற மனப்பாங்கும்தான் கலைமுதுசொத்தின் ஒரு பகுதியினை நாம் இழக்கக் காரணமாகிறது என வன்மையாகக் கண்டிக்கிறார்.

கலைஞானகேசரி பரஞ்சோதி அவர்களிடத்துக் காணப்படும் கலைநேர்மை அவரின் செவ்விகளில் பல இடங்களில் வெளிப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இன்று பாராட்டுப்பெறும் கலைஞர்கள் சிலர் தமது கலைத்துறை வளர்ச்சிக்கு உண்மையான பங்களிப்புச் செய்தோரைக் குறிப்பிடாது தமது உறவு சார்ந்த கலைஞர்கள் ஒரு சிலரையே தமது வழிகாட்டிகளாக விதந்து சொல்வது போலன்றி, தமது கலைத்துறை ஈடுபாட்டுக்கும் வளர்ச்சிக்குமான காரணஸ்தர்களை கலைஞானகேசரி நன்றியுடன் நினைவு கூருகிறார். எனது இளமையிலேயே இசைநாடகக் கலையில் நாட்டமும் ஈடுபாடும் கொண்டேன். இதற்கு எனது குடும்பத்தினரின் இசைநாடக ஆர்வமே காரணம். வடமராட்சியின் புகழ்பெற்ற அண்ணாவிமார்களான தாமு (திகிரி), ச.தம்பிஐயா (அல்வாய்), சுபத்திரை ஆழ்வார் (கரவெட்டி), பெரியபொடி (கரவெட்டி), 'ஐயா மாமா' கந்தவனம் (நெல்லியடி) ஆகியோரின் இசைநாடக நடிப்பாற்றல்களும் அவர்களுடன் கொண்ட தொடர்புகளும் எனக்கு இசைநாடகத்துறையில் இடம்தேடித்தந்தன" என்ற வரிகளிலும் "இன்று பிரதான பாத்திரங்களை ஏற்பவர்கள் துணைப்பாத்திரங்களை ஏற்க விரும்புவதில்லை. எங்களுடைய பாரம்பரியம் வித்தியாசமானது..... நானும் கதாநாயகனாயும் நடித்திருக்கிறேன்; துணைப் பாத்திரங்களையும் ஏற்றிருக்கிறேன். பபூனாகவும் தோன்றியிருக்கிறேன்..... ஏற்கும் பாத்திரத்திலல்ல நடிகனுக்குச் சிறப்பு; ஏற்கும் பாத்திரத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறான் என்பதுதான் சிறப்பு" என்ற வரிகளிலும் கலைஞானகேசரியின் கலைநேர்மையே தரிசனமாகின்றது.

இசைநாடகத்தின் செல்நெறிப்போக்கில் அது 'ஸ்பெஷல்' நாடகமாக உருமாற்றம் பெற்றமையின் விளைவுகளைக் கோடிட்டுக் காட்டுகின்ற அரிய சில செய்திகளையும் கலைஞான கேசரி தமது செவ்விகளில் குறிப்பிடத்தவறவில்லை. "நடிகர்களிடம் போட்டி, பொறாமை இருந்தன. சிலவேளைகளில் இவை காரணமாகச் சிறந்த வகையில் தனியாற்றல் வெளிப்பட்ட நிலைமைகளும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்" எனக்கலைஞானகேசரி குறிப்பிடுவது 'ஸ்பெஷல்' நாடக உருவாக்கத்தின் தாக்கம் பற்றியே ஆகும்.

"கலைஞர்களிடையே ஒரு போட்டி மனப்பான்மையை உருவாக்கி அவர்தம் திறமையை எல்லாம் வெளிப்படச்செய்து நுகர்ந்து கொண்டிருந்த ரசிகர்களின் போக்கினால் நாடகமேடை தர்க்கமேடையாக மாறியது. நாடகப் பண்பிற்கு அமைவாக மொழி ஆராய்ச்சியும் இலக்கண ஆராய்ச்சியும்கூட இத்தர்க்கங்களின்போது இடம்பெறலாயின" என கலைஞர் ச.தம்பிஐயா அவர்கள் 'ஸ்பெஷல்' நாடக அரங்கு பற்றி ஓரிடத்தில் குறிப்பிட்டிருப்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது. கலைஞர் ச.தம்பிஐயாவும் கலைஞானகேசரி பரஞ்சோதியும் கூறும் இச்செய்திகள் 'ஸ்பெஷல்' நாடகப்போக்கின் நல்லம்சங்களையே சுட்டுகின்றன.

'ஸ்பெஷல்' நாடக அரங்கு என்ற பெயரையே இசைநாடக அரங்குக்கான பெயராகப் பயன்படுத்தும் போக்கு இன்று சில நாடக ஆய்வாளர்களிடையே காணப்படினும் 'ஸ்பெஷல்' நாடக அரங்கு என்பது காரணப்பெயருடன் கூடிய இசைநாடக அரங்கின் ஒரு வகையே என்பதை நிறுவும் முக்கியமான ஒரு செய்தியும் கலைஞானகேசரியின் செவ்வியில் காணக்கிடக்கிறது. அன்றைய நாளில் ஸ்பெஷல் நாடக உருவாக்கம் இரு வகைகளில் இடம்பெற்றது. ஒரே நாடகத்தில் இசைநாடகத் துறையில் சிறப்புப்பெற்று விளங்கிய கலைஞர்கள் இணைந்து தமக்குத் தெரிந்த புராண, இதிகாசக் கதையை நடித்த முறைமை ஒரு வகை; ஒரே நாடகக்கதையையே ஒரே மேடையில் வெவ்வேறு நாடகக் குழுவினர் தனித்தனியாக நடித்த முறைமை மற்றொருவகை, கலைஞர் ச.தம்பிஐயாவும் நடிகமணி வைரமுத்துவும் ஆரம்ப காலங்களில் ஒரே நாடகக் குழுவாக ஒன்றாக இணைந்து நடித்துவந்தவர்கள். ஆயினும், 1960களில் நடிகமணியின் 'வசந்தகான சபா'வின் உருவாக்கத்தின் பின்னர், இவர்கள் இருவரும் பின்னைய நாட்களில் ஸ்பெஷல் நாடக நடிகர்களாக ஒரே நாடகத்தில் இணைந்தும், ஒரே நாடகக் கதையை ஒரே மேடையில் வெவ்வேறு குழுவினராக நடித்தும் வந்தார்கள். ஒரே நாடகத்தை வெவ்வேறு குழுவினராக நின்று ஒரே மேடையில் இவர்கள் இருவரும் மேடையேற்றிய 'ஸ்பெஷல்' நாடகம் பற்றியே கலைஞானகேசரி தமது செவ்வியில் குறிப்பிடுகின்றார்.

"ஈழத்து இசைநாடக மரபில் தனக்கெனத் தனியான பாணியை உருவாக்கியவரும் தனது தலைமையில் புதிய இசை

நாடகக் கலைஞர் மரபினை உருவாக்கியவருமான அமரர் நடிகமணி வி.வி.வைரமுத்து மயானத்தில் நின்று பாடும் பாடலான 'பிறந்தது மண்மேல்..... என்பதற்குப் பதிலாக அல்வாய் அண்ணாவி தம்பிஐயா தமது மயான காண்ட நாடகத்தில்..... மயானத்தில் அரிச்சந்திரனாக நின்று பாடிய பாடல் :

(பல்லவி)

'ஆதிசிவசங்கரனே அடியேன் இச்சுடலைவர.....'

(அநுபல்லவி)

'பாதிமதி சடையணிந்தே சங்கரனும் பார்வதியும்.....' என அமைந்திருந்தது.

'அரங்க ஆற்றுகைகளும் வழிகாட்டியும்' என்ற நூலில் இடம்பெற்ற கலைஞானகேசரி பரஞ்சோதி அவர்களின் செவ்வியில் காணப்படும் 'ஸ்பெஷல்' நாடக அரங்கு பற்றிய இத்தரவு முன்பு ஆவணப்படுத்தப்படாத ஒன்று. இந்நூல் வெளிவந்து ஒரு சில மாதங்களில் கலைஞானகேசரியை நாம் இழந்தது துர்ப்பாக்கியமே. இசைநாடக மரபு குறித்த பண்பறிவியல் ஆய்வின் சிறந்தவொரு மூலமாக விளங்கியிருக்கக்கூடிய கலைஞானகேசரியின் இரு செவ்விகள் மாத்திரமே எழுத்துருப்பெற்றிருக்கின்றன என்ற வகையில், நாடகமரபு ஆய்வாளர்கள் நன்கு பயன்படுத்தத் தவறிய கலைஞானகேசரியைத் திடீரென இழந்துவிட்டோமே என்றும் இசை நாடக மரபின் மூலவேர்களிலொன்று கருகிவிட்டமையையும் உணருகின்றபோது சோகம் நெஞ்சைப்பிழிகிறது.

கலைஞான கேசரி க.பரஞ்சோதியின் வாழ்க்கைப் பின்புலமும், விழுதுகளும்

கோ.கோகிலரதன்
மாணவன்
கலைப்பீடம்,
யாழ்பல்கலைக்கழகம்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அ·தில்லார்
தோன்றலின் தோன்றாமை நன்று" என்பது வள்ளுவம்.

இதை நடைமுறைப்படுத்தியவர்களில் ஒருவர், யாழ் குடாநாட்டின் தலையாக விளங்குகின்ற வடமராட்சியில், கரவெட்டி - துன்னாலை மிந்திரன் அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட பரஞ்சோதி. இவர் இவ்வூரைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வள்ளியம்மை தம்பதிகளின் ஏக புத்திரன். 1924ஆம் ஆண்டு அடி மாதம் 19ஆம் திகதி கலையுலகம் செழிக்க வந்து பிறந்தார். பரஞ்சோதியாய் இவ் உலகிற்கு வந்தவரைக் கலை உலகம் பல பெயர் கொண்டு அழைத்தது. இவரது கலை வாழ்வின் திறன் கண்டு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு "கலைஞானகேசரி" என அழைத்தது. செம்மை சார் பாடற் தகைமை கண்டு இசையுலகம் 'பாடகர்' என அழைத்தது. அகில இலங்கை இளங்கோ கழகம் இவரது இசை நாடக ஈடுபாடு கண்டு "இசை நாடக இமயம்" என்று அழைத்தது. "புராணபடன பாகவதர்," "அண்ணாவியார்" என அவ்வூர் மக்கள் அன்பாய் அழைத்தனர்.

பரஞ்சோதி தனது ஆரம்பக்கல்வியை (தரம் 5வரையான கல்வியை) துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் பயின்றார். இடைநிலைக் கல்வியை (6ஆம் தரத்திலிருந்து 8ஆம் தரம் வரை) கரவெட்டி திரு இருதயக்கல்லூரியில் பயின்றார். பாடசாலைக் கல்வி

8ஆம் தரத்தோடு நிறைவு பெற்றாலும் மரணத்திற்குச் சில நாட்களுக்கு முன்புவரை பல விடயங்களையும் தேடும் நல்ல மாணவனாக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது பள்ளிப் பருவம் பாடகனாய், நடிகனாய் மிளிர வைத்ததென்றால் மிகையானதொன்றல்ல. உன்னதமான, இலட்சியமயப்படுத்தப்பட்ட கலைக்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்த காலப் பகுதியை இவரது 30ஆவது வயதிலிருந்தே கணிப்பிட முடிகின்றது. கலை இவரோடு கூடப்பிறந்தது. மரபு என்னும் தடத்தில் நின்று தலையெடுத்த கலைஞான கேசரி என்றால் தவறில்லை.

தனது இசை நாடக வளர்ச்சியில் இருவரை எப்பொழுதுமே நினைத்துக் கொள்வார். ஒருவர் தனது தந்தையார் கந்தப்பர் கணபதிப்பிள்ளை, மற்றவர் மாமனார் கந்தையா (மனைவியின் தந்தை) இந்தக் கந்தையா கோவலன் கண்ணகி நாடகத்தில் கோவலன் பாத்திரம் ஏற்பதில் பிரசித்தி பெற்றவர். 30 வயது வரை கலையுலகிற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்காமைக்கான காரணம் இவரது தொழிலாக இருந்திருக்கலாம். ஆரம்பத்தில் பிரித்தானிய கடற்படை அதிகாரியாகவும், பின்னர் திரையரங்க முகாமையாளராகவும் கடமையாற்றியவர். பின்னர் இவற்றில் நின்று நீங்கி ஊரிலே விவசாயம் செய்யலானார். இதனால் தன்னை முழுமையாக கலைத்துறைக்கு அர்ப்பணிக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. இவரைப் பொறுத்த வரையிலே "கலை கலைக்காகவே விலைக்காக அல்ல" என்ற குறிக்கோள் உடையவர். கலை விலை போவதைக் கடுமையாக விமர்சித்தார். இவ்விடத்தில் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் கூற்று மனம் கொள்ளத்தக்கது.

"19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சமயத்துறை, கல்வித்துறை, கலைத்துறை, ஆகியவற்றில் ஈழத் தமிழர்கள் தனியிடம் பெற்றிருந்தனர். இரவல் குரல் முறைகளும், மின்சார சாலங்களும் பாதிக்காத காலமது. பெயருக்கும், புகழிற்கும், பணத்திற்கும், பதவிக்கும், வயிற்றுப் பிழைப்பிற்கும் கலையை விலைபோக விற்காத காலமது. கலை வாழ்வின் முன்னேற்றத்திற்கு யாழ்ப்பாணம் அருந்தொண்டாற்றிய

காலமது." வித்தியானந்தன் கூறும் காலப்பகுதியில் வாழ்ந்தவரே பரஞ்சோதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் தன்னுடைய 21ஆவது வயதிலே கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியாகிய சரஸ்வதி என்பவரை வாழ்க்கைத் துணைநலமாகக் கொண்டார். இவர்களுக்கு நான்கு ஆண்பிள்ளைகளும், இரண்டு பெண்பிள்ளைகளும் உளர். பரராஜசிங்கம், சிவராஜசிங்கம், தனபாலசிங்கம், கமலகுமாரி, தெய்வேந்திரராஜா, வசந்தகுமாரி என்னும் அறுவருமே இவர்கள் பிள்ளைகள், இவர்கள் முறையே பரமேஸ்வரி, பாய்க்கியம், ஸ்ரீமதிதேவி, மனோகரன், சுமதி, கதிரவேற்பிள்ளை ஆகியோரை மணம் செய்து கொண்டனர். தனது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவருமே தன்னுடைய வளர்ச்சியில் அக்கறை உடையவர்கள் என்று எப்பொழுதுமே பெருமையாகக் கூறிக் கொள்ளுவார்.

இவருடைய பிள்ளைகள் கலை இலக்கிய ஈடுபாடு உடையவர்கள். இவரது மூத்த மகன் பரராஜசிங்கம் (பப்பா) தந்தையின் கலைநிலை சொல்லப் பிறந்தவர். அகில இலங்கையின் பல பாகங்களிற்குச் சென்று கலைநிலை வெளிப்பாடுகளை அளிக்கை செய்து வருபவர். நாடகச் சக்கரவர்த்தி, இசைநாடக நவரசக் கலைமணி, கலைக்குரிசில் போன்ற விருதுகளைப் பெற்று இசை நாடகத்துறையில் உச்ச நிலையில் இருப்பவர். இவருடைய இரண்டாவது மகன் சிவராஜசிங்கம் இசைநாடக மேடைகளைக் கண்டவர். தந்தையினதும், தனது அண்ணனினதும் கலைப் பயணத்திற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் அரும்பணியாற்றியவர், ஆற்றிக் கொண்டிருப்பவர். மூன்றாவது மகன் தனபாலசிங்கமும் தந்தை பெயர் சொல்லப் பிறந்தவர்தான். நாடக மேடைகளை அலங்கரித்தவர். இன்று புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அங்கே எமது கலை, இலக்கியங்களைப் பேண வேண்டும் என்ற மிகுந்த அக்கறை உடையவர். இளையமகன் தெய்வேந்திரராஜா, இசைநாடகத் துறையிலே ஒளிர்ந்து விளங்குவார் என்று பரஞ்சோதி நம்பிய இன்னொரு மகன். பாஞ்சாலி சபதத்திலே பரராஜசிங்கம் துரியோதனனாகவும், தெய்வேந்திரராஜா அருச்சுனன்

ஆகவும் தோன்றும்போது மிகவும் அற்புதமாக இருக்குமாம். "இவன் தந்தை என்னோற்றான் கொல்" என்னும் சொல் மெய்ப்பித்திருக்குமாம். சந்தர்ப்பச் சூழ்நிலையால் இன்று கனடாவில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் இசை, நாடகத் துறைகளுக்கு அரும் பங்காற்றி வருவதை அறிகின்றோம். நடிகனாய், பாடகனாய், தன்னாலான பணியை ஆற்றி வருவதை அறிந்து மகிழ்கிறோம்.

கமலகுமாரி, வசந்தகுமாரி என்னும் இரண்டு பெண்பிள்ளை களும் கலை, இலக்கிய ஆர்வம் உயைவர்கள் வசந்த குமாரியும் நாடக மேடைகளைக் கண்டவர். இன்றும் தான் கற்பிக்கின்ற மாணவர்களுக்கு நாடகங்களை எல்லாம் பழக்கி மேடையேற்றி வருகின்றார்.

பரஞ்சோதியின் மூத்த மருமகன் மனோகரன் (ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்) நாட்டாரியற்றுறையின் காத்திரமான ஆய்வாளர்களில் ஒருவராக விளங்குகின்றார், இத்துறைகள் சார்ந்த ஆழமான தேடல்களையும், ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகின்றார். இவரது வெளிப்பாடுகளில் ஒன்று "கிராமிய வழிபாடு" என்னும் நூலாகும்.

பரஞ்சோதிக்கு 17 பேரப்பிள்ளைகள் ரதீஸ், றமேஸ், றாதிகா, கார்த்திகா, கீர்த்திகா, தர்ஷன், தனுஷா, தரணியா, கோசலை, குந்தவி, வானதி, ரீனா, ரீமோத்தி, அபிகெல், அருண்குமார், அருண்றாம், அருண்பிரசாந் என்னும் பதினெழுவருமாம். இவர்களும் கலை, இலக்கிய ஈடுபாடுடையவர்கள். மூத்த பேரன் பரா. ரதீஸ் (தற்காலிக விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்). நடிகனாய், ஒப்பனையாளனாய், விமர்சகனாய், நாடக எழுத்தாளனாய், பேச்சாளானாய், நாடக நாட்டாரியல்துறை ஆய்வாளனாய் தன்னால் இயன்ற பணியை கலை, இலக்கிய உலகிற்கு ஆற்றி வருகின்றார். இவரது சகோதரன் பரா. றமேஸ் தனது தந்தையினதும், பாட்டனினதும் செம்மையான கலைஞானம் கைவரப் பெற்றவர். இவரது கன்னி இசை நாடக மேடையாகிய பாஞ்சாலி சபதத்தில் அருச்சுனன் என்ற பாத்திரம் ஏற்று நடித்ததன் மூலம் "குட்டிப்பாப்பா" என்ற சிறப்பையும், பாராட்டையும் பெற்றவர்.

பரஞ்சோதியின் இசைநாடகத் தடம் இன்னொரு தலைமுறைக்கு நின்று நிலைக்கும் என்பதை நிரூபித்தவர்.

தனுஷா புலம் பெயர்ந்து, தான் வாழும் ஜேர்மனி நாட்டில் தன்னுடைய பாரம்பரிய நாட்டியத்தை வெளிப்படுத்தி, அந்த நாட்டு மக்களினுடைய உள்ளங்களில் இடம் பிடித்து இருப்பது குறிப்பிடத்தக்கது. கொழும்புப் பல்கலைக்கழகச் சட்டத்துறையின் புகுமுக மாணவியாகிய கோசலை கலை இலக்கியத் துறையில் ஆர்வமும், ஈடுபாடும், உடையவர். சிறந்த பேச்சாளர். பேரன் வழியில் நின்று கலைகளைப் பேணவேண்டும், என்பதில் மிகுந்த அக்கறை உடையவர். இவரது சகோதரி குந்தவி சிறந்த கலைஞருக்குரிய தன்மைகளைக் கொண்டவர். இளம் கவிஞரும் கூட. இன்னொரு பேரனாகிய அருண்குமார் சின்ன வயதிலேயே பேச்சு, நாடகம், போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாடு காட்டி வருகின்றார். றாதிகா, கார்த்திகா, கீர்த்திகா, தர்ஷன், ரீனா, வானதி, அருண்றாம், தரணியா, அருண் பிரசாந், ரீமோத்தி, அபிகெல் முதலிய ஏனைய பேரப்பிள்ளைகளும் கலையார்வம் உடையவர்கள்தான்.

கலைஞரின் விழுதுகளாக அவரது குடும்பத்தாரை மட்டும் மையப்படுத்துவது தவறாகும். இவரது நல்ல வழிகாட்டலின் பெயரிலும், ஆலோசனையின் பெயரிலும் பல கலைஞர்கள் தோன்றியும், புத்துயிர்ப்புப் பெற்றும் இருந்திருக்கிறார்கள். இருக்கிறார்கள் என்று கூறினால் மிகையாகாது. இவரது ஆற்றுகை அரங்குகளில் இவரோடு கூடவே சங்கமித்து அவரை முந்தி கலையுலகைத் துறந்துவிட்ட கலைஞர்களாக நாம் இருவரைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். வடிவேலு - சம்பந்தன் (துன்னாலை) இவர் 'சிலம்புச் செல்வி' என்ற நாடகத்தில் கண்ணகி என்ற பாத்திரமேற்று நடித்தார். இதன் மூலம் சிறப்புப் பெற்றார். சுப்பிரமணியம்-தங்கத்துரை (துன்னாலை). இவர் சிலம்புச் செல்வி என்னும் நாடகத்தில் மாதவி என்ற பாத்திரம் ஏற்று நடித்தார். இதன் மூலம் சிறப்பான இடத்தினைப் பெற்றுக் கொண்டார். இவர்கள் இந்நாடகம் தவிர ஸ்ரீவள்ளி என்னும் இசை நாடகத்தின் மூலமும் தமக்கெனத் தனியான ஒரு இடத்தினை ஏற்படுத்திக் கொண்டவர்கள். மேற்குறிப்பிட்டவர்களைவிட கலைஞானகேசரியோடு கூட நடித்த பலரை நாம் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. தம்பையா

ஐயர் சிலம்புச் செல்வி என்ற இசை நாடகத்தில் பாண்டியனாக நடித்துப் புகழைச் சம்பாதித்தவர். பவளீதர சர்மா இந்நாடகத்தில் இளங்கோவாக நடித்து புகழை ஈட்டியவர். தம்பையா ஐயரின் மகனாகிய கண்ணதாசக் குருக்கள் இவரோடு இணைந்து பெண்பாத்திரங்களை ஏற்று நடித்துத் தனக்கென தனிப் பெயர் பெற்றவர். பரஞ்சோதியின் மைத்துனனாகிய கமலநாதன் தந்தை வழியிலும், மைத்துனன் வழியிலும் நின்று மருமக்களோடு சேர்ந்து இசை நாடகத் துறைக்குப் பங்காற்றி வருபவர். பல இசைநாடக மேடையைக் கண்டவர்.

பரஞ்சோதி, அகில இலங்கை இளங்கோ கழகத்தின் ஊடாக இசைநாடகத் துறைக்கு இன்னொரு பரம்பரையை உருவாக்கியவர். இக்கழகத்தின் ஊடாக அவர் வழியிலே வந்தவர்கள் இசை நாடக நடிகர்களாகவும், ஆய்வாளராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த வகையிலே பெ.ஐங்கரன், வே.நந்தகுமார், கோ.கோகிலரதன், பரா. றமேஸ், ம.பகீரதன், செ.உதிஸ்திரன், சி.தனேந்திரன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

கலைஞரின் நிமிர்ந்த நடை, நேரிய பார்வை, நிலத்திலே நீதி தவளும் யார்க்கும் அஞ்சாத சிந்தை, கலைஞான உந்துதல், உதட்டில் புன்னகை, அழகு தமிழ் கொண்டு கரம்கூப்பி வணக்கம் செலுத்துவதில் உள்ள நேர்த்தி போன்றன இவரை எமக்கு நல்ல கலைஞனாய் இனம்காட்டின. இத்தன்மைகளே இந்தியாவிலிருந்து இலங்கை வந்த பாடகர் முதல், நடிகர்வரை எல்லேரையுமே இவர் கவர்ந்திழுப்பதற்குக் காரணங்களாயிற்று எனலாம். இவரோடு சேர்ந்து நடித்தவர்களில் சுபத்திரையாழ்வார் (இலங்கை), சின்னையா தேசிகர் (இந்தியா) ஆகியோரைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

கலைஞான கேசரி 'க.ப' அவர்கள் பாடகனாய், நடிகனாய், அண்ணாவியாராய், புராணபடன புருஷனாய் விளங்கியது மட்டுமன்றி தனக்குப் பின் ஒரு பாரம்பரியத்தை உருவாக்கியவர். இனிவருங் காலத்திலும் ஒரு தலைமுறை உதயமாவதற்கு ஊற்றுக்கண்ணாய், உந்துசக்தியாய், மைல்கல்லாய் விளங்குவார் எனச்சொல்லலாம்.

சைவத்தமிழ்ப் பணியில் ஐயா

ம.கோசலை
மாணவி,
சட்டபீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்.

கால ஓட்டத்தினூடாக நாம் பல வெகுமதிகளைப் பெற்றிருக்கின்ற போதிலும் பல இழப்புக்களைச் சந்திப்பதும் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. அந்த வகையில் அண்மையில் தன் கலை வாழ்வை முடித்துக்கொண்டு, கலைமகளிடத்தே சரண்புகுந்த மூத்த இசை நாடகக் கலைஞர் அமரர் கணபதிப்பிள்ளை பரஞ்சோதி அவர்களுடைய இழப்பு ஈடுசெய்ய முடியாததாகிறது. கலை இலக்கிய உலகிலே தனக்கென தனியானதோர் இடத்தைப் பிடித்துக் கொண்ட என் அன்புக்குரிய ஐயா அவர்களின் இழப்பினால் அவ்விடம் வெறுமை பெற்றிருக்கின்றது. கலை இலக்கிய உலகிலே அவரைத் தவிர வேறு எவராலும் ஈடுசெய்ய முடியாத ஓர் இடத்தை ஐயா எவ்வாறு பெற்றுக் கொண்டார், என்பதை ஆராய்வது இந்த நேரத்தில் சாலப் பொருத்தமானதென்றே நினைக்கிறேன்.

சைவப் பாரம்பரியத்திலே ஊறித் திளைத்திருந்த குடும்பத்திலே பிறந்த ஐயா, இயல்பாகவே சைவப்பணி செய்வதிலே மிகுந்த ஈடுபாடு பெற்று விளங்கினார். ஒரு பௌராணிகனாய்த் தன் சைவப்பணியைத் தொடக்கி வைத்த ஐயா, அது சார்ந்து நின்று செய்த பணிகள் அளப்பரியன. யாழ்ப்பாணக் கலாசாரத்தைக் கந்தபுராண கலாசாரம் என பண்டிதமணி கணபதிப்பிள்ளை கூறுமளவிற்கு புராணபடன மரபு ஈழத்திலே செல்வாக்குப் பெற்றிருக்கின்ற வேளையிலே, புராண மரபின் வளர்ச்சிக்கு ஐயா செய்தபணி பாராட்டத்தக்கது.

கோயில்கள் தோறும் விசேட காலங்களிலே புராண பாராயணம் செய்து பயன் சொல்லும் பணியிலே ஐயா ஈடுபட்டிருந்ததை நானறிவேன். செய்யுட்களை அழகாய் சந்திபிரித்து

இராகத்தோடு அவர் பாடுகின்றபோது கேட்போர் நெஞ்சம் நெகிழ்ந்துருகும். இயல்பாகவே அவர் பெற்றிருந்த இசை அறிவு அதற்கு வழிசமைத்தது.

வடமராட்சிப் பிரதேசத்தின் புகழ்பூத்த பல ஆலயங்களிலே ஐயா தன் சைவப்பணியை மேற்கொண்டிருக்கின்றார். மங்கலகரமான தோற்றத்தோடு அவர் பஞ்சபுராணம் ஓதுகின்றபோது அவ்விடம் தெய்வீகம் பெறுவது தவிர்க்கமுடியாததாகிறது. இத்தகைய சைவம் சார்ந்த பணிகள் மூலம் ஐயா பல இலக்கிய உள்ளங்களது இதயங்களைக் கொள்ளை கொண்டவராக விளங்கினார்.

சைவத்தையும், தமிழையும் தன் இரண்டு கண்களாய் மதித்த ஐயா, சைவத்தைப்போலவே தமிழ்மொழிக்கும் தன்னாலான பங்களிப்பைச் செய்யவிளைந்தார். ஐயாவின் தமிழ்ப்பணி என்று ஆராய்கிறபோது நாடகத் தமிழிற்காய் குறிப்பாக இசை நாடகத்திற்காக, அவர் ஆற்றிய பங்களிப்புக்கள் மனக்கண்ணில் பவனி வருகிறன.

தனது முப்பதாவது வயதில், கலை உலகிற்காய்த் தன்னை முழுமையாய் அர்ப்பணித்த ஐயா, பல்துறைக் கலைஞனாக மிளிர்ந்தார். இசை நாடக நடிகன் என்ற ரீதியில் நோக்குகின்றபோது, பிரசித்தமான பல இசைநாடகங்களிலே நடித்திருக்கின்றார். அரிச்சந்திரா, இலங்கேஸ்வரன், சத்தியவான் சாவித்திரி, கண்டியரசன், ஸ்ரீமுருகவேள், சிலம்புச்செல்வி ஆகியன குறிப்பிடத்தக்கன. ஐயா பெருமளவில் துணைக் கதாபாத்திரங்களை ஏற்று நடித்திருக்கின்ற போதிலும் அப்பாத்திரங்களைப் போல் தன்னை மாற்றியமைத்துக் கொண்ட அவரது நடிப்புத்திறன் அவரைப் பார் போற்ற வைத்தது. இசைநாடக உலகின் புகழ்பூத்த மூத்தகலைஞர்கள் பலரோடு சேர்ந்து நடிக்கின்ற வாய்ப்பு ஐயாவிற்குக் கிடைத்திருக்கின்றது. சுபத்திரை ஆழ்வார், சின்னையா தேசிகர், சந்திரா, மல்லிகாதேவி, கன்கா, இராமலட்சுமி, சீ.ரி.செல்வராஜா, வீ.என்.செல்வராஜா, எம்.ஏ.மகாலிங்கம், கே.வி.நற்குணம், அண்ணாவி கணபதிப்பிள்ளை, ந. சிவசுப்பிரமணியம், பொ.தைரியநாதன், அ. தட்சணாமூர்த்தி ஐயர், வ. செல்வரத்தினம்,

ப.பரராஜசிங்கம், த.கண்ணதாசக்குருக்கள், சரவணபவான், சரவணமுத்து, செ.இரத்தினகுமார் முதலியோருடனான தனது கலைவாழ்வை ஐயா பெருமையோடு நினைவு கூருவார்.

ஒரு நடிகனாக தனது திறமைகளை வெளிப்படுத்திய ஐயா, சிறந்த நெறியாளன் என்ற ரீதியிலும் காத்திரமான பங்களிப்பைச் செய்திருக்கின்றார். தனது சீரிய நெறிப்படுத்தலினால் பல இளைய இசை நாடகக் கலைஞர்களை நாடக உலகிற்குப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். ஐயா நாடக ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கின்றார்.

இவ்வாறாக, தன்னால் முடிந்தவரை இசை நாடக வளர்ச்சிக்காய் பாடுபட்ட ஐயா, தன்னோடு நின்றுவிடாது இசை நாடக உலகிலே தன் பெயர் கூறிவாழ ஒரு தலைமுறையை உருவாக்கியவர். அந்த வகையிலே தனது மூத்தமகன் ப.பரராஜசிங்கத்தை இசைநாடக உலகிற்கு அறிமுகம் செய்து வைத்து, நாடகச் சக்கரவர்த்தி என்கின்ற மகோன்னதமான இடத்தைத் தன் மகன் பெற ஆவனசெய்தார். இவருடைய ஏனைய பிள்ளைகளான ப.சிவராஜசிங்கம், ப.தனபாலசிங்கம், ப.தெய்வேந்திரராஜா ஆகியோரும் இசை நாடகத்துறைக்கு அறிமுகமானவர்கள்தான். ஐயாவின் பேரப்பிள்ளைகள் இசை நாடக ஆய்வாளர்களாகவும் ஆர்வலர்களாகவும் காணப்படுவது ஐயாவின் கலை வாழ்விற்கு மகுடம் சூட்டுவதாக அமைகின்றது.

கலையை தன் உயிராய் நினைத்துப் போற்றிய ஐயா அந்தக் கலையை ஒருபோதும், யாருக்காகவும் விலைபேசியது கிடையாது. இசை நாடகம் என்கின்ற பொக்கிஷத்தை அதன் தூய்மை கெடாது பேணிய பெருமை ஐயாவையும் சாரும். கலை உலகிலே வெற்றிக்கொடி நாட்டிய ஐயா, கலை உலகம் தன்னைப் புறக்கணிக்கும் முன்பதாகவே கலைவாழ்விலிருந்து ஓய்வு பெற்றார். ஆனாலும் அவரது கலைப்பணி வேறுவழிகளில் தொடர்ந்தது.

ஐயாவின் இசைநாடகப்பணி என்கிற ரீதியிலே சிந்திக்கிறபோது நாடகத் தமிழிற்காய் மட்டுமல்லாது இசைத்

தமிழிற்காயும் அவர் ஆற்றிய பங்களிப்பும் புலப்படும். பாடகன், நடிகன், நெறியாளன், நாடக ஆசிரியன் என்கின்ற இத்தனை விடயங்களையும் தாண்டி கவிஞன் என்கின்ற ரீதியிலும் ஐயாவை இனங்கண்டு கொள்ளமுடிகிறது. நாடகமேடைகளிலே சுயமாகக் கவிபுனையும் ஆற்றல் அவருக்குக் கைவரப் பெற்றிருந்தது. அவ்வாறு அவர் பாடிய பாடல்கள் சமுதாய நோக்கும் பொருள் அழகும், இசை நயமும் பெற்று விளங்குகின்றன.

மேற்கூறிய சகல வழிகளிலும் தான் பிறந்த மண்ணுக்குத் தொண்டாற்றிய ஐயாவிற்கு, அவரது நடிப்பாற்றலைப் பாராட்டி இந்து கலாசார அலுவல்கள் அமைச்சினால் 2001ஆம் ஆண்டு "கலைஞான கேசரி" எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. ஐயா விருதுகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு தன் கலைப்பணியைத் தொடரவில்லையாயினும், அவருக்கு வழங்கப்பட்ட விருதானது அவரது நடிப்பாற்றலுக்கும், சமூகச் சிந்தனைக்கும் கிடைத்த கௌரவிப்பாகவே நான் எண்ணுகின்றேன்.

இவ்வாறான மகத்துவம் மிக்க ஒரு கலைஞன் இன்று நம்மிடத்தில் இல்லை. ஆனாலும் அவர் தம் புகழ் மங்காத்தன்மை பெற்றுத் தமிழ்பேசும் நல்லுலகம் உள்ளவரை வாழ்வுபெறும்.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்" என்ற வள்ளுவன் கூற்றுக்கமைய ஐயா இவ்வுலகில் விட்டுச் சென்ற கலைப்பரம்பரை அவரைத் தக்கவனாக இனங்காட்டும்.என்பது திண்ணம். காலத்தின் தேவையறிந்து கலைப்பணி செய்த ஐயாவின் ஆத்மா கலைமகளிடத்தே இறவாத இன்ப அன்பு பெறப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

நாட்டுப்புறவியலும் கூத்துக்கலையும்

~ ஒரு சுருக்கக் குறிப்பு ~

கவிஞர். இரா. அகிலன்
பொதுச்செயலர்,
வடமராட்சி கலை இலக்கிய கலைஞர் சங்கமம்
வடமராட்சி.

இன்று மானிட வாழ்வியலின் பண்பாட்டு விழுமியங்களை எடுத்துரைக்கின்ற ஊடகமாக அறிஞர்கள்பலராலும் விதந்து போற்றப்படுவது நாட்டுப்புறவியலாகும். அதாவது நாட்டுப்புற வழக்குப்பற்றி அறிவியல் அடிப்படையிலே ஆராய்வது நாட்டுப்புறவியலாகும். நாட்டுப்புறவியல் என்பதற்கு "FOLKLORE"என்ற சொல் 1846இல் வில்லியம் ஜோன் தொமஸ் அவர்களால் உருவாக்கப்பெற்றது.

"FOLKLORE" என்பது FOLK, LORE என்ற இரு சொற்கள் இணைந்ததாகும். 19ஆம் நூற்றாண்டிலே ஐரோப்பிய நாடுகளில் FOLK என்ற சொல் விவசாய மக்களைக்குறித்தது. பின்னர் படிப்பறிவில்லாத நாட்டுப்புற மக்களை குறித்தது. பொது மொழி, சமயம், தொழில் முதலியவற்றை பின்பற்றும் குழுவை FOLK என்பர். இது பொதுவாக படிப்பறிவில்லாத கிராமப்புற மக்களை குறிக்கும். LORE என்பதற்கு மரபுத்தொகுதிச் செய்தி என்றும், வழக்காறும் என்றும் பொருள் கொள்ளலாம். FOLKLORE என்பது "நாட்டுப்புற மக்களின் அறிவு"எனப் பொருள்படும். எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் இச்சொல்லின் ஆதிக்கத்தைக் காணலாம். ஜேர்மன் மொழியில் "DIE FOLKLORE" என்றும், பிரெஞ்சு மொழியில் LE FOLD LORE என்றும், இத்தாலிய மொழியில் EL FOLD LORE என்றும், ஸ்பானிஸ் மொழியில் EL FOLK LORE என்றும், ரஷ்ய மொழியில் FOLK LORE என்றும் வழங்கி வருவதை காணலாம். இந்நாட்டுப் புறவியலை நாட்டுப்புற இலக்கியம் - நாட்டுப்புறக் கலை என்னும் இருபெரும்பிரிவுக்குள் உள்ளடக்கி நோக்கலாம்.

நாட்டுப்புற இலக்கியங்களின் வித்தினைத் தொல்காப்பியத்தில் காணமுடிகின்றது. இதனை,

"பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பேரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர். (செய்யுள் 79)

எனும் செய்யுளுக்கூடாக அறிய முடிகிறது.

செய்யுளில் யாப்பின் வகைகளைக் கூறவந்த தொல்காப்பியர் பாட்டு, உரைநூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் ஆகியவை தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே மக்கள் வழக்கில் இடம்பெற்றிருந்ததாக கூறுகின்றார். இதை மேற்படி நூற்பா எடுத்தோதுகின்றது. இதன்வழி பிசி, வாய்மொழி, முதுசொல் போன்ற நாட்டப்புற இலக்கியங்கள் தொல்காப்பியத்திற்கு முன் வழக்கிலிருந்தன என்பது புலனாகின்றது.

சங்க இலக்கியங்களிலேயே நாட்டார் இலக்கியத்தின் அடிப்படைப் பண்பான வாய்மொழித் தன்மை (ORAL) ஆரம்பமாகி பின்னர் இப்பண்பு சிலப்பதிகாரத்திலும் இடம்பெற்றுள்ளது.

இவ்வகையில் வளர்ச்சி பெற்ற நாட்டுப்புற இலக்கியத்தை மேல்வரும் 6 பகுதிகளாக வகைப்படுத்தி நோக்க முடிகின்றது. அவையாவன.

1. நாட்டுப்புறப் பாடல்கள் (FOLK SONGS)
2. நாட்டுப்புறக் கதைகள் (FOLK TALES)
3. நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் (FOLK BALLADS)
4. பழமொழிகள் (PRO VERVS)
5. விடுகதைகள் (RIDDLES)
6. புராணங்கள் (MYTHS)

நாட்டுப்புறவியலில் இன்னொரு பெரும் பிரிவாய் மிளிர்வது நாட்டுப்புறக் கலைகளாகும். இதனை "ஜஸ்வின் தமியார்" என்பவர்

நாட்டுப்புறக் கலைகள் நம் வாழ்வோடு இணைந்துவிட்டன. நம்முடைய இல்லங்களிலும் திருவிழாக்களிலும், சடங்குகளிலும் அழகுணர்வுடன் சாதி பேதம் இன்றி காணப்படுகின்றன என்றும் குறிப்பிடுகின்றார். இயற்கை அறிவும், ஆழ்ந்த உணர்ச்சியும், எளிமையும், நேரடித் தன்மையும் இக்கலைகளில் மறைந்திருக்கின்றன.

நாட்டுப்புறக் கலைகளைப் பிரதானமாக மூன்று வகைப்படுத்தலாம். அவையாவன.

1. சமயம் சார் கலைகள் Religious Arts
2. தொழில்சார் கலைகள் Occupation Arts
3. சமூக மற்றும் வீரக்கலைகள் Social and Mantiol Arts

சமயம்சார் கலைகளை நாம் பிரதானமாக மூன்றாக வகைப்படுத்தலாம். அவையாவன

1. வழிபாட்டுக்கலைகள் - (Worshipping Arts)
2. நேர்த்திக்கடன் கலைகள் - (Consecration Arts)
3. புராணங்களை எடுத்தியம்பும் கலைகள் (Legends Depictings Arts)

சமயம் சார் கலைகள் நிகழ்த்து கலைகளிற்குள் (Performing Arts) உள்ளடக்கப்படுகின்றன. இந்நிகழ்த்து கலைகளிற்குள் கூத்து சிறப்புக்குரிய ஒன்றாக மிளிர்கின்றது. பாரம்பரிய நாட்டுப் புறவியல் அடிப்படை அம்சங்களை கலைகளாக கொண்டுள்ளது. ஜான் கெரால் பிரூன்ஹாட் என்பவர் குறிப்பிடுகின்ற நாட்டுப்புறவியலில் 5 முக்கிய அம்சங்களும் கூத்துக்கலைக்கு மிகவும் பொருத்தமானது. அவை முறையில்.

1. வாய்மொழியாக பரவல்
2. மரபு வழிப்படுதல்
3. பல்வேறு வடிவங்களால் திரிபடைதல்
4. ஆசிரியர் இல்லாமை
5. ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்குவது

இக்கூத்துக்கலை சங்க காலம்தொட்டே சிறப்பாக இன்றுவரை வளர்ந்து வந்துள்ளது.

சங்க காலத்தில் எழுந்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்கள் கூத்துக்கலையை எடுத்துரைக்கின்றன. சங்க காலத்தில் சமய கரணங்களில் வழிப்பட்ட கூத்து முறைகளும், தொழில் ரீதியான கூத்து முறைகளும் நிலவியிருந்தன. இவ்வகையில் சங்க காலத்தில் வாடாவள்ளிக்கூத்து, துணங்கைக்கூத்து, வள்ளிக்கூத்து, குரவைக்கூத்து போன்றவை ஆடப்பட்டதாக அறிய முடிகின்றது. அது மாத்திரமல்லாது வைரியர், கோடியர், கண்ணுளர் போன்ற தொழில்முறை கலைஞர்களும் இருந்துள்ளார்கள். இதிலிருந்து சங்ககால கூத்துக்கலை மரபை ஊகிக்க முடிகிறது.

அடுத்து சங்கம் மருவிய காலத்தை எடுத்துக்கொண்டால் அரசர் முன் ஆடப்பட்ட வேத்தியல் பற்றியும் பொது மக்களின் முன் ஆடப்பட்ட பொதுவியல் பற்றியும் எடுத்துரைத்து நாடக செய்திகளை தந்து நிற்கிறது. இது மாத்திரமல்லாது பொதுமக்களால் நிகழ்த்தப்பட்ட ஆச்சியர்குரவை, குன்றக்குரவை, வேட்டுவவரி என்பவற்றையும் எடுத்துரைக்கின்றது. இதிலிருந்து சங்கமருவிய கால கூத்துக்கலை மரபை ஊகிக்க முடிகிறது.

இதே போல பல்லவர் காலத்திலே பக்தி இலக்கியங்களில் பெரிதும் நாடகம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மாணிக்கவாசகர் "நாடகத்தால் நின்னடியார் போல் நடித்து" என்று பாடியுள்ளமையும், சம்பந்தர்தன்னை முத்தமிழ்வல்ல ஞானசம்பந்தனாய் கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் இருந்து பல்லவர் காலத்தில் கூத்துக்கலை ஆடப்பட்டதை அறிய முடிகிறது.

சோழர் காலத்திலே நாடகக்கலை பற்றி அறிய கல்வெட்டுக்களே உதவுகின்றன. எடுத்துக்காட்டாக,

1. 3ஆம் ராஜராஜனின் 9ஆவது ஆட்சி ஆண்டு காலத்தில் புரட்டாதி விழாவில் 7 அங்கம் உடைய ஆரியக்கூத்து நடித்துக்காட்டிய குமரன் ஸ்ரீ கண்டனுக்கு நிருத்தி நிலத்தை அளித்த குறிப்புண்டு.
2. பந்தனை நல்லூர் பிரகதீஸ்வரர் கல்வெட்டு இவன் காலத்தில் இராஜஇராஜ நாடகம் நடந்ததாக கூறுகின்றது.

3. இவனது 23ஆவது ஆட்சி ஆண்டு தாராபுரம் கல்வெட்டில் ரவிகுல மாணிக்க ஈஸ்வர குந்தவை விண்ணகர கோயில்களிற்கு சொந்தமான நடன மாதர்கள் சுவாமி ஊர்வலத்திலும் வேட்டைத் திருவிழாவிலும் பாடியதான குறிப்பு உண்டு.

4. இவன் காலத்தில் புரட்டாதி விழாவில் திருமூலநாயனார் நாடகம் நடந்ததற்கான குறிப்புண்டு.

இதன் மூலம் கோவிலுக்குள் நாடகம் நடைபெற்றது. என்பதும், அதுவும் கோயில் திருவிழாக் காலங்களில் நடிக்கப்பட்டது என்பதும் தெளிவாகின்றது. ஏழு அங்கம் உடைய ஆரியக்கூத்து நடிக்கப்பட்டதால் நாட்டிய சாஸ்திரத்தின் செல்வாக்கு பரவியிருந்ததுடன் ஆரிய நாடக முறைகள் தமிழகத்திற்குள் புகுந்துவிட்டமை புலனாகிறது. அத்தோடு கோவில்களிற்கு சொந்தமாக, நடிகர்கள் இருந்ததும் தெரிய வருகிறது. சுருங்கச் சொன்னால் நாடகமானது கோயில் சார்ந்து வளர்ந்தது எனலாம். இதனால் நாடகத்திற்கு புனிதத் தன்மையும் சமயத் தன்மையும் ஏற்பட்டன.

இதனைவிட வேறு நாடகங்கள் இருந்தன என்பதற்கு இராஜஇராஜனின் பின் கிடைக்கும் சாசனங்களும் சான்று பகர்கின்றன.

1. திருவிடை மருதூர் கல்வெட்டில் நாடகக் கலைபற்றி கூறப்படுகிறது.

2. அதே இடத்தில் 2ஆம் ஆதித்தன் காலக்கல்வெட்டில் ஆரியக் கூத்துப்பற்றியும், சாக்கை கூத்துப் பற்றியும் கூறப்படுகிறது.

3. 1ஆம் இராஜேந்திரன் கல்வெட்டில் சாந்திக்கூத்தினை ஒரு குழுவினர் கோயிலுக்குள் நடத்தியமை கூறப்படுகிறது.

4. 2ஆம் ராஜேந்திரனின் இன்னொரு கல்வெட்டு மார்கழி திருவாதிரை திருவிழாவில் சாக்கை மகாராஜனிற்கு 3தடவை சாக்கை கூத்து நடத்தியமைக்கு நிலம் தானம் அளித்தது பற்றி கூறுகிறது.

5. 2ஆம் இராஜேந்திரசோழன் கல்வெட்டு ஒன்றில் தஞ்சைப் பெருங்கோயில் வைகாசித் திருவிழாவில் இராஜஇராஜேஸ்வர

நாடகம் நடாத்திய சாந்திக்கூத்தின் திருமுது குன்றான விஜயராஜேந்திர ஆச்சாரியானும் அவர் குழுவினர்க்கும் மானியம் வழங்கியமையும் கூறப்படுகிறது.

6. விக்கிரம சோழனின் கல்வெட்டில் 9 தடவை சாந்திக் கூத்து நடத்திய 7 நாட்டு நங்கைக்கு நிலம் கொடுக்கப்பட்டமை கூறப்படுகிறது.

7. தஞ்சாவூர் மானம் பாடிக் கல்வெட்டில் வீரநாராயண கைலாசமுடைய மாதேவருடைய கோயிலில் சித்திரை விழாவில் 5 தடவை தமிழ்க்கூத்து நடத்தியமை கூறப்படுகிறது.

8. திருவாவடுதுறை கல்வெட்டு ஒன்றில் நாணாவித நாடக சாலைகள் பற்றி கூறப்பட்டுள்ளது.

இவற்றிலிருந்து சோழர் காலத்தில் ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆரியக் கூத்து, தமிழ்க்கூத்து, சாந்திக்கூத்து, வினோதக்கூத்து, சாக்கைக்கூத்து போன்ற கூத்து வகைகள் ஆடப்பட்டன என தெரிய வருகின்றது. அதைவிட ஆலயங்களில் நாணாவித நாடகசாலைகள் இருந்தமையைக் கொண்டு கூத்துக் கலை பற்றி அறிய முடிகிறது.

சோழர் காலத்தை அடுத்த விஜய நகர நாயக்கர் காலத்திலே பள்ளு நாடகங்கள், குறவஞ்சி நாடகங்கள், நொண்டி நாடகங்கள், கீர்த்தனை நாடகங்கள் போன்றவை ஆடப்பட்டதாக அறிய முடிகிறது. இக்காலப் பகுதியில் திருவாரூர்ப்பள்ளு முக்கூடற்பள்ளு திருமறைராஜன் பள்ளு, செண்பகராமப்பள்ளு போன்ற பள்ளு இலக்கியங்கள் கிடைத்துள்ளன. தமிழகத்தில் திருக்குற்றால குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, கும்பேசரி குறவஞ்சி போன்ற நாடகங்கள் ஆடப்பட்டுள்ளன. இது தவிர இக்காலத்திலே ராமநாடக கீர்த்தனை, நந்தனார் சரித்திரக்கீர்த்தனை, தீரு நீலகண்ட நாயனார் சரித்திரக் கீர்த்தனை, காரைக்காலம்மையார் சரித்திரக் கீர்த்தனை போன்ற நாடக கீர்த்தனை நூல்கள் தோற்றம் பெற்றுள்ளன.

ஐரோப்பியரின் வருகையைத் தொடர்ந்து கலை கலாசாரங்களில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. நாடகத்துறையிலும்

மாற்றங்கள் உண்டாக்கப்பட்டன. இவ்வகையில் விலாசம், வாசகப்பா, சபா, ஜக்சகாணம் போன்ற கூத்துக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

18ஆம் நூற்றாண்டிலே சங்கரதாஸ் சுவாமிகளது வருகையும், பம்மல் சம்பந்த முதலியார் வருகையும் கூத்துக் கலையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. சங்கரதாஸ் சுவாமிகள் பாசி இன வியாபாரிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட புராண நாடகங்களை உருவாக்கிய வகையிலும் முக்கியம் பெறுகிறார். இவரது நாடகங்களில் சதிஅனசூஜா, அபிமன்னன் சுந்தரி, பிரகலாதா, வள்ளி திருமணம், அல்லி சரித்திரம், பவளக் கொடி சரித்திரம். அரிச்சந்திர மயான காண்டம், கோவலன் சரித்திரம் என்பன குறிப்பிடத்தக்கன.

இந்நாடகங்களின் செல்வாக்கு கடல் கடந்து பரவியது அவ்வகையில் இந்நாடகங்களின் செல்வாக்கை நாம் கடல் கடந்த நாடுகளிலும் காண முடிகிறது. அவ்வகையில் ஈழத்து இன்றைய கூத்துக்களிற்கும் இதுவே அடிப்படையாக அமைகின்றது. இவரைப்போலவே, ஈழத்தில் கூத்துக்கலை பரவலிற்கு வழிகாட்டிய இன்னொரு அறிஞராக பம்மல் சம்பந்த முதலியார் விளங்குகின்றார். இவர் சுகுண விலாச சபை எனும் அமைப்பினை நிறுவி கூத்துக்கலையினை புதியதொரு வகையிலே இட்டுச்சென்றார்.

கூத்து மரபிலிருந்த, ஆட்டத்தைத் தவிர்த்து கர்நாடக இசையிலமைந்த பாடல் மரபை கூத்துக்கலையிலே சங்கரதாஸ் சுவாமிகள் ஏற்படுத்தியதைப்போல, முற்றிலும் வசன முறையிலமைந்த உரையாடலை அமைத்து கூத்தினை புதியதொரு செல் நெறியில் செலுத்தியவராய் சம்மந்த முதலியார் விளங்குகின்றார். ஈழத்தில் அரங்கேற்றப்பட்ட நாடகங்கள் அனைத்தும் இவரது நாடகங்களைத் தழுவியே எழுந்தது என்றால் மிகையில்லை.

இசைநாடகம் தந்த கவி

பரா. ரதீஸ்

இசை நாடகப் பாரம்பரியத்தினூடாகப் பல கவிதைகள் எமக்குக் கிடைத்துள்ளன. சில இசைநாடகக் கலைஞர்கள் கவிபுனையும் ஆற்றல் உடையவர்களாகவும் விளங்குகின்றனர். இவர்கள் இசை நாடக மேடைகளில் பாடிய சில பாடல்கள் இன்றும் மக்கள் மத்தியில் வாய்மொழிப் பாடல்களாக வழங்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இப் பாடல்கள் பெரும்பாலும் சமூக விமர்சனங்களாகவும் காணப்படுகின்றன.

எம்.வி.கிருஷ்ணாழ்வார், பொன்னாலை கிருஷ்ணன், அல்வாய் ச.தம்பி ஐயா, கரவெட்டி கே.வி.நற்குணம், துன்னாலை கே.பரஞ்சோதி, துன்னாலை பபூன் சிதம்பரப்பிள்ளை, அ.தெட்சணாமூர்த்தி ஐயர், மாதனை ந.சிவசுப்பிரமணியம் போன்றோரிடம் கவிபுனையும் ஆற்றலைக் காண முடிகின்றது.

இசைநாடக மேடைகளில் திடீரெனக் கவிபுனையும் ஆற்றல் எம்.வி.கிருஷ்ணாழ்வாரிடம் சிறப்பாகக் காணப்பட்டது. நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் "குலேபகாவலி" இசைநாடகம் நடைபெற்றது. இவ் இசைநாடகத்தில் சக்களத்திப் போராட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது. சக்களத்திகளாக எம்.வி.கிருஷ்ணாழ்வாரும், இந்தியாவைச் சேர்ந்த கோதநாயகியும் தோன்றினர். சக்களத்திப் போராட்டம் உச்சம் பெற்றபோது எம்.வி.கிருஷ்ணாழ்வார்,

"புத்தளம் நோட்டு மன்னார்க் கடையில்
பூசப்பட்டவளே ஒருவனுக்கு ஆசைப்பட்டவளே"[1] என்று பாடினார். உடனே கோதநாயகி இதற்குப் பதிலாக,

"கஞ்சா அபின் லேகியமும் கள்ளுச் சாராய
கடைக்குப் போனவளே ஒருசத வடைக்குப் போனவளே"[2]
என்று பாடினார். இப்பாடல் அடிகளின் ஊடாக சமூகத்தின் சில தன்மைகளைக் காணமுடிகின்றது. அதாவது சமூகத்தில்

காணப்படுகின்ற சில சீர்கேடுகள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன.

கிருஷ்ணாழ்வார் வாழ்ந்த காலத்தில் இசைநாடகக் கலைஞர்களிடையே மிகுந்த போட்டி இருந்தது. ஏனெனில் அவர்கள் மிகுந்த ஆளுமையுடையவர்களாக விளங்கினர். சக்களத்திப் போராட்டத்தின் போது ஒரு சக்களத்தி மற்றைய சக்களத்தியின் வாயை அடக்குவதில் மிகுந்த அக்கறை உடையவளாக இருப்பாள். உண்மையாகவே சக்களத்திப் போராட்டம் சூடுபிடிப்பதுண்டு. இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் கிருஷ்ணாழ்வார்,

"இலங்கை பிறந்தது இராவணனார் தினம் ஆள்வதற்கே
கங்கை பிறந்தது அரனார் திருமுடி ஆள்வதற்கே
மங்கை பிறந்தது வைகாசி மாத வளர் பிறையில் - உன்
கருங்கூந்தல் பிறந்தது என்னிரு கைகள் சுவைப்பதற்கே"[3]

எனப்பாடி சக்களத்தியை அடக்கியதாக அறிகின்றோம். இவருடைய கவியாற்றலைப் பற்றி செ.யோகராசா, எஸ்.சிவலிங்கராஜா, மன்னவன் மு.கந்தப்பு போன்றோர் ஆய்வுகளைச் செய்துள்ளமை குறிப்பிடத்தது.

இசைநாடக மேடைகளில் பபூன் பாத்திரம் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. நகைச்சுவைப் பாத்திரமாக இது அமைந்தபோதும், இதனூடாகச் சமூகத்தின் பல்வேறு தன்மைகளும் படம்பிடித்துக் காட்டப்படுகின்றன. தற்போது இசை நாடக மேடைகளில் பபூன் பாத்திரத்தின் வரவு அருகி வருவது குறிப்பிடத்தக்கது. பபூன் பாத்திரம் ஏற்பவர்கள் நகைச்சுவைப் பாடல்களைப் பாடிப் பார்வையாளர்களை மகிழ்விப்பதுண்டு. உதாரணமாகத் துன்னாலை பபூன் சிதம்பரப்பிள்ளையின் பாடல் அடிகளை இங்கு குறிப்பிடலாம்.

"நான் பிறந்தது துன்னாலை
அவ பிறந்தது பொன்னாலை
நானும் அவவும் பின்னாலை
ஆசுப்பத்திரி முன்னாலை"[4]

பிரதான பாத்திரங்களை ஏற்று நடிக்கும் சில நடிகர்கள் பபூன் பாத்திரம் ஏற்று இசைநாடக மேடைகளை அலங்கரிப்பதும்

உண்டு. இந்தவகையில் கிருஷ்ணாழ்வார், பரஞ்சோதி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். துன்னாலை க.பரஞ்சோதி பபூனாகத் தோன்றிப் பாடும் பின்வரும் பாடல் மிகவும் பிரசித்தமானது. அப்பாடல் வருமாறு.

சந்தேகம் என்பதொரு சரக்கு
இங்கு எல்லார் மனதிலும் இருக்கு
சந்தேகம்
ஒரு சந்தேகம் ஒரு சந்தேகம் ஒரு சந்தேகம்
மேலை வானம் கறுத்திருக்குது
மழை வருமென்றொரு சந்தேகம்
கீழைப் பூமி வெளுத்திருக்குது
வெயில் எறிக்குமென்றொரு சந்தேகம் (சந்தேகம்....)

மாமியார் பிள்ளை வெளியிலை போனால்
மருமகளுக்கொரு சந்தேகம்
மருமகள் பிள்ளை வெளியிலை போனால்
மாமியாருக்கொரு சந்தேகம் (சந்தேகம்....)

சந்தேகம் என்றொரு சரக்கு
அது தமிழர் மனதிலும் இருக்கு
சந்தேகம் என்றொரு சரக்கு
அது சிங்களவர் மனதிலும் இருக்கு
தமிழ்மொழி மசோதா நிறைவேறுமா என்ற
தமிழர் மனதில் ஒரு சந்தேகம்
தமிழ்நாடு வேறாய்ப் பிரிந்திடுமோ என்ற
சிங்களவர் மனதில் ஒரு சந்தேகம். (சந்தேகம்....)[5]

இப்பாடலினூடாக சமூக, அரசியல் நிலைப்பாடுகளைத் தரிசிக்க முடிகிறது.

1990 காலப்பகுதிகளில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆகாய விமானங்கள் குண்டுகளைப் போட்டுப் பல அழிவுகளைச் செய்தன. இவ்விளைவு பரஞ்சோதியை வெகுவாகப் பாதித்தது. வல்லிபுரஆழ்வார் ஆலயத்தில் இடம்பெற்ற ''அரிச்சந்திரா'' இசைநாடகத்தில் காலகண்ட ஐயர் பாத்திரமேற்று நடித்தபோது பின்வருமாறு தொடங்கும் பாடலைப் பாடிப் பலருடைய பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார்.

"வானத்தில் இருந்து குண்டு
வந்து வீழ்ந்த இடத்தே
ஆழப் பதிந்த குழி
வானத்தில் இருந்து குண்டு
வந்து வீழ்ந்தால் - தப்ப
அமைத்தார் பதுங்கு குழி"[6]

''குடிகேடு'' என்ற சமூக இசை நாடகத்தில் அ.தெட்சணாமூர்த்தி ஐயர் பாடிய பாடலொன்று வருமாறு.

"சுண்டல் கடலை வடை
நண்டு இறால் கணவாய்
துண்டுக் கருவாடு கொண்டு
வந்து தந்த எங்கள் நயினார்"[7]

தாழ்ந்த சாதியைச் சேர்ந்த பெண், தங்கள் வீட்டிற்கு வரும் உயர் சாதியினர் மதுவிற்காக மேலே குறிப்பிடப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்து தருவதாகக் கிண்டல் செய்கிறாள்.

மாதனை ந.சிவசுப்பிரமணியம் சிறந்த இசைநாடகக் கலைஞர். இயல்பாகவே கவிபுனையும் ஆற்றல் உடையவர். ஸ்ரீவள்ளி இசைநாடகத்தில் வேடனாகத் தோன்றும் போது பாடுகின்ற பாடலை இங்கு குறிப்பிடலாம்.

"தென்னவன் மைந்தனடா
தென்னாட்டுச் சிங்கனடா
சிவனாரின் பாலனடா
சிவசுப்பிர மணியனடா

அட நான்
பிறந்தது பக்தர் பாடும்
வெள்ளி மலையிலே
வளர்ப்பு கயிலை மலையிலே
இருப்பு வட பழனியிலே
குந்தன கும்மா பாட்டுப் பாடி
வந்தேனே மயிலே

அடி செந்தேனே குயிலே
தினைப் புனத்தை

வள்ளியின் தினைப்புலனத்தை
நாடி நானும் நடையைக் கட்டிடுவேன்

வள்ளியை மணம் முடித்திடுவேன்
எதிர்த்தால் எகிறிப் போட்டிடுவேன்

தெந்தன தென்னா பாட்டுப்பாடி
வந்தேனே மயிலே
எந்தன் செந்தேனே குயிலே

யானை சேனை நாற்படைகளை
மாட்டி வைப்பதற்கே
என்னுடைய வேலையும் விடுவேன்
யமனுக்கு ஓலையும் விடுவேன்"

(குந்தன கும்மா....)[8]

இப்பாடலிலே கலைஞர் "சிவனாரின் பாலனடா, சிவசுப்பிரமணியனடா" என்ற அடிகளினூடாக நான் சிவனுடைய மகன் சிவசுப்பிரமணியன் எனத் தன்னைப் பற்றிக் கூறுவதைக் காணலாம்.

இவ்வகையில் கவிபுனையும் ஆற்றலுடைய இசைநாடகக் கலைஞர்கள் இசைநாடகக் பாரம்பரியத்தின் ஊடாக கவிப் பாரம்பரியத்தையும் தந்திருக்கிறார்கள். இசைநாடகம் தந்த கவிமரபு வித்தியாசமானது. இது பற்றிய நுண்ணிய ஆய்வுகள் வரவேண்டியது காலத்தின் தேவை. ஆய்வின் சுருக்கம் கருதி இத்தோடு முடித்துக் கொள்கிறேன். இன்னொரு சந்தர்ப்பத்தில் விரிவானதொரு கட்டுரையை உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

சான்றாதாரம்

1. நேர்காணல் - பண்டிதர் க.சச்சிதானந்தன்
2. நேர்காணல் - பண்டிதர் க.சச்சிதானந்தன்
3. நேர்காணல் - கலைஞானகேசரி மன்னவன் மு. கந்தப்பு
4. நேர்காணல் - நாடகச்சக்கரவர்த்தி ப.பரராஜசிங்கம்
5. நேர்காணல் - கலைஞானகேசரி க.பரஞ்சோதி
6. நேர்காணல் - கலைஞானகேசரி க.பரஞ்சோதி
7. நேர்காணல் - முத்தமிழ் வேதியன் அ.தெட்சணாமூர்த்தி ஐயர்
8. நேர்காணல் - மூத்த இசைநாடகக் கலைஞர்
ந.சிவசுப்பிரமணியம்

இசை நாடகமும் இளைய தலைமுறையும்

வே.நந்தகுமார்
மாணவன்,
தமிழ்த்துறை.
யாழ்பல்கலைக்கழகம்.

இசை நாடகத்தின் கலைச்சுவடுகளை இளைய தலைமுறைக்கு தந்துவிட்டு, கலைமகளிடம் சென்றுவிட்ட மதிப்புக்குரிய கலைப் பொக்கிசம், கலைஞான கேசரி பரஞ்சோதி ஐயாவின் நினைவுகளை நெஞ்சிருத்திக்கொண்டு இக்கட்டுரையை தொடங்குகின்றேன். இன்று ஈழத்து கலை நாடக உலகில் ஏற்பட்டுள்ள முக்கிய பிரச்சினைகளில் ஒன்று பாரம்பரியமாக பேணப்பட்டு வருகின்ற எமது இசை நாடக கலைவடிவங்களின் பால் இளைய தலைமுறை அக்கறை காட்டுவது குறைந்து வருகின்றது என்பதும், இதனால் இவை மரபுக் கையளிப்பு பேணுகை இன்றி காலப்போக்கில் அழிந்து போய்விடுமோ என்ற ஏக்கமும் ஆகும். இதைப் பற்றி பல மூத்த கலைஞர்கள், அறிஞர்கள் சிந்தித்து பல கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளபோதும் கூட, இளைய தலைமுறையின் கருத்துக்கள் இது பற்றி இன்னமும் பெரிதாக வெளிப்படாத நிலையில் ஓர் இளைஞனாக நின்று, என் அறிவிற்கு எட்டிய வகையில் இக்கட்டுரையினூடாக இவ்விடயம் தொடர்பான ஒரு கருத்து தெளிவினை ஏற்படுத்த முனைகிறேன்.

இசை நாடகம் என்பது தமிழரின் தொன்மையான நாடக வடிவங்களான கூத்து, விலாசம் என்பவற்றை தொடர்ந்து தோன்றிய ஒரு நாடக வடிவமாகும் இது இசையும் பாட்டும் உரையும் கலந்ததாக அமைந்திருக்கும். பெரும்பாலும் இதில் பேசப்படும் கதைகள் புராண, இதிகாச கதைகளாகவே காணப்படுகின்றன. மரபு ரீதியான இசை, கதைக் கட்டிறுக்கங்கள் இதனுள்

அமைந்திருக்கும். அந்த வகையில் சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா, அல்லி அருச்சுனா, கோவலன் கண்ணகி, இலங்கேஸ்வரன், பாஞ்சாலி சபதம், பக்த நந்தனார், ஸ்ரீ வள்ளி போன்ற இசை நாடகங்கள் தொன்றுதொட்டு பாரம்பரியத் தொடர்ச்சியாக ஈழத்தில் நடிக்கப்பட்டு வருகின்றன. இதனூடாக பல மூத்த இசை நாடகக் கலைஞர்கள் உருவாகி நீண்ட கலைப் பாரம்பரியத்திற்கூடாக இக்கலையை வளர்த்தும் வந்துள்ளனர். அந்த வகையில் இக்கலை வடிவங்கள் பரம்பரை பரம்பரையாக மரபு மாறாமல் கையளிப்புச் செய்யப்படும்போதே அதனூடான கலை பண்பாட்டுப் பேணுகை என்பது சாத்தியமாகின்றது.

இன்றைய இளைய தலைமுறையிடம் இப்பாரம்பரிய இசை நாடகத்தினைக் கையளிப்பு செய்கையிலே பல சிக்கல்கள், சவால்கள் எதிர்நோக்கப்படுவதாக கூறப்படுகிறது. இது இசை நாடகத்திற்கு மட்டுமன்றி பாரம்பரியமான அனைத்து விடயங்களுக்கும் பொருந்துவதாகவே கூறப்படுகிறது. இது பற்றி மூத்த இசை நாடகக் கலைஞர்களிடம் இரு வேறுபட்ட கருத்து நிலைகளை அவதானிக்க முடிகிறது. ஒரு சாரார் இன்றைய இளைய தலைமுறையானது நாகரிகமாற்றம், சினிமாவினூடான ரசனை மாற்றம், நவீனத்துவ வாழ்க்கை வளர்ச்சி போன்றன காரணமாக பாரம்பரிய கலை வடிவங்களிலும் இசை நாடகத்திலும் அக்கறை செலுத்துவதில்லை எனக் கூறுகின்றனர். இன்னொரு சாராரோ இதனை முற்றாக மறுத்து, இளைய தலைமுறையில் ஒரு குறிப்பிடத்தக்களவானோர் இசை நாடகத் துறையிலும், பாரம்பரிய மரபு பேணுகையிலும் அது பற்றிய ஆய்வுகளிலும் அக்கறை கொண்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

இன்று நாம் வாழுகின்ற நவீனத்துவ வளர்ச்சியுடன் கூடிய வாழ்வியற்ச் சூழலில் மரபு, பழைமை பற்றிய எமது மதிப்புக்களிலும் அவற்றினூடாக நாம் பெற்றிருந்த கலை ரசனையிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கு மூலகாரணமாக இருப்பது எம்மை இன்று பெரிதும் ஆக்கிரமித்து வருகின்ற தொலைக்காட்சி மோகமும், சினிமாத் திரைப்படங்களும், திசையிசைப் பாடல்களுமேயாகும்.

இவற்றினூடாக ரசனை மாற்றப்பட்ட இளைய தலைமுறை பாரம்பரிய கலை வடிவங்களின் பால் அக்கறை கொள்வதும் அவற்றை ரசித்துப் பார்ப்பதும் குறைந்து வருகின்றது என்பது உண்மையே. இதற்கு இசை நாடகமும் விதிவிலக்கல்ல. அதற்காக இன்றைய இளைய தலைமுறை முற்றுமுழுதாக இசைநாடக, மரபு பேணுகை என்பதிலிருந்து ஒதுங்கி விட்டனர் என்ற கூற்றினை ஏற்றுக்கொள்ள முடியாது.

இன்று இளைய தலைமுறை மத்தியில் எமது மரபுகளை பேண வேண்டும், அவற்றைப்பற்றி அறிய வேண்டும், தேடவேண்டும், ஆய்வு செய்ய வேண்டும், ஆவணப்படுத்த வேண்டும், அறிக்கை செய்ய வேண்டும் என்ற விழிப்புணர்வு அண்மைக் காலமாக ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. மரபுகளை காலத்துக்குப் பொருந்தாத இறுக்கங்களுடன் பேணிப் பாதுகாப்பதை விரும்பாத இளைய தலைமுறை அவற்றில் காலத்திற்கேற்ற சில தளர்ச்சிகளை மேற்கொண்டு நவீனத்துவ உத்திகளை அவற்றில் புகுத்தி புதிய பாணிகளில் அவற்றை அமைக்க நினைக்கின்றனர். ஆனால் பெரும்பாலான மூத்த நாடகக் கலைஞர்கள், ஆர்வலர்கள் இதனை விரும்புவதில்லை. இன்றைய இயந்திர வாழ்வியலில் விடிய விடிய நாடகம் பார்ப்பது என்பது இனி வரும் சந்ததியால் இயலாத காரியம் ஆகும்போது அக்கலையை அழியாமல் காக்க நேரச்சுருக்கம் கருதி சுருக்கி அமைக்கலாமா? என்பது ஒரு சிந்தனையாகும். ஆயினும் பாரம்பரியத்தை காலத்திற்கேற்ப மாற்றுகையில் அவற்றின் மரபுத் தனித்துவம் சிதைந்து போகாமலும், அவற்றின் தாள, சுருதி, இசை அமைப்புக்கள் மாறுபடாமலும் அதனை மாற்றியமைப்பதே சாலப்பொருத்தமுடையதாக இருக்கும்.

இன்று ஈழத்தில் பல்கலைக்கழக மட்டம் பல்கலைக்கழகத்திற்கு வெளியே என்ற இரண்டு தளங்களில் இளைய தலைமுறை இசை நாடக வளர்ச்சிக்காகவும் அதன் பேணுகைக்காகவும் பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும். நெருக்கடிகள், குழப்பங்கள், அன்னிய ஊடுருவல்கள், போன்ற சூழல்களே தமிழ்க்கலை வரலாற்றில் அற்புதமான பல

கலைஞர்களையும், கலை வளர்ச்சிகளையும் தோற்றுவித்துள்ளது என்பது வரலாற்று உண்மையாகும். ஆங்கில ஆட்சி ஏற்பட்டிருக்காவிட்டால் ஒரு பாரதி கிடைத்திருக்கமாட்டார். ஈழப்போராட்டம் ஏற்பட்டிருக்காவிட்டால் ஒரு புதுவை கிடைத்திருக்க மாட்டார். அந்த வகையில் ஈழத்தில் இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் இளைய தலைமுறை மத்தியில் தோன்றியுள்ள கலை இலக்கிய விழிப்புணர்வு நிச்சயமாக பல சிறந்த கலைஞர்களை ஈழத்து (இசைநாடக) கலை உலகிற்கு பெற்றுத்தரும் என்பதில் ஐயமில்லை.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படும் "நாடகமும் அரங்கியலும்" என்ற பாடத்துறையும், நுண்கலைத்துறையும், நாட்டார் வழக்கியல் கழகம், வரலாற்றுக்கழகம் ஆகியனவும் இன்றைய இளைய தலைமுறையின் இசை நாடக வளர்ச்சிக்கு வழிகாட்டி ஊக்குவித்து வருகின்றன. இவற்றினூடாக பல பாரம்பரிய இசை நாடகங்கள் பற்றிய ஆய்வு முயற்சிகள், அளிக்கைகள், ஆவணப்படுத்தல்கள் போன்ற முயற்சிகளில் இளைய தலைமுறை ஈடுபட்டு வருகிறது. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நாடகம் என்பது தனித்துறையாக இல்லாதபோதும் தமிழ்த்துறையில் பயில்கின்ற மாணவர்களின் ஆய்வு முயற்சிகளுக்கூடாகவும், தமிழ்ச்சங்க நாடக விழாக்களுக்கூடாகவும் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் காலத்தில் இருந்து இசை நாடகங்களில் இளைய தலைமுறையினர் பங்காற்றி வருகின்றனர்.

இளைய தலைமுறையின் இசை நாடக ஈடுபாட்டிற்கான அண்மைய எடுத்துக்காட்டுக்களாக சிலவற்றை இங்கு சுட்டலாம். ஆயினும் இவை முழுமையான தரவு நிலைத் தகவல்கள் அல்ல. சில உதாரணங்களே ஆகும். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தற்போது தமிழ்த்துறை விரிவுரையாளராக கடமையாற்றும் பரா.ரதீஸ் என்பவர் தமது கலைமாணிப் பட்ட ஆய்வினை "வடமராட்சியின் இசைநாடகப் பாரம்பரியம்" என்ற தலைப்பில் மேற்கொண்டவையும், "வடமராட்சி ஆலயங்களை மையமாகக் கொண்ட இசை நாடகக் கூறுகள்" பற்றி இரா.அகிலன் அவர்கள் ஆய்வு செய்தமையையும் சுட்டலாம்.

அத்துடன் அண்மையில் நடந்த பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க பவள விழாவில் முற்றிலும் இளம் கலைஞர்களை உள்ளடக்கி ''அரிச்சந்திரா'' என்ற இசை நாடகம் அரங்கேற்றப்பட்டமையும் அகில இலங்கை இளங்கோ கழகம் ஐம்பதிற்கும் மேற்பட்ட கலைஞர்கள் ஒன்றிணைத்து 2002இல் நடித்த பாஞ்சாலி சபதம் இசை நாடகத்தில் பல முக்கிய பாத்திரங்களில் இளம் சந்ததியினர் நடித்ததும் குறிப்பிடத்தக்கதாகும். அதேபோல யாழ்ப்பாண நாட்டார் வழக்கியல் கழகம் அண்மையில் கைலாசபதி கலை அரங்கில் மேடையேற்றிய "சத்தியவான் சாவித்திரி" நாடகத்திலும் "ஸ்ரீவள்ளி" நாடகத்திலும் பல இளம் கலைஞர்கள் நடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக்கழகமும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் பல இளம் இசைநாடகக் கலைஞர்களை உருவாக்கியுள்ளது. மேலும் யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை மாணவர்களைக் கொண்டு "சின்மயா மிஷன்" என்ற ஆன்மீகத் தொண்டமைப்பு "சத்தியவான் சாவித்திரி" என்ற இசை நாடகத்தினை கொழும்பில் நிகழ்த்திக் காட்டி பாராட்டுப் பெற்றதும் இதனை பரஞ்சோதி ஐயா, பரராஜசிங்கம், ரதீஸ் ஆகியோர் நெறியாழ்கை செய்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இதே போல யாழ்ப்பாணத்தில் இன்று கலை நாடகப் பணியினூடாக இறைப்பணி ஆற்றிவரும் திருமறைக் கலாமன்றம் பல இளம் தலைமுறையினரை இசை நாடக உலகிற்கு பயிற்றுவித்து அளித்துள்ளது. பாரம்பரிய கலை மேம்பாட்டுக்கழகம் இசை நாடகப் போட்டிகளை வைத்து இளம் தலைமுறையினரை ஊக்குவித்து வருகின்றது. இதனைவிட கலைபண்பாட்டுக்கழகம், ஈழத்தின் பல பாகங்களிலும் பிரதேசத்திற்கு பிரதேசம் காணப்படுகின்ற நாடக மன்றங்கள், மாதனை, கற்கோவளம், பொலிகண்டி. அல்வாய், பாசையூர், கொழும்புத்துறை, நவாலி, அரியாலை, மானிப்பாய், அளவெட்டி, இளவாலை போன்ற பிரதேசங்களில் இயங்கி வரும் நாடகக் குழுக்கள், வட இலங்கைச் சங்கீத சபை, தமிழ்த்தினப்போட்டி என்பனவற்றினூடாக வளர்க்கப்படும் மாணவக் கலைஞர்கள் மூலமாகவும் இன்றைய இளைய தலைமுறையில் கணிசமானோர் இத்துறையில் ஈடுபட்டு வருவதைக் காண முடிகின்றது.

இளைய தலைமுறை இப்பாரம்பரிய கலைவடிவங்களில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளாமைக்கு வேறும் சில காரணங்கள் உள. அவை சில மூத்த கலைஞர்களின் நடத்தையின் பாற் பட்டதாகும். மூத்த கலைஞர்கள் சிலர் வித்துவச் செருக்கோடு இளைய தலைமுறைக்கு நாடகக் கலையை அளிக்கை செய்ய மறுப்பது, சில மூத்த கலைஞர்கள் இன்று தவிர்க்க முடியாதபடி இசை நாடக தொழில்முறை கலைஞர்களாக மாறியிருப்பது. இன்னமும் எமது சமுதாயம் கலைஞனுக்குரிய கௌரவத்தினை வழங்காமை, "கூத்தாடுவதும் குண்டி நெளிப்பதும் ஆத்தாதவன் செயல்" என்ற பாரம்பரிய நாடகக்கலை பற்றிச் சமூகத்தில் இன்னமும் ஒரு கருத்து நிலவுகின்றமை, சில மூத்த கலைஞர்களிடம் காணப்படுகின்ற மதுபாவனை போன்ற தீய பழக்கங்களுக்கு தாமும் ஆட்பட்டுவிடுவோமோ என்ற அச்சம் போன்றனவும் காரணங்களாக அமைகின்றன. இது விடயத்தில் மூத்த தலைமுறை சற்றுச் சிந்திக்க வேண்டியது அவசியமாகும். என்னதான் இவ் இசை நாடக ஆய்வியலில் இன்றைய இளைய தலைமுறை புதிய வழிகளை பின்பற்றினாலும் நாடக அளிக்கை என்று வருகின்றபோது மூத்த கலைஞர்களுக்கு மதிப்பளித்து, அவர்களிடம் குரு-சீட பாரம்பரிய முறைப்படி மரபு மாறாது அதை கற்றுக்கொள்வதன் மூலமே. ஈழத்தின் இசை நாடகத் துறையினை வளம்படுத்த முடியும் என்பதில் ஐயமில்லை. மூத்த கலைஞர்கள் தமக்குள் இருக்கின்ற அமைப்பு நிலை, கருத்து நிலைப்பேதங்களை மறந்து ஒற்றுமை உணர்வுடன் செயற்படுவார்களாக இருந்தால் நிச்சயமாக ஈழத்தில் எதிர்காலத்தில் இசை நாடகத்தில் ஆற்றல் மிக்க இளைய தலைமுறை ஒன்றை உருவாக்கமுடியும். என்பதுடன் மரபு, பாரம்பரியம் என்பவற்றை தலைமுறைக் கையளிப்பினூடாக பேணமுடியும். அங்கும் இங்குமாய் சிதறிக்காணப்படுகின்ற இன்றைய இளைய தலைமுறை இசைநாடகக் கலைஞர்களை ஒரு அமைப்பு நிலைக்குள் ஒன்றிணைத்து சிறப்பு வாய்ந்த மூத்த இசை நாடகக் கலைஞர்களை கொண்டு மரபு முறை தவறாத வரன் முறையாக அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கூடாகவும், கலைவிழாக்களை நடத்துவதனூடாகவும் எதிர்காலத்தில் இசைநாடகத்துறையில் இளைய தலைமுறையை

வளர்த்தெடுக்க முடியும். இளைய தலைமுறை தவறான பாதையில் செல்கிறது. பாரம்பரிய மரபுகளைப்பேண மறுக்கிறது என சதா அவர்கள் மீது மூத்த தலைமுறை குற்றம் சுமத்திக் கொண்டிருக்காமல், அவர்களின் வழியில் சென்று, அவர்களது கருத்துக்களுக்கும் மதிப்பளித்து, அவர்களுடைய ஆய்வு, கலைமுயற்சிகளுக்கு துணைநின்று மூத்தகலைஞர்கள் அவர்களை வழிநடத்துவார்களாக இருந்தால் நிச்சயமாக எதிர்காலத்தில் ஈழத்தில் இளைய தலைமுறை இசைநாடகப் பாரம்பரியத்தினை அர்ப்பணிப்புடன் பேணி வளர்க்கும் என்பதில் ஐயமில்லை. இன்று புலம் பெயர்ந்த பல நாடுகளில் வசிக்கின்ற எமது இளைய தலைமுறை கூட இப்பாரம்பரியஇசை நாடகங்களை எம்மவர்களுக்கும், அந்நாட்டு மக்களுக்கும் நடித்துக்காட்டி எமது பாரம்பரிய கலைவடிவங்களுக்கு சர்வ தேச அங்கீகாரத்தினை பெற்றுக்கொடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். வன்னி, மட்டக்களப்பு, மன்னார் போன்ற பிரதேசங்களில் கூத்து மரபே பெரும்பாலும் பேணப்படுகின்ற போதும் சில இளம் இசை நாடகக்கலைஞர்கள்அண்மைக்காலமாக இப்பிரதேசங்களில் உருவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, தொகுத்து நோக்கும்போது இன்றைய இளைய தலைமுறையானது இசைநாடகக்கலையை முற்றுமுழுதாக கைவிட்டுவிட்டது. மரபுகளை பேணவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாத அதேவேளை, இளைய தலைமுறை சரியான வழியில் அவர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்பட்ட நிலையில் மூத்த தலைமுறையால் வழிநடத்தப்பட்டால், ஈழத்தில் இசை நாடகப்பாரம்பரியம் தொடர்ச்சியாக பாரம் பரிய மரபு ரீதியாக பேணப்பட்டு உயிர்வாழும் என்பதில் ஐயமில்லை.

கிராமியக் கலைகள் ஒரு நோக்கு

ம.பங்கயன்
தும்பளை.

இந்துமதம் சார் வழிபாட்டு முறையானது ஆகமம் சார்ந்த நெறி, ஆகமம் சாராநெறி என இருவகைப்படும். இவ் இரண்டு வழிபாட்டு முறைகளையும் இன்றும் காணமுடிகின்றது. கிராமியப் பிரதேசங்களில் ஆகமம் சாரா நெறிமுறையே பெரும்பாலும் பின்பற்றப்படுகின்றது. ஆகமம் சாராநெறியில் கிராமியக் கலை அம்சங்கள், இடத்துக்கிடம் மாறுபட்டு நிற்குமாற்றினை நாம் கண்டுகொள்ள முடிகின்றது. இக்கிராமிய மரபில் வெளிப்படுத்தப்படும் கலைகள் கிராமியக் கலைகள் என்று பொதுவாக அழைக்கப்படுகின்றன. வெவ்வேறு காலத்திற்கு ஏற்ப வெவ்வேறு சூழ்நிலைக்கு ஏற்ப கிராமியக் கலையின் தாக்கம் மாறுண்டு செல்வதும் கண்கூடு. எனவே இன்றைய நிலையிலே இக்கலைகளின் பங்களிப்பு எத்தகையது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

மனிதனின் மன உணர்வை வெளிப்படுத்தும் சாதனம் கலை எனலாம். கலை கலைக்காக அன்று. அது சமயத்துக்கு ஆனது. அச்சமயத்தில் சடங்காசாரங்களை பறைசாற்றி நிற்பது. இக்கலைகள் பலதரப்படும். "கிராமத்துக்கே உரித்தானவையாகக் கொள்ளப்படுவது, மண்வாசனை பொருந்தி நிற்பது கிராமியக் கலையே என்பதில் வியப்பில்லை". அக்கலைகளில் நாட்டார் இசை, உடுக்கு, பறை, காவடிசிந்து, வசந்தன் பாடல்கள், கோலாட்டம், கரகம் முதலிய கலைவடிவங்கள் இன்றியமையாதன.

கிராமியக் கலைகள் பற்றி பேராசிரியர் அ.சண்முகதாஸ் குறிப்பிடுவது இவ்விடத்தில் நோக்கத்தக்கது. "நமது கலைகள் என்றிருந்தவை காலகதியில் கிராமியக் கலைகள் என்னும் பெயர்

பெறலாயின. நகர உருவாக்கம் தனக்கென சில பண்பாட்டுக் கூறுகளைத் தோற்றுவித்துக் கொண்டது. நவீன விஞ்ஞான வளர்ச்சி நகரத்திற்கென பலபுதிய விடயங்களை அறிமுகம் செய்தது. நகரங்களில் வாழத் தொடங்கிய தமிழர்கள் அந்நகரமயமான கலைகளிலே ஈடுபாடு கொண்டனர். நகரமல்லாத இடங்கள் கிராமங்கள் எனப்பட்டன. அப்பிரதேசங்களிலே காணப்பட்ட கலைகள் கிராமியக்கலைகள் எனப்பட்டன". சண்முகதாஸின் கருத்துக்கள் கிராமியக் கலைகளுக்கான தளத்தினை விளக்கி நிற்கின்றன எனலாம்.

தமிழர் கலைமரபிலே கலைகளை வேற்றியற் கலைகள், பொதுவியற் கலைகள் என இரண்டாகப் பாகுபடுத்திப் பார்க்கும் மரபு பண்டு தொட்டு இருந்து வந்துள்ளது. "ஒரு காலத்தில் வேந்தனுடைய அவையில் உயர் கலை அந்தஸ்தைப் பெற்றிருந்த கலைகள் பல்வேறு மாற்றங்களால் அந்தஸ்து நிலையில் இருந்து விடுபட்டு சாதாரண கிராமிய மட்டத்து மக்களிடையே சென்று வழங்கியிருக்க வேண்டும். இந்நிலையில் இவை கிராமிய என்ற அடையினைப் பெற்றிருக்கலாம்" எனப் பேராசிரியர் சி.மௌனகுரு கருதுகின்றார்.

கிராமியக் கலைகள் வெறும் பொழுதுபோக்கல்ல. அவை தெய்வபக்தி, அழகுணர்ச்சி, நல்லொழுக்கம் முதலியவற்றை மக்களுக்குப் புகட்டி வருவதோடு, இக்கலைகள் மக்களை ஒற்றுமைப்படுத்தியும் ஊக்குவித்தும் வருபவை எனலாம். ஈழத்திலே வழங்கும் கிராமிய நாட்டார் கலைகளை நான்கு வகையாகப் பிரித்து நோக்குவார் கலாநிதி சி.பாலசுந்தரம்.

1). அவைக்காற்றுக்கலை - கூத்து, நடனம், வில்லிசை.
2). இலக்கியுக்கலை - நாட்டார் பாடல், பழமொழி...
3). விளையாட்டு
4). ஒப்பனை

கூத்தின் நவீன வளர்ச்சியே நாடகம் எனலாம். பழைய காலத்தில் ஈழத்திலே வட்டக்களரி முறையில் ஆடப்பட்டு வந்த கூத்து, இன்று மூன்று பக்கமும் மூடிய அரங்கில் நிகழ்த்தப்படுகின்றது. அழிந்து

போகின்ற கூத்துக்கலையை ஊக்குவித்து மறுவாழ்வு கொடுத்தவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன். இவர் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு புத்துயிர் பெற வழிகாட்டியவர். அவரைத் தொடர்ந்து பேராசிரியர் மௌனகுரு, பேராசிரியர் அ.சண்முகதாஸ் போன்றோரும் நாடகத்துறைக்குத் தங்களை அர்ப்பணித்தவர்கள். மறைந்த கலைஞர் க.பரஞ்சோதி இக்கலைகளின் வளர்ச்சிக்குப் பங்காற்றியவர். இவரைத்தவிர, ப.பரராஜசிங்கம், த.சிவசுப்பிரமணியம், ம.தைரியநாதன், வ.செல்வரட்ணம் போன்ற கலைஞர்களால் இன்று வளர்த்தெடுக்கப்படுகின்றது. நடனக் கலையைப் பொறுத்தவரையில் கிராமிய வழிபாட்டுக் கலைவடிவங்களில் ஒன்றாகிய ஆடல் என்னும் மரபு அதாவது, "கட்டுச் சொல்லி உரு ஆடுதல்" இன்றும் நடனக் கலையின் அத்திவாரமாகக் கிராமிய மட்டத்திலே நின்று நிலவுகின்றது. கிராமிய நடனக் கலையானது காவடி, கரகம், கோலாட்டம் போன்ற பல்வேறு வடிவங்களைப் பெற்றிருக்கின்றது.

ஈழத்தமிழர் வாழ்வில் மிகுந்த செல்வாக்குடன் இன்றும் எழுச்சி பொங்கும் கலைவடிவம் வில்லிசை எனலாம். இக்கலைவடிவம் தமிழகத்திலேயே பயிற்றப்பட்டு வந்தது. பின் ஈழத்திலே அதை அறிமுகம் செய்துவைத்தவர் மாஸ்டர் சிவலிங்கம். இவரால் இக்கலையைச் சமுதாயத்துக்கு வெளிக்கொணர முடியவில்லை. இவரைத் தொடர்ந்து கலாவிநோதன் கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்களும் அவரைத் தொடர்ந்து சத்தியதாசன், சர்மா போன்றோரும் இத்துறையிலே ஈடுபாடு காட்டி வருகின்றனர்.

பழமொழிகள், முதுமொழிகள் எனவும் வழங்குகின்றன. நாட்டுப்புறக் கிராமிய மக்களிடையே இவை இன்றும் வழக்கொழியாமல் இருந்து வருகின்றன. நொடிகளை விடுகதைகள் எனவும் சொல்லலாம். விடுகதைகளில் ஏதாவது புதிர் ஒன்று மறைந்திருக்கும். விடுகதையை கூறியவுடன் நொடிப்பொழுதில் அதனைக் கண்டுபிடித்து விடலாம். தொல்காப்பியம் இதனைப் "பிசி" என்கிறது. ஈழத்தமிழரிடையே பல்வேறு விடுகதைகள், பழமொழிகள் வழக்கத்தில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலயங்களோடு இணைந்து ஆடல் சார்ந்த கலையாக போற்றப்படுவது "வசந்தன்" எனும் கலைவடிவம் ஆகும். ஆடல்களில் இது தனிச்சிறப்பு வாய்ந்தது. ஆலயச் சடங்குகளோடும் சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி முதலாய பண்டிகைகளிலும் இக்கலை வடிவம் செல்வாக்குப் பெறுகின்றது. மட்டக்களப்பிலே வசந்தன் ஆட்டத்தைச் சிறுவர்களும், இளைஞர்களும் பேணி வருகின்றனர். எட்டுப்பேர் அல்லது பத்துப்பேர் கொண்ட குழுநடனமாக இந்த வசந்தன் நடனம் அமையும். ஈழத்திலே ஆண்கள் இந்நடனத்தில் பங்கேற்பர். யாழ்ப்பாணப் பிரதேசத்திலே கட்டுவன் ஊரை மையமாகக் கொண்டு வசந்தன் ஆடப்படுகின்றது. கட்டுவனூர் "வசந்தன் பாடல்கள்" மழை வேண்டிப் பாடப்படுபவையாகக் காணப்படுகின்றன. இன்று வசந்தன் ஆட்டம் ஆடுவோர் மிகச் சிலரே. இன்று எஞ்சியிருப்பது வசந்தன் பாடல்கள் மட்டுமே எனலாம்.

கிராமிய வாழ்வியல் கலைகளில் தனித்துவமானது காவடியாட்டம். இது பல்வேறு நிலைகளில் அமையும். முன்கூட்டியே பயிற்சி ஏதுமின்றி மேளவாத்தியம், உடுக்கு, நாதஸ்வரம் என்பவற்றுக்கு ஏற்றபடி ஆடும் முறை ஒன்று. கைகள், புயம், நெஞ்சு, முதுகு என்பவற்றில் சிறிய வேல்களைக் குத்தி முதுகிலே சிறிய கொளுக்கிகளை ஏற்றி அவையனைத்தையும் கொடியினால் இணைத்து ஒருவர் இழுத்துப்பிடிக்க சுழன்று சுழன்று ஆடும் முறை வேறொன்று.

காவடியாட்டம் இன்றும் பல ஆலயங்களிலே ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத கிராமிய நெறியிலே நின்று நிலவுகின்றது. ஈழத்தின் வடபகுதியில் செல்வச்சந்நிதி முருகன் கோவில், நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில், மந்திகை கண்ணகை அம்மன் கோவில் போன்ற ஆலயங்களிலே இன்றும் விழாக்காலங்களிலே நிகழ்த்தப்படுவதை நாம் காணமுடிகின்றது. இதுபற்றிய விரிவான செய்திகளை இத்திமரத்தாள், ஆற்றங்கரையான் என்ற நூல்களிலே பேராசிரியர் அ.சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் போன்றோர் தந்திருப்பது சுட்டி உரைக்கத்தக்கதாகும்.

இக் காவடியானது ஆரம்பத்திலே, இருமருங்கிலும் ஒரு நீண்ட தடியிலே, தமது நேர்த்திப் பொருட்களைக்கட்டி மஞ்சள் துணியால் மூடி மத்திய பகுதியைத் தோளில் வைத்து ஆடுவர். இன்று காவுதடியில் இருபுறமும் நிற்கத்தக்கதாக கால்கள் அமைத்து, வில்லுக்கூடாரம் அமைத்து, நான்கு பகுதிகளிலும் நான்கு கற்றை மயில் தோகைகளைக் கட்டி, வில்லுக்கூடாரத்தை அழகிய துணியால் மூடி அழகுபடுத்தி ஆடுவர். இக் காவடியாட்டம் அதன் அமைப்புமுறை கொண்டு, அன்னக்காவடி, செடில்காவடி, பாற்காவடி, தாளக்காவடி, பறவைக்காவடி, தூக்குக்காவடி என வகைப்படுத்த முடிகின்றது.

அன்னக்காவடி எடுக்கும் வழக்கம் ஈழத்திலே இல்லை. தங்களுக்கும் தங்களைச் சார்ந்தவர்களுக்கும் உணவு பெற்று வருவதற்காக பரதேசிகள் தங்கள் தோள்களிலே காவடியைச் சுமந்து வீடு வீடாகச் சென்று ஆடுவதே இக்காவடியாட்டம்.

செடில் காவடி தோளிலே முள்ளுக் கொளுக்கியைச் செலுத்தி அந்தக் கொளுக்கியை அதற்கென நாட்டப்பட்ட நீண்ட கூழையில் மாட்டி ஆடும் ஆட்டம் எனலாம்.

தாளக் காவடி அண்ணாவியிடம் சென்று பயின்று வரும் ஆட்டமாகும். முதல் மூன்று அல்லது ஆறுமாதங்களில் அவரிடம் சென்று பயிற்சி பெறவேண்டும். கிராமியக் கோலமும் கலைத்துவமும் இணைந்தது தாளக் காவடியே எனலாம்.

இக்காவடியாட்டம் எல்லாம் பெரும்பாலும் கிராமத்தின் எல்லையில் இருக்கும் ஆலயத்திலிருந்து இன்னொரு எல்லையில் உள்ள ஆலயத்தை நோக்கி ஆடப்படும். கிராமங்களில் முக்கிய சந்திப்புக்களில் இவ்வாட்டம் நடைபெறும்.

கிராமியக் கலைவடிவங்களில் கரகமும் ஒன்றாகும். ஆடலும் பாடலும் கலந்த அழகிய கலையாக இது விளங்குகின்றது. மாரியம்மனுடன் தொடர்புடைய இக்கரகாட்டம் கிராமங்களில் பஞ்சம், தொற்றுநோய் என்பன வரும் வேளையில் ஆடப்பட்டு

வந்தது. கரகம் குடம் அமைத்து, அதன்மேல் வேப்பிலைகளால் அலங்காரம் செய்யப்பட்டு, கூம்பு வடிவில் அமைவதாகும். இரண்டு செம்பு தொடக்கம் ஒன்பது செம்புகள் வரை வைத்து ஆடப்படும்.

கரகாட்டம் இருவகைப்படும்

1. சக்திக் கரகம் 2. ஆடும் கரகம்

சக்திக்கரகம் பக்தியுடன் எடுக்கப்படும். பெண்கள் தீட்டுடையவர் ஆதலால் அவர்கள் இதை எடுப்பதில்லை. கன்னிப் பெண்கள் ஆடும்மரபு இன்று வழக்கிலே இருந்து வருகின்றது. தாம் மகிழவும் பிறரை மகிழ்விக்கவும் இது ஆடப்படும். ஆடும் கரகத்தைப் பெண்களே ஆடுவர். கால்களில் சதங்கை கட்டியிருப்பர். இதை மணிக்கச்சம் என்றும் கூறுவர். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கரகம் கரகாட்டம் எனவும் மலைநாட்டில் செம்பாட்டம் எனவும் அழைக்கப்படும். பெரும்பாலும் உடுக்கின் ஓசையுடனேயே இக்கரகம் ஆடப்படும்.

கிராமிய நாட்டுக் கலைகளில் கோலாட்டமும் தனக்கென ஒரு இடத்தை தக்கவைக்கின்றது. கைகளிலே சிறிய இரு கோல்களை வைத்துக்கொண்டு பாடி ஆடுதலே கோலாட்டம் எனப்படும். இருகைகளிலும் உள்ள கோல்களை ஒன்றோடு ஒன்று தட்டி ஒலி எழுப்பி மாறி மாறிக் கோலைத் தட்டுதல் இதன் சிறப்பம்சமாகும். கோலாட்டத்தில் ஆண்களும் கலந்து கொள்வதுண்டு. ஆயினும் இது பெண்களுக்கே உரியதென்பர். ஆடுவோர் வட்டமாக நின்று ஆடுதல் மரபு. இது பலரும் இதில் பங்கெடுப்பதோடு அழகாகவும் இருக்கும்.

இதனைவிடப் பெரும்பாலும் விழாக் காலங்களிலே ஆடப்படும் கும்மியும் குறிப்பிடத்தக்கது. ஆண்களோ, பெண்களோ வட்டமாக வளைந்து நின்று பாட்டுப்பாடிக் கொண்டே கைகளைத் தட்டுவது கும்மி எனப்படும். இதில் ஆண்களும் பங்கெடுப்பர். பெண்கள் கும்மியடிக்கும்போது குனிந்து தட்டுவது, நின்று கொண்டு தட்டுவது, மேல் எழும்பித் தட்டுவது என்ற மூன்று முறைகளைக் கையாள்வர்.

ஈழத்தமிழர் நாட்டார் கலைகளில் தனித்துவமானதும் தமிழர்களின் தேசியக்கலை வடிவமாக வைத்துப் பார்க்கக் கூடியதுமான கலைவடிவம் கூத்துக்கலை எனலாம். ஈழத்தமிழர் பரந்து வாழ்கின்ற வவுனியா, முல்லைத்தீவு, சிலாபம், வன்னி, யாழ்ப்பாணம், மலையகம் போன்ற பல்வேறு பிரதேசங்களில் இது ஆடப்பட்டு வருகின்றது. இக் கூத்து மரபை வடமோடி, தென்மோடி, சிந்து நடை, விலாசம் என்ற பெரும் பிரிவுகளுக்குள் அடக்கி ஆய்வு செய்ய முடியும்.

இவ்வாறு ஈழத்திலே கிராமிய மட்டத்திலே பேணப்படும் வழிபாட்டு கலைமரபுகளில் நாட்டார் இலக்கியம், காவடியாட்டம், கரகாட்டம், கோலாட்டம், வில்லிசை, கூத்துக்கலை, வசந்தன் நடனம் என பல்வேறு நாட்டார் கலை வடிவக் கூறுகளை இனம் காணமுடியும். மேல்நாட்டு நாகரிக தாக்கத்தினால் வழக்கொழிந்து வரும் இக்கலைவடிவங்களை உரிய முறையிலே பாதுகாக்க முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றில் சில கலை வடிவங்கள் இன்று வழக்கொழிந்து வருகின்றன. ஈழத்தமிழரின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் இக்கலை வடிவங்கள் ஈழத்தின் தேசிய கலைவடிவங்களாக அமைகின்றன.

வாழ்க தமிழ் வளர்க கலை.

நாடக உலகின் திலகம் கே. வி நற்குணம்

பராபமேஸ்

கலையை விலைபேசும் கலைஞர்கள் நிறைந்துள்ள நாட்டில், ஒரு கலைஞனை ஒளியில் வைப்பதற்காக இன்னொரு கலைஞனை இருட்டில் புதைப்பதற்குத் தயாராகவுள்ள எழுத்தாளர்கள் பரந்துள்ள இடத்தில், தம் புகழைத் தலைப் பொருளாகக் கொண்டு ஆய்வுகள் செய்யும் ஆய்வாளர்கள் செறிந்துள்ள பொழுதில், தன்னுடைய சுய ஆற்றல், இசைஞானம், இசைநாடகப் பற்று, சமயோசித புத்தி, தெளிவான ரசனை, தூய்மையான சிந்தனை, மற்றவனின் உயர்வில் மனங்குளிரும் பாங்கு போன்றவற்றை மட்டும் மூலப்பொருட்களாகக் கொண்டு இசை நாடக உலகில் செயற்பட்ட நாடகதிலகம் கே.வி.நற்குணத்தின் பணி நிறைவாகச் சிந்திக்கவேண்டியதே.

இசை நாடகத் துறையினைப் பொறுத்தவரையில் நான், என்னுடைய தந்தையார்(ப.பரராஜசிங்கம்), பேரனார் (க.பரஞ்சோதி) ஆகியோரை விட கே.வி.நற்குணத்தை அதிகம் நேசிப்பது உண்மைதான். அதற்கு என்னுடைய தந்தையாரின் குரு, பேரனாரின் நண்பர் என்பவற்றைவிட அவருடைய தனித்துவமான திறமைகளும் காரணங்களாயின.

1923ஆம் ஆண்டு பிறந்த நற்குணம் தன்னுடைய 23வது வயதிலே கலைத்துறையிலே காலடி எடுத்துவைத்தார். 30வது வயதிலே நடிகமணி வி.வி.வைரமுத்துவோடு இணைந்து தன்னுடைய புலமையினை வெளிக்காட்டியதோடு வைரமுத்துவின் வளர்ச்சிக்கும் அரும்பங்காற்றினார்.

அன்றிலிருந்து ''**அரிச்சந்திராவில்**'' அரிச்சந்திரன், சத்தியகீர்த்தி, நாரதர், "**சத்தியவான் சாவித்திரியில்**" சத்தியவான், நாரதர், இயமன், "**அல்லி அருச்சுனாவில்**" அருச்சுனன், கிருஷ்ணர்,

"**ஞானசௌந்தரியில்**" தர்மர், பிலேந்திரன், "**நல்லதங்காளில்**" நல்லதம்பி, "**பக்த நந்தனாரில்**" நந்தனார், "**பவளக்கொடியில்**" அருச்சுனன், கிருஷ்ணர், "**பூதத்தம்பியில்**" பூதத்தம்பி, "**வள்ளி திருமணத்தில்**" வேடன், விருத்தன், நாரதர், "**மார்க்கண்டேயரில்**" மார்க்கண்டேயர் எனப் பல்வேறு நாடகங்களிலும் பலவிதமான பாத்திரங்களை ஏற்றிருக்கின்றார். அத்தோடு கதாபாத்திரம், துணைப் பாத்திரம், என்ற பேதமின்றி எதையுமே உயர்வாகக் கருதி நடிக்கும் ஒரு தனித்துவமான கலைஞரே கே.வி.நற்குணம்.

1994ஆம் ஆண்டு வெள்ளுருவை நின்ற அத்தாய் (சின்னத்தாய்) பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்திலே தன்னுடைய மாணவர்களான இசைநாடகபூபதி செ.இரத்தினகுமாரைச் சத்தியவானாகவும், நாடகச் சக்கரவர்த்தி ப.பரராஜசிங்கத்தை இயமதர்மனாகவும், மகன் இசைநாடகக் கலைஞர் இரகுவை சுமாலியாகவும் மேடையேற்றித் தன்னுடைய வாரிசுகளின் வளமான நடிப்பினைத் தனது கிரீடமாகச் சூட்டியவர் நற்குணம். அந்நாடகத்தில் நற்குணத்தின் ஏனைய மாணவர்கள் பலரும் துணைப் பாத்திரங்களை ஏற்றமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்தின் புகழ்பூத்த கலைஞர்களான எம்.பி.அண்ணாச்சாமி, ச.தம்பி ஐயா, வி.வி.வைரமுத்து, சீ.ரி.செல்வராஜா, வி.என்.செல்வராஜா, க.பரஞ்சோதி, வி.கே.இரத்தினம், பொ.தைரியநாதன், ப.பரராஜசிங்கம், வ.செல்வரத்தினம், நா.கணபதிப்பிள்ளை, த.கண்ணதாசக் குருக்கள், செ.இரத்தினகுமார், க.கனகரத்தினம், சரவணமுத்து, வேலாயுதம், இரகு போன்றோருடன் பல அரங்குகளில் சேர்ந்து நடித்துள்ளதோடு, அவர்களின் அரங்க ஆற்றல், ஆற்றுகைப் பண்புகளை நாம் அறிந்து கொள்ளவும் வழிவகுத்தவர் கே.வி.நற்குணம்.

அத்தோடு தனக்குப்பின் ஒரு தனித்துவமான மாணவர் பரம்பரையை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. இன்று

இசை நாடகத்துறையில் சிறந்து விளங்கும் ப.பரராஜசிங்கம், செ.இரத்தினகுமார், த.கண்ணதாசக்குருக்கள், க.கனகரத்தினம், ந.இரகு ஆகியோர் இவருடைய மாணவர்களே.

இவருடைய நடிப்பாற்றலைப் பாராட்டி 1955ஆம் ஆண்டு கரவெட்டி மேற்கு முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெற்ற விழாவில் கலையரசு சொர்ணலிங்கம் "நாடகத்திலகம்" என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தார். தகுதி வாய்ந்த ஒருவரால் தகுதி வாய்ந்த ஒருவர் கௌரவிக்கப்பட்டதால் "நாடகத்திலகம்" எனும் விருது பெருமை பெறுவது காலத்தின் பதிலாகி விடுகிறது.

ஈழத்து இசை நாடக அரங்கினில் பல்வேறு உணர்வு நிலைப்பட்ட பாத்திரங்களை ஏற்று நடித்த கே.வி.நற்குணம் தன்னுடைய இறுதிக் காலங்களிலும் வன்னியில் பல இளைய இசைநாடகக் கலைஞர்களுடன் தன் பணியைத் தொடர்ந்தவர்.

ஏழ்மை அவரை வாட்டியபோதும், ஏழ்மையன் அல்ல, நான் பெருஞ்செல்வன் என்று இசைநாடகத்தால் நிரூபித்த கே.வி.நற்குணம் 2000ஆம் ஆண்டு இறையடி சேர்ந்தார். அவருடைய கலையாற்றலை, கலைநுட்பங்களை அவர்தம் மாணவர்களிடம் இருந்து அறிந்து அதனை நிலைநிறுத்துவதே நாமெல்லாம் அவருக்குச் செய்யும் அன்புக் கடனாகும்.

பாரம் புகன்ற பணியாளர்

எம்.என்.சிவசுப்பிரமணியம்
(சிவப்பண்ணா)
மாதனை கலைவாணி
வினோதகான நாடக இயக்குனர்.

துன்னையம்பதி தனில் தவழ்ந்து
தூயமரபினில் வாழ்ந்து
நண்ணினற்கு நயந்த பரஞ்சோதி
மண்ணை விட்டகன்ற சேதி

நெஞ்சம் பதைக்கின்றது
நீர் விழியால் சொரிகின்றதே
மஞ்சு செறிகார் குழலார்
மனம் மொழி கலங்கிநின்றதே

கள்ளமில்லாத சிறுவர் சிறுமியர்
தள்ளரும்காதல் காளையர் கோதையர்
தளர்ச்சியுடைய முதியோர் உள்ளம்
கிளர்ச்சியுடையா மலர்ச்சியுற வைப்பர்

நாடகத்தில் பெற்ற பாத்திரத்தில் - தானும்
நம்மிலும் நீ நடித்திட நல் ரசிகர் கூட்டம்
நாடகத்தின் குருசிலென போற்றநாளும்
நண்பனுயர் குருவுற்றாராக்கினோம்

நெற்றித் திருநீறும் சந்தனமும் மிலங்க
வெற்றித் திருவாயில் ஐந்தெழுத்தும் விளங்கும்
சைவத்திருவுருவை கவர்ந்து சென்றாயோ
வைவச்சுதனே நின் கொடுமைதானென்ன.

என் திசை காட்டி சரிந்துவிட்டது

துன்னையூர்
வே.செந்திவேல்
மேல் அல்வை திக்கம்.

பரமசிவன் திருநாமம் புனைந்த
பரஞ்சோதியின் நற்புகழை கவி வடிக்க
நாமகளே என நாவில் வாருமம்மா - கருணையுடன்
கலைமகளே உந்தனை கரம் கூப்பி வேண்டுகின்றேன்

1. கட்டிய வேட்டியும் கை முட்டச்சட்டை குறி மடிப்பு
இட்டதோர் சால்வை அணிந்திறு மாப்புடன் ஏறி வந்து
எம் சபைதனிலே நீ பேசக் கேட்டவர்கள் இனி
எம் சபைதனை நாடுவரோ இல்லை நைந்தனமே

2. ஒழுக்கமாய் பாடியமர்ந்து உயர்ந்த நல் நடிகனாகி
விருப்பமாய் கடமைபூண்டு மிக்க தொண்டாற்றி
அழுத்தமாய் வாழ்நாளெல்லாம் வாழ்ந்த
பழுத்த எம் சோதி அண்ணன் அவர்களே

3. கண்டி அரசன் நாடகத்தில் களிப்புடன்
நல் மந்திரி பதவியேற்று நகைச்சுவை மன்னனாகி
நல் மேடையில் ஓர் நடிகனாய் சரித்திரப்
புகழ் படைத்து சிறப்புற துன்னையில் வாழ்ந்தாய்

4. இளைத்தவர்க் கூன்று கோலாய் இணையிலா நடிகர்க்கெல்லாம்
குழைத்த நல்தூண்டுகோலாய் குலவிட வாழ்ந்த
சளைத்திடா தன்னைத்தேடி சார்ந்தோரை தானும் தேடும்
உளத்தினர் சோதிசெய் உதவியை நாம் மறவோம்

5. மனத்தினிற் சிறப்பினால் நல்வாழ்க்கையின் துணைவியாலே
வனப்புடை மக்களாலே மருகரால் மாட்சி பெற்று
இனத்திற்கும் பொதுத்தொண்டிற்கும் இணையிலாத்தொண்டனாகி
நினைப்புற துன்னையம்பதியில் நீதி மன்னவனாய் வாழ்ந்தாய்

6. ஊருக்கு நல்லவர் உற்றார் அயல் பிறருனை சுற்றம்
யாருக்கும் நல்லவர் எல்லோருக்கும் சோதி உதவுகுணம்
பேருக்கு நல்லவர் ஆவி துறந்தினர் ஈசனது
ஊருக்கு நல்லது சொலவே போயினன் ஓ சதியே

துன்னையம்பதியின் வளமான வித்து
தமிழ்கூறும் நல்லுலகின் தனிப்பெரும் சொத்து
அணைந்தது எம் அன்புத் தீபம்
எம் இனிய கலைஞனே பரம்சோதி
உமது கலகலப்பின்மையால் களையிழந்துவிட்டது துன்னை மண்

உமது இடைவெளியை நிரப்ப யாராலும் முடியாது
பழக இனியவனே பார்வைக்கு எளியவனே
உங்கள் முகம் கண்டதும் ஒரு பாட்டுக் கேட்பேன்
இனி அந்த முகம் எங்கே? பாட்டு எங்கே?
என்னைக் கண்டதும் தத்துவங்கள் சொல்வீர்
இனி அந்த வாய்மை யார் சொல்வார்
என் திசைகாட்டி சரிந்துவிட்டது
நான் திசை தெரியாமல் தேற்ற வழி தெரியாமல்
கண்ணீர் சொரிந்து கலங்கி நிற்கின்றேன்

மரணங்களால் கலைஞர்கள் மடிவதில்லை

கவிஞர் பெ.ஜங்கரன்,
அகில இலங்கை இளங்கோ கழகம்,
புலோலி.

இராகங்களிற்கு ஆலாபனை
கற்றுக் கொடுத்த
கலாபூசணம் நீ!

சிந்தும் மழைகளிற்கு
சிந்து பைரவி பயிற்றுவித்த
விசித்திரக் கலைஞன் நீ!

தேனீக்களிற்கு
தேன் உண்டு
இசைபாடும் முறைமையை
தெளிவித்தவன் நீ!

வானத்துப் பறவைகளிற்கு
கானத்தோடு
நாடகத்தின் இரகசியத்தையும்
நவின்ற
விஞ்ஞானி நீ!

இரசிகர்களிற்கு
கலை நிவாரணம் வழங்கிய
அரசாங்கக் கலைஞன் நீ!

வடபுல கலை இருக்குமட்டும்
விலைபெறும் உன்னுடைய
தடம் இருந்தேயாகும்
மரணத்தால் உன் கலைக்கு
மடிவே இல்லை.

இசைத் தமிழின் சுருதி சுரம் கெட்டு விட்டது

மயகீரதன்,
அகில இலங்கை இளங்கோ கழகம்,
புலோலி.

வடமராட்சிப் பதியில் வந்துதித்த முத்துக்களில்
வளமான நற்கலை முத்தாய்
சைவப் பெருமகனாய் துன்னையூர் பிறந்து
சைவத்தின் வாழ்விற்கு வளமதை ஊட்டி
ஊர் போற்றும் உத்தமனாய்
உறவாடும் கேசரியாய்
பாரில் விளங்கிடும் நற்பண்பாளனாய்
பாங்கான நற் கதைகள் பேசிச் சிரிக்க வைத்த சீர்மயனாய்
பார்க்கின்றேன் பாரில் விழி திகைக்கின்றேன் நீர் சொரிகின்றேன்
கலையுலகம் போற்றட்டும்
கலைக்கோர் கலாவிநோதனை
கலைக் கூடத்திற்கு ஓர் சிரஞ்சீவியாய் - மிளிரும்
முதுகலைக் காவலனாய்
முற்றம் எங்கும் இசை நாதமாய்
எம்மை எல்லாம் தொட்டுச் சென்ற
எம் இனிய கலை மாமணியே
நாதத்தின் ஓசை நனைகையிலே
நரம்பொன்று அறுந்து விட்டது
இசைத் தமிழின் சுருதி சுரம் கெட்டுவிட்டது
இசை உலகம் இன்று உமை
இழந்து தவிக்குதையா! ஐயகோ!
எம்மோடு பேசிய வார்த்தைகளின் கலகலப்பு
எம்மோடு உறவாடிய உறவின் உணர்ச்சிக் கலவை
எம்மோடு பாடிய பாவின்றமிழும்
உம்மோடு உதிர்ந்து நல் மணியானதுவே முகத்தில் தவழும்
புன்னகை அரும்புகள்
முதிர் கலையில் தவழும் கலையின் பாவம்

வண்ணச் சிறு தளிரின் கோலம் சிறகடித்துப் பறந்த
வசந்த காலத் தென்றல்
தரணியெங்கும் தவழ்ந்த கலை நாயகனாய்
தவத்திரு மகனாய் தமிழ் உலகம் போற்றும்
தமிழ்த் தாய் நோற்ற மைந்தனாய்
இசையின் நடிகனாய் சிறந்த நெறியாளனாய்
கலைஞானத்தில் "கலைஞானகேசரியாய்"
கவின்று எழில் பரப்பி
பூஞ்சோலையில்
பூத்துக் குலுங்கும் நன் மலராய்
இசை பரப்பி இவ் உலகின்
இல் வாழ்வை வாழ்வாங்கு
வளமுற அமைத்து
வாழ்வில்நல் முத்துக்களை ஈன்று
உனதுறு மைந்தனும் கலைஞானகேசரியாய்
திகழ்ந்து மணம் பரப்பும் பூவாய்
அறத்தின் செம்மையைச் செப்பமாய் - செய்
நற் தவப் பயனாய் சரிந்த இமயமே
வாழ்வுப் பூந்தோட்டத்தில் நன் மலராய்
வாழ்ந்து மடிந்த மலரின் சோதி
கலைக்கு மகுடமாய்
உலகிற்குச் சோதியாய்
ஓதுமப்பேருடைய உத்தமனே
ஓதும் இசையில் உளமதைக் கொண்டு
கலையின் வாழ்வை கருத்தொருமித்து
இல்லற வாழ்வை வளத்துடன் ஆக்கி
அறநெறி நின்று அருள் நெறி ஓங்கி
அவனியில் வாழ்வை அகத்தொருமித்து
இன்று இவனிசை ஏகினன்
பாதச் சுவடுகள் மலர வேண்டும்
பாரினில் மலர்கள் மணம் வீச வேண்டும்.

எப்பிறப்பில் காண்போம் இனி!

ம.குந்தவி
கொ/இராமநாதன்
இந்து மகளிர் கல்லூரி,
கொழும்பு – 04

மௌனமாய் எம் கனவுகள்
மரணித்துப் போயின
சுவாசம் கூட சில நொடிகள்
தடைப்பட்டுப் போனது

எழுத நினைத்த கவிதைத் தாள்கள்
வரையப்படாமலேயே வெற்றிடமாய்.....
எம் உணர்வுகள் பரிதாபமாய்
மரித்துப் போய் புதை குழியில்.....

ஐயா! என நாம் அழைத்த
அன்புடையே! எங்கே நீர்!
மீண்டும் இப் பூவுலகில்
"கலைஞான கேசரியாய்" வந்து துதிப்பீர்!

இசை நாடக உலகின் நாதமே
நின் புகழ்தனை அறிகையில்
எம் மனமெங்கும் அதிர்வுகளாய்
ஓராயிரம் ஓவிய ஸ்வரங்கள் ஒலிக்கின்றது!

சிரித்த முகமதனில்
நேர் கொண்ட பார்வைதனில்
கறைகள் நாம் கண்டதில்லை
கலங்குகின்றோம் கதறுகின்றோம்.

கலைஞனாய் வாழ்ந்து மடிந்த
கலங்கரை விளக்கம் நீங்கள்-தம்
கழல் தொழுது எம் வாழ்வின்
கரை சேர்வோம் அறியீரோ!

நல் முத்தாய் தரணியிலே
அறுவரை ஈன்று - அவர் தம்
பிள்ளைச் செல்வங்களை
பிரியமுடன் வாழவைத்த திறமுடையோய்.

பார் புகழும் பாடகனாய்
நெறியாள்கை வித்தகனாய்
இசைத் தமிழின் ஆசானாய்
பரிமாணம் பல எடுத்தீர்

எண்ணச் சிதறல்களில் எல்லாம்
பூவாய் உம் அழகு முகமும் ஆற்றலும்
புண்ணியனே உன் திருவடிவம் தனை
எப்பிறப்பில் காண்போம் இனி!

மூத்த இசை நாடகக் கலைஞர்

"கலைஞானகேசரி" கணபதிப்பிள்ளை பரஞ்சோதி

சந்தித்தவர் –க. அருளானந்தன் B.A Dip in Mass.Com

"ராகத்தில் சிறந்தது: நாட்டைக் குறிஞ்சி". இந்த ராகத்தில் நல்லதங்காள், காத்தவராயன், வீரகுமாரன் நாட்டைப் பண் கூத்துக்கள் 1910, 1915களில் வல்லிபுரக் கோயில், நெல்லண்டை, பத்திரகாளிகோயில், புற்றளைப் பிள்ளையார் கோயில், கோயிற்கடவை பிள்ளையார் கோயில்களில் நிகழ்வுற்றன. வெள்ளை கட்டிய மேடையில் வாழைக்குற்றி (தேங்காய் - தேங்காய் எண்ணெய் - பழையசீலை) விளக்கு ஒளியில் நடிக்கப்பட்ட இந்த அண்ணாவி மரபுக் கூத்துக்கள் பெரும்பாலும் தும்பளை, புற்றளை ஊர்களிலேயே நிகழ்வுற்றன. சிந்து நடைக்கூத்து : சிந்து கண்டாகராகத்தில் தாள வேறுபாடுகளுக்கு அமைய அதற்கான துள்ளுநடையில் நடிக்கப்படுவது இந்த இரு வகைக் கூத்துக்களுக்கும் மத்தளம், உடுக்கு, கைத்தாளம், ஆகிய வாத்தியங்களுடன் : பாடல்களுக்குப் பிற்பாட்டுக்காரரும் இருப்பார்கள். அண்ணாவி மரபுக் கூத்துக்களில் நடிப்பவரிடம் உடல்வாகு, சாரீரம் (குரல்வளம்), சங்கீதஞானம் (கேள்விஞானமாகவும்), என்பனவுக்கே கவனம் செலுத்தப்பட்டது. கூத்துப்பழகுதல், பாடல்கள், நடிப்புமுறை, குரு பக்தியாகவே இடம்பெற்றன. திகிரி(அறுபது பாகைக் கிணற்றடி) அமரர் "அண்ணாவி தாமு" என்பவர் புற்றளைப் பிள்ளையார் கோயிலில் இராமாயணக் கூத்தை மேடையேற்றி வந்தவர். இவரின் கூத்துக்குரிய பாரம் கூடிய முடிகள், அணிகலன்கள் புற்றளைப் பிள்ளையார் கோயிலில் பேணப்பட்டு வந்தமை நான் கண்கூடாகக் கண்டவை. இந்த இராமாயணக் கூத்தில் தும்பளையைச் சேர்ந்த "செல்லர்" என்பவர் "அநுமான்" பாத்திரத்தில் தத்ரூபமாக நடித்தார். இவர் தனது அநுமான் வேடத்துக்குரிய ஆடை, அணிகலன்கள், வால் உட்படத் தனியாகத் தனக்கென வைத்திருந்தார். அல்வாயில் வாழ்ந்த அண்ணாவிகளான: : அமரர் ச.தம்பிஐயா, பெரியபொடி, குண்டுமணி

மயான காண்டத்தைக் கூத்தாக நடித்தவர்கள். பிறருக்குப் பழக்கி மேடையேற்றியவர்கள். எனது நண்பனும், ஈழத்து இசை நாடக மரபில் தனக்கெனத் தனியான பாணியையும், தனது தலைமையில் புதிய இசை நாடகக் கலைஞர் மரபினை உருவாக்கியவருமான அமரர் நடிகமணி வி.வி.வைரமுத்து மயானத்தில் நின்று பாடும் பாடலான:

"பிறந்தது மண் மேல்....."

என்பதற்குப் பதிலாக அல்வாய் அண்ணாவி தம்பிஜயா தமது மயானகாண்ட நாடகத்தில்..... மயானத்தில் அரிச்சந்திரனாக நின்று பாடிய பாடல்

(பல்லவி)

"ஆதி சிவ சங்கரனே அடியேன் இச் சுடலை வர...."

(அநுபல்லவி)

"பாதிமதி சடையணிந்தே சங்கரனும் பார்வதியும்...."

என அமைந்திருந்தன. இந்த அண்ணாவி ச.தம்பிஜயாவின் மகனே கலாநிதி.த.கலாமணி. இவரும் சிறந்த நடிகர், நாடக ஆய்வாளராக விளங்குகின்றார். நடிகமணி வி.வி.வைரமுத்துவைப் போல் என் மதிப்புக்கும் அன்புக்கும் உரிய நண்பர்களாக: ஈழத்து இசை நாடக வரலாற்றில் தனியிடம் பெறும்: "சுபத்திரை ஆழ்வார்" (கரவெட்டி அமரர் எம்.பி.கிருஷ்ணாழ்வார்) ஒரு பிறவி நடிகர். வாணி அருள் பெற்ற கவிஞருமாவார். ஆழ்வாருக்கு நிகர் அவரேதான். "கண்டி ராஜன் மகாலிங்கம்" (கோயிற்கடவை அமரர் ஆ.மகாலிங்கம்) தனித்துவமானவர். ஏனெனில் இவர் இசை நாடக நடிகரும், மிருதங்க வித்துவான் ஆகவும் புகழ் பெற்றவர். இவர் எமது ஊரில் பபூன் நடிகராகப் புகழ் பெற்று விளங்கிய கோயிற் கடவை ஆ.சிதம்பரப்பிள்ளையின் தம்பி. மகாலிங்கத்துடன் நான் இணைந்து பல இசை நாடகங்களில் நடித்தும் உள்ளேன்."

"துன்னாலை வடக்கு கணபதிப்பிள்ளை தம்பதிகளின் மகனாகப் பிறந்த நான், எனது இளமையிலேயே இசை நாடகக் கலையில் நாட்டமும், ஈடுபாடும் கொண்டேன். இதற்கு எனது குடும்பத்தினரின் இசை நாடக ஆர்வமே காரணம். வடமராட்சியின்

புகழ் பெற்ற அண்ணாவிமார்களான தாமு (திகிரி), ச.தம்பி ஐயா (அல்வாய்), சுபத்திரைஆழ்வார் (கரவெட்டி), பெரியபொடி (அல்வாய்), "ஐயாமாமா" கந்தவனம் (நெல்லியடி) ஆகியோரின் இசை நாடக நடிப்பாற்றல்களும் அவர்களுடன் கொண்ட தொடர்புகளும் எனக்கு இசை நாடகத் துறையில் இடம் தேடித்தந்தன. மயான காண்டத்தில் நட்சத்திரன் - காலகண்டர், வள்ளி திருமணத்தில் நாரதர் - விருத்தன், மகாபாரதம் - பாஞ்சாலி சபதம் நாடகங்களில் விதுரர், காத்தவராயர் சிந்து நடைக்கூத்தில்: சிவன், சத்தியவான் சாவித்திரியில்: சுமாலி முதலிய பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளேன். துன்னாலை அப்பா சாமி ஐயர், தெடசணாமூர்த்தி ஐயர் சிறந்த இசைநாடக நடிகரும், நாடகாசிரியரும், நெறியாளருமாவார். இவரின் பரம்பரையில் வந்த தம்பையா ஐயரும் இசை நாடகக் கலைஞராவார். தம்பையாஐயரின் மகன் த.கண்ணதாசஐயர் சிறந்த ஸ்திரிபாட் நடிகர். சிந்து நடைக்கூத்தில் முத்துமாரி பாத்திரத்தில் இன்றும் தனக்கென ஒரு தனிப் பாணியை இவர் அமைத்து வருகின்றார்.

"எனது இசை நாடக ஆர்வம், ஈடுபாடுகளால் எனது மூத்தமகன் ப.பரராஜசிங்கம், துன்னாலை கலாசார மன்றத்தின் "சிலம்புச்செல்வி" இசை நாடகத்தில் (1970ல்) கோவலன் பாத்திரம் ஏற்க வைத்துஇசை நாடகத் துறைக்கு அறிமுகமாக்கினேன். அவர் தனது குரல்வளம், நடிப்பாற்றல், தோற்றப் பொலிவால் கோவலன், துரியோதனன், எமதர்மன் பின் அரிச்சந்திரன், காத்தவராயன் பாத்திரங்களில் சிறப்பித்துப் பேசப்படுகின்றார். எனது இளைய மகன்களான க.ப.தனபாலசிங்கம், க.ப.தெய்வேந்திரராஜா, க.ப.சிவராஜசிங்கம் ஆகியோரும் இசைநாடக நடிகர்களாவார்".

"அண்ணாவி மரபு நாட்டக்கூத்துக் கலைஞர்கள், மூத்த இசை நாடகக் கலைஞர்கள், என் காலத்து இசை நாடகக் கலைஞர்கள், இன்றைய இசை நாடகக் கலைஞர்கள் என நாலு தலைமுறையினருடன் வாழும் பெரும்பேறு பெற்றவனாக இருப்பதற்கு இறைவனுக்கும் கலைவாணிக்கும் நன்றி கூறுகின்றேன். இன்று அண்ணாவிமரபுக் கூத்துக்கள் மிகவும் அருகி விட்டன. இசை

நாடகங்களும் புதுமை பெற்று இசைப் பாடல்களுக்குக் குறைந்தளவு இடம் கொடுத்து உரையாடல் வடிவில் நிகழ்வுறுகின்றன. சினிமாப் பாடல்கள் கூட இசை நாடகங்களில் பாடி நடிக்கின்ற காலமாகிவிட்டமை வேதனை அளிக்கின்றது. சிந்து நடையிலான காத்தவராயன் கூத்து வடிவமும் பெருமளவுக்கு மாறிவிட்டது. அந்த அந்த மரபுக் கூத்துக்களை அந்த அந்த வடிவத்தில் பேண வேண்டும். அந்தப் பேணுகைக்குரிய வாய்ப்புக்களும் வசதிகளும் தொழில் நுட்ப முறைகளும் பெருகிவிட்ட காலம்: இன்றைய கம்பியூட்டர் யுகம் எமக்குரிய இக் கலைமரபுகளை அழியவிடுவோமாயின் நாளைய தலைமுறைக்கு எதனை விட்டுச் செல்லப் போகிறோம்? மனித மேன்மை, சமூக விழுமியங்களை எடுத்துக்காண்பித்த தமிழகச் சினிமாக்கள்கூட இன்று சமூகச் சீரழிவுக்கான கருக்கள், சிந்தனைகளைத் தருகின்றன. இதனால் எம்மை நாமே தொலைத்து விட்டு நிற்கும் அவல வாழ்வைச் சிருஷ்டித்து வருகின்றோம். இந்தப் புதிய பாணிக் கலைகள் எமக்குத் தேவைதானா? இவை தரும் சிந்தனைச் சிறுமைகள் எமக்கு வேண்டியவைதானா? அரசியல், பொருளாதார ரீதியில் நலிவுற்ற ஈழத்துத் தமிழினம், கல்வி கலைகளிலும் நலிவுற்றுப் போவதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கப் போகின்றோமா? கலைஞரைப் பேணிப்பாதுகாக்கும் வாய்ப்பற்ற ஈழத்துத் தமிழினம், இருக்கும் கலை மரபுகளைப் பேண முன்வர வேண்டும் என்பது எனது வேண்டுகோளாகும்".

"திறமைகள் வளரப் பாராட்டுக்கள் அவசியம். எமக்கெனக் கலைமரபுகள், தனிப்பண்பாடுள்ள இனமாகிய நாம், இன்றைய கலைஞர்கள், வீரர்களுக்குக் காண்பிக்கும் உற்சாகம், பாராட்டுக்கள் உண்மையாக இருக்க வேண்டும். திறமையானவர்களை இனம்கண்டு போலிமுகஸ்துதி செய்யாத, கௌரவித்தல், பாராட்டுதல் சமூகக் கடமைகளாகும். எமது பிரதேசத்தின் நாடகக் கலை மரபுகளுக்கு உரிய மதிப்பும் கௌரவமும் கிடைக்க வேண்டும். இன்றைய பாராட்டுக்கள் - விருது வழங்கல்கள் யார் யாருக்கு எதற்காக வழங்குகின்றோம் என்ற அர்த்தம் மேன்மை பெற வேண்டும். 1940களில் நடிகர்களின் பாத்திர ஒப்பனை அந்தந்த நடிகர்களின் வீடுகளில்

இடம்பெறும். ஒப்பனை முடிந்ததும் குடும்பத்தவர், உற்றார், உறவினர், அயலவர் புடைசூழ பரந்த வெளிச்சத்தில் கூத்து நடைபெறும். களத்திற்கு அந்த நடிகரை அழைத்து வரும் சிறப்பு நிலவியது. கூத்தாடும் போதே நடிகரின் திறமைக்கு உடனுக்குடன் பாராட்டுக்கள், பரிசுகள் பார்வையாளர்களால் வழங்கப்பட்டன. நடிகர்களிடம் போட்டி, பொறாமை இருந்தன. சிலவேளைகளில் மேடையில் இவை காரணமாக: சிறந்த வகையில் தனி ஆற்றல் வெளிப்பட்ட நிலைமைகளும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். எமது பிரதேசத்தின் சாதியமுறையின் இறுக்கமான சூழலிலும் நாடக அரங்குகளில் சாதிய வேறுபாடு கடந்த சமூக நிலையே காணப்பட்டது. வேற்றுமையைக் காண முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட சாதியினரின் நாடகத்தின் நிகழ்வுக்குப் பல சாதியினரும் பார்வையாளராகவும், பங்காளர்களாகவும் இருந்துள்ளனர். இந்நிலை இன்றும் தொடர்கின்றது".

(நன்றி : இந் நேர்காணல் க.அருளானந்தனின் "அரங்க ஆற்றுகைகளும் ஆய்வு வழிகாட்டியும்" என்ற நூலிலிருந்து பெறப்பட்டது.
– இது ஒரு மறு பிரசுரம்)

கலைஞானகேசரி க.பரஞ்சோதியோடு தொடுத்தவன் ~ நாகாஸ்திரன்

நாகாஸ்திரன் – வணக்கம் கலைஞர் அவர்களே!

பரஞ்சோதி – வணக்கம் தம்பி.

நாகா – ஈழத்தின் மூத்த இசைநாடகக் கலைஞராக, இசை நாடகத்துறையின் பொக்கிசமாக விளங்கும் நீங்கள் உங்கள் கலைப்பிரவேசம் பற்றிச் சொல்லுங்கள்.

பரஞ் – நான் பெரிதாகப் படித்தவனல்ல, ஆயினும் கலைமகளினுடைய கடாட்சத்தைப் பெற்றுக் கொண்டவன். இயல்பாகவே தமிழாற்றல், கலையாற்றல் என்பன கைவரப் பெற்றவன். சிறு வயதிலிருந்தே கலைத்துறையில் எனக்கு ஈடுபாடு இருந்தது. 30ஆவது வயதில் இருந்துதான் என்னை முழுமையாகக் கலைத்துறைக்கு அர்ப்பணித்தேன்.

நாகா – ஈழத்து இசை நாடகத் துறையில் உங்களை நீக்கிப்பார்க்க முடியாத அளவிற்கு வளர்ச்சி கண்டிருக்கிறீர்கள். இவ்வளர்ச்சியில் உங்கள் குடும்பப் பின்னணி எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

பரஞ் – நான் ஒரு பரம்பரைக் கலைஞன். என்னுடைய மாமன் கந்தையா சிறந்த இசை நாடகக் கலைஞன். அவர் கோவலனாகத் தோன்றும் காட்சி இன்றும் என் மனக் கண் முன் இருக்கிறது. நான் ஆறு பிள்ளைகளினுடைய தந்தை. ஆறு பிள்ளைகளினுடைய சுமையையும் தான் தாங்கிக் கொண்டு, என்னைக் கலையைச் சுமக்க

வைத்தவள், என் மனைவி. அவள் சரஸ்வதி, என் பிள்ளைகளும் என்னை வளர்த்தவர்கள். என்னோடு கலைப் பயணத்தைத் தொடர்ந்தவர்கள்.

நாகா – நீங்கள் இசைநாடகத் துறைக்கு எந்தெந்த வகையிலே பணியாற்றி இருக்கிறீர்கள்.

பரஞ் – நடிகனாய், நெறியாளனாய், நாடக ஆசிரியனாய் என்னால் இயன்ற பணியைச் செய்திருக்கிறேன்.

நாகா – நடிகர்களை, பிரதான பாத்திரம் ஏற்பவர்கள், துணைப் பாத்திரங்கள் ஏற்பவர்கள், பபூன் போன்ற நகைச்சுவைப் பாத்திரம் ஏற்பவர்கள் என்றெல்லாம் வகைப்படுத்தலாம். இசை நாடக நடிகன் என்ற ரீதியில் நீங்கள் எத்தகைய பாத்திரங்களை ஏற்றிருக்கிறீர்கள்?

பரஞ் – இன்று பிரதான பாத்திரங்களை ஏற்பவர்கள் துணைப் பாத்திரங்களை ஏற்க விரும்புவதில்லை. எங்களுடைய பாரம்பரியம் வித்தியாசமானது. என்னுடைய இனிய நண்பர்களாகிய சுபத்திரை ஆழ்வார், கரவெட்டி கே.வி.நற்குணம், மாதனை ந.சிவசுப்பிரமணியம் போன்றோர் கதாபாத்திரங்களை மட்டுமன்றி துணைப் பாத்திரங்களைத் தாங்கியும் மேடைகளை அலங்கரிப்பதுண்டு. இது போலத்தான் நானும் கதாநாயகனாயும் நடித்திருக்கிறேன். துணைப் பாத்திரங்களையும் ஏற்றிருக்கிறேன். பபூனாகவும் தோன்றியிருக்கிறேன். இந்த இடத்தில் ஒன்று சொல்ல விரும்புகின்றேன், ஏற்கும் பாத்திரத்திலல்ல நடிகனுக்குச் சிறப்பு, ஏற்கும் பாத்திரத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறான் என்பது தான் சிறப்பு.

நாகா – நீங்கள் நடித்த இசைநாடகங்களையும் ஏற்ற பாத்திரங்களையும் கூற முடியுமா?

பரஞ் – சொல்கிறேன்.

நாடகம்		பாத்திரங்கள்
அரிச்சந்திரா	:	சத்தியகீர்த்தி, காலகண்டஐயர், நட்சத்திரதரகர், தெய்வேந்திரன்.
இலங்கேஸ்வரன்	:	இராவணனின் ஆஸ்தான இசை வித்துவான்.
ஏழு பிள்ளை நல்லதங்காள்	:	காசிராசன்.
கண்டியரசன்	:	ஏலப்பொல.
சத்தியவான் சாவித்திரி	:	நாரதர், தூய்மைச்சேனன், அசுபவதி, சுமாலி.
ஸ்ரீ முருகவேள்	:	விருத்தன், நம்பியரசன், நாரதர்.
சிலம்புச் செல்வி	:	பரதன், மாசாத்துவன், மாமா, வஞ்சிப்பத்தன்.
பாஞ்சாலி சபதம்	:	திருதராட்டினன், விதுரன்.
மார்க்கண்டேயர்	:	மார்க்கண்டேயர்.

இவற்றை விட காத்தவராஜன் சிந்து நடைக்கூத்தில் சிவனாகவும் நடித்திருக்கிறேன்.

நாகா – பல பாத்திரங்களை நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள், இதில் உங்களுக்கு மிகவும் பிடித்தமான பாத்திரம் எது?

பரஞ் – எந்தப் பாத்திரத்தை ஏற்கின்றேனோ, அந்தப் பாத்திரத்தைத் திறம்படச் செய்ய வேண்டுமென்று நினைக்கின்றவன். நான் நடித்த எல்லாப் பாத்திரங்களுமே எனக்குப் பிடிக்கும்.

நாகா – வி.வி.வைரமுத்து அவர்கள் பல பாத்திரங்களை ஏற்றிருக்கிறார். ஆனால் அவருக்குப் பெரும் புகழைத் தேடிக் கொடுத்தது அரிச்சந்திரன் எனும் பாத்திரம். அது போல உங்களுக்கு அதிக புகழைத் தேடித் தந்த பாத்திரமாக எதையும் கூற முடியுமா?

பரஞ் – எனக்கு எல்லாப் பாத்திரங்களுமே புகழைத் தேடித் தந்தன. கண்டியரசன் மகாலிங்கத்தோடு ஏலப் பொலவாகத் தோன்றிய காட்சி, சுபத்திரை ஆழ்வாரோடு சேர்ந்து நடித்த காலங்கள், நற்குணத்தோடு மேடையை அலங்கரித்த சந்தர்ப்பங்கள். இவ்வாறு அடுக்கலாம் என்னுடைய அருமையான சந்தர்ப்பங்களை.

நாகா – உங்கள் இசை நாடக வாழ்விலே மறக்க முடியாத ஒரு சம்பவம் கூறுங்கள்.

பரஞ் – சம்பூர்ண அரிச்சந்திராவிலே பல பாத்திரங்களை ஏற்பேன். அவற்றில் ஒன்று காலகண்டஐயர். சந்திரமதியையும் லோகிதாசனையும் காலகண்டஐயர் துன்பப்படுத்துகின்ற காட்சி இந்த நாடகத்தில் உண்டு. நான் லோகிதாசனையும், சந்திரமதியையும் துன்பப்படுத்துவதைப் பார்த்த எனது ரசிகர்கள் "டேய் கல்நெஞ்சா பரஞ்சோதி இறங்கடா மேடையை விட்டு" என்று கத்தினார்கள். இச் சம்பவத்தை என்னால் மறக்க முடியாது. இது நான் பெற்ற வெற்றி என்று நினைக்கிறேன். இந்த இடத்திலே

கலையரசு சொர்ணலிங்கத்தினுடைய அனுபவத்தையும் உங்களுக்குச் சொல்லலாம் என நினைக்கிறேன். விசுவாமித்திரராகத் தோன்றிய போது சபையிலிருந்து செருப்பு வந்து விழுந்ததாம்.

நாகா – பாத்திரமாக மாறுதல், பாத்திரம் போல மாறுதல் என்ற இரண்டு கருத்துக்கள் உண்டு. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பரஞ் – நடிகன் பாத்திரமாக மாறக்கூடாது. அது பல விபரீதங்களை உண்டு பண்ணி விடும். பாத்திரம் போல மாற வேண்டும்.

நாகா – நீங்கள் பல தலைமுறைகளைக் கண்ட கலைஞன். உங்களோடு இணைந்து நடித்த சில கலைஞர்களின் பெயர்களைக் கூறுங்கள்.

பரஞ் – சுபத்திரை ஆழ்வார், சின்னையா தேசிகர், சந்திரா, மல்லிகாதேவி, கனகா, இராமலட்சுமி, சீ.ரி.செல்வராஜா, வி.என்.செல்வராஜா, எம்.ஏ.மகாலிங்கம், கே.வி.நற்குணம், அண்ணாவி கணபதிப்பிள்ளை, ந.சிவசுப்பிரமணியம், பொ.தைரியநாதன், அ.தெட்சணாமூர்த்திஐயர், வ.செல்வரத்தினம், ப.பரராஜசிங்கம், த.கண்ணதாசக் குருக்கள், சரவணபவான், சரவணமுத்து, செ.இரத்தினகுமார்.

நாகா – சின்னையா தேசிகர் போன்ற தென்னிந்திய நடிகர்களோடும் நீங்கள் நடித்திருக்கின்றீர்கள். அவர்களோடு நடிக்கும் போது உங்களுக்குக் கிடைத்த அனுபவம் பற்றிக் கூறுங்கள்.

பரஞ் – அந்தக் காலங்கள் அற்புதமானவை. அவர்களிடமிருந்து பல விடயங்களை நாம் கற்றிருக்கிறோம். அவர்களில் இருந்து நாம் எவ்விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிப்தற்காக மிகவும் போட்டியாக

நடித்திருக்கிறோம். சுபத்திரை ஆழ்வாருடைய நடிப்பாற்றலை வியந்து அவரைத் தமது தாயகத்திற்கு அழைத்துச் சென்று அவரை நடிக்க வைத்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

நாகா – நீங்கள் சிறந்த நெறியாளர். அண்மையிலே நீங்கள் நெறியாள்கை செய்த இசை நாடகம் என்ன?

பரஞ் – கலை ரசிகர்கள் என்னை நேசித்துக் கொண்டு இருந்த பொழுதே கலை உலகில் இருந்து பிரியாவிடை பெற்றவன். "இப்பவும் இவன் ஏன் நடிக்கிறான்" என்று ரசிகர்கள் சொல்வதை விரும்பாதவன். "இன்னும் பரஞ்சோதி நடியானோ" என்று எதிர்பார்த்த காலத்திலேயே விடை பெற்றுக் கொண்டவன். 1998ஆம் ஆண்டு "சத்தியவான் சாவித்திரி" என்ற இசை நாடகத்தில் தூய்மைச்சேனன் என்ற பாத்திரத்தோடு விடை பெற்றுக்கொண்டேன். நிறைவாக நான் நடித்த இடம் நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம். அந்தக் காலப் பகுதியிலேயே நாடகத்தினை நெறியாள்கை செய்வதனையும் நிறுத்திக் கொண்டேன். ஆயினும் 2003ஆம் ஆண்டு என்னுடைய மூத்த மகன் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பழக்கிய "காலனை வென்ற காரிகை" என்ற இசை நாடகத்தை ஒரு நாள் நெறியாள்கை செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அதுதான் நிறைவாகச் செய்த நெறியாள்கை. இனி என் உடல்நிலை இதற்கு இடம் கொடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.

நாகா – இசை நாடகங்களை எழுதுவதில் உங்களுடைய பணி எந்த அளவில் இருந்தது.

பரஞ் – என்னுடைய இனிய நண்பர் பிரம்மஶ்ரீ அ.தெட்சணாமூர்த்திஐயர் மிகச் சிறந்த இசை நாடக ஆசிரியர். பாஞ்சாலி சபதம், இலங்கேஸ்வரன்,

சிலம்புச்செல்வி, ஸ்ரீமுருகவேள், இராஜராஜசோழன், கிட்லரின் மனைவி தர்மபத்தினி போன்ற இசை நாடகங்களை எழுதியவர். அவர் எப்பொழுதுமே என்னோடு கலந்து ஆலோசித்து எழுதுவதுண்டு. சில வேளைகளில் சில விடயம் பற்றி நீண்ட வாதப் பிரதி வாதங்களை நிகழ்த்துவதுண்டு. இந்த வகையிலே இவரோடு இணைந்து செயற்பட்டதில் நாடக உருவாக்கத்திலும் சில பணிகளைச் செய்துள்ளேன் என்ற நிம்மதி எனக்குண்டு.

நாகா – இந்த இசை நாடகங்களையெல்லாம் பதிப்பிப்பதற்கு முயற்சி எடுத்திருக்கிறீர்களா?

பரஞ் – இன்று என்னை வாட்டுகிற பெரிய வேதனையே இதுதான். எங்களுடைய கலைப் பொக்கிசங்களை நாம் சரியாகப் பேணவில்லை. உரிய காலங்களிலே நாடகங்களை எல்லாம் பதிப்பித்து வெளியிட நாம் தவறிவிட்டோம். காலம் கடந்து விட்டதே என்று நினைக்கிறேன். ஆயினும் எனக்கு நம்பிக்கை உண்டு. எனது மூத்த பேரன் ரதீஸ் இவற்றில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறான். இருவருமாகச் சேர்ந்து சில இசை நாடகங்களைப் பதிப்பிப்பதற்கு முயற்சி செய்கிறோம். இனி நடக்கப் போவவையெல்லாம் இறைவன் கையில் தான் இருக்கின்றது.

நாகா – நீங்கள் ஏதாவது அமைப்புக்களினூடாக உங்களுடைய இசை நாடகப் பணியை ஆற்றியிருக்கிறீர்களா?

பரஞ் – ஆம். 1970 அளவில் நான், அ.தெட்சணாமூர்த்திஜயர், ஆர்.குலநாயகசிங்கம், வ.தங்கராசா ஆகியோர் இணைந்து துன்னையூர் இந்து கலாசார கலா மன்றம் என்ற பெயரில் ஒரு மன்றத்தை அமைத்தோம். அதனூடாக பாஞ்சாலி சபதம், இலங்கேஸ்வரன், சிலம்புச்செல்வி, ஸ்ரீமுருகவேள், இராஜராஜசோழன்

அந்நியர் வருகை, ஏழைக்குடிசையிலே, குடிகேடு, கிட்லரின் மனைவி ஒரு தர்மபத்தினி போன்ற இசை நாடகங்களை ஈழத்தின் பல பாகங்களிலும் மேடையேற்றி உள்ளோம். தற்போது இதன் செயற்பாடு குறைந்துள்ளது. நானும் தெட்சணாமூர்த்தி ஐயாவும் அகில இலங்கை இளங்கோ கழகத்தோடு இணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

நாகா – இளைய தலைமுறையினர் இசை நாடகத்துறையில் அக்கறை காட்டுவது இல்லை என்று குற்றச்சாட்டு இருக்கிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பரஞ் – இக் குற்றச்சாட்டை நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன். பல்கலைக்கழகங்கள் எல்லாம் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன. பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த சில மாணவர்கள் என்னிடம் வந்து தகவல்களைப் பெற்றுப் போகிறார்கள். யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பல இசை நாடகங்களை மேடையேற்றுகிறார்கள். நான் ஏலவே கூறியதைப் போன்று எனது மகன் நெறியாள்கை செய்த "காலனை வென்ற காரிகை" என்ற இசை நாடகம் கொழும்பில் மேடையேற்றப்பட்டு பலரினதும் பாராட்டைப் பெற்றதாக அறிந்தேன். இவ் இசை நாடகத்தில் பங்கு கொண்டவர்கள் முழுக்க முழுக்க இளைஞர்களே. இதே போன்று பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு எனது மகன் பழக்கிய "அரிச்சந்திரா மயான காண்டம்" கண்டி, கொழும்பு, போன்ற இடங்களில் மேடையேற்றப்பட்டதாக அறிந்தேன். அண்மையில் வடமராட்சியில் மேடையேற்றப்பட்ட "பாஞ்சாலி சபதம்" இசை நாடகத்தில் 20ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் மேடையை அலங்கரித்தனர். இவற்றைவிட இளைய தலைமுறையினர்

இசைநாடகம் தொடர்பான நுண்ணிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். எனவே இக்குற்றச்சாட்டு நியாயமற்றது என்றுதான் நினைக்கிறேன்.

நாகா – பல இடங்களிலும் உங்கள் மகன் பற்றிக் கூறுகின்றீர்கள் உங்கள் கலை வாரிசுகள் பற்றிக் கூறுங்கள்.

பரஞ் – எனக்கு நான்கு ஆண்பிள்ளைகள். மூத்தவன் பரராஜசிங்கம், மற்றவர்கள் சிவராஜசிங்கம், தனபாலசிங்கம், தெய்வேந்திரராஜா நால்வரும் இசை நாடக மேடைகளைக் கண்டவர்கள். இதில் இருவர் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. மூத்தவன் பரராஜசிங்கம், இளையவன் தெய்வேந்திரராஜா இசை நாடகத்தில் ஒருவன் சிங்கமாகவும், மற்றவன் இராசாவாகவும் வருவார்கள் என்று நினைத்தேன். ஆனால் சந்தர்ப்பம், சூழ்நிலை, திறமை அனைத்தும் மூத்தவனுக்கே ஒருங்கே கிடைத்தது. சிங்கம் ராசா ஆனான். இன்று இசை நாடகத் துறையில் உச்ச நிலையில் இருக்கிறான். நாடகச்சக்கரவர்த்தி, இசைநாடக நவரசக் கலைமணி, கலைக்குரிசில் போன்ற விருதுகளைப் பெற்றுள்ளான். இசை நாடகத் துறைக்கு நான் கொடுக்கும் வெகுமதி இவன்தான். எனது பேரப்பிள்ளைகளும் தமிழாற்றல் கலையாற்றல் கைவரப் பெற்றவர்கள். என்னுடைய மூத்த பேரன் ரதீஸ் இசை நாடகம் தொடர்பான ஆய்விலே மிகுந்த அக்கறை காட்டி வருகின்றான்.

நாகா – இசை நாடக ஆய்வாளர்கள் சில கலைஞர்களை இருட்டடிப்புச் செய்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. இது பற்றி என்ன கருதுகிறீகள்.

பரஞ் – இக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்கிறேன். சில ஆய்வாளர்களிடத்தே காணப்படுகின்ற பக்கச்சார்பு

தன்மை, நேர்மையின்மை, அர்ப்பணிப்பின்மை, கடின உழைப்பின்மை போன்ற காரணங்களால் சில கலைஞர்கள் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றார்கள். இது இசை நாடகத் துறைக்கு ஆரோக்கியமான ஒன்றல்ல. இது பற்றி நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. காலம் பேசும்.

நாகா – கலைஞர்கள் தகவல்களை முழுமையாகத் தருவதில்லை. தரும் தகவல்களில் உண்மைத் தன்மை இல்லை. ஒரு கலைஞன் இன்னொரு கலைஞனைப் பற்றிக் கூறுவதில்லை. கலைஞர்களே கலைஞர்களை இருட்டடிப்புச் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் கலைஞர்களிடத்தே காணப்படுகின்றன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பரஞ் – இக்குற்றச்சாட்டு நியாயமானது தான். சில கலைஞர்களிடத்திலே இத் தன்மைகள் காணப்படுகின்றன. இதற்குக் காரணங்கள் தங்களைப் பற்றியே கலை உலகம் பேச வேண்டும் என்ற எண்ணம். தன்னை விடப் பிறர் முன்னேறக் கூடாது என்ற சிந்தனை. தங்களிடமிருக்கின்ற சில விடயங்கள் மற்றவர்களைச் சென்றடைந்தால் அவர்களும் உயர்ந்து விடுவார்கள் என்ற மனப்பாங்கு. இத்தகைய சில கலைஞர்களின் நடத்தையினால் தான் கலை முது சொத்தின் ஒரு பகுதியினை இழந்துவிட்டோம்.

நாகா – சாதி பல துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இசை நாடகத் துறையிலே சாதிப் பாகுபாட்டின் தாக்கம் எப்படி?

பரஞ் – கடந்த 30, 40 ஆண்டுகளாக சாதியத்தினுடைய தாக்கம் இசை நாடகத்தினைப் பாதிக்கவில்லை. எல்லாச் சாதியினரும் ஒன்று கூடும் களமாக இசை நாடக மேடைகள் விளங்கின. விளங்குகின்றன.

நாகா – உங்கள் கலைப்பயணத்தில் நீங்கள் பெற்றுக் கொண்ட விருதுகள் பற்றிக் குறிப்பிடுங்கள்.

பரஞ் – நான் பல விருதுகளைப் பெற்றவனல்ல. ரசிகர்களின் ஆதரவையே பெரும் விருதாகக் கருதுகின்றவன். ஆயினும் 2001ஆம் ஆண்டு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சினால் "கலைஞான கேசரி" விருது வழங்கப்பட்டது. அவ்விருதினைப் பெறுகின்ற வாய்ப்பும் எனக்குக் கிடைக்கவில்லை.அப்போது நான் கொழும்பில் இருந்தேன். மூத்த மகனே பெற்று வந்தான்.

நாகா – நிறைவாக ஒரு கேள்வி. மூத்த கலைஞர் என்ற ரீதியில் இளைய தலைமுறையினருக்குக் கூற விரும்புவது என்ன?

பரஞ் – கலைஞனுக்கு வறுமை வரலாம். ஆனால் கலைமகள் ஒரு போதும் அவனைக் கைவிட மாட்டாள். எனவே இளைய கலைஞர்களே! கலைக்காக வாழுங்கள். கலைக்கு விலை பேசாதீர்கள். கலையை வாழச் செய்யுங்கள். நீங்கள் காலம் கடந்து வாழ்வீர்கள்.

நாகா – நன்றி ஐயா!

பரஞ் – இது என்னுடைய கடமை. உங்களைச் சந்தித்த இந்தப் பொழுதுகள் மிகவும் அருமையானவை. அதற்காகக் கலைமகளுக்கு நன்றி சொல்லுகின்றேன். நன்றி.

கலைஞரின் விழுதுகள்

பரஞ்சோதி — **சரஸ்வதி**

பரராஜசிங்கம்	சிவராஜசிங்கம்	தனபாலசிங்கம்	கமலகுமாரி	தெய்வேந்திரராஜா	வசந்தகுமாரி
+	+	+	+	+	+
பரமேஸ்வரி	பாக்கியம்	ஸ்ரீமதிதேவி	மனோகரன்	சுமதி	கதிரவேற்பிள்ளை
ரதீஸ்	கார்த்திகா	தர்ஷன்	கோசலை	ரீனா	அருண்குமார்
றமேஸ்	கீர்த்திகா	தனுஷா	குந்தவி	ரீமோத்தி	அருண்றாம்
றாதிகா		தரணியா	வானதி	அபிகெல்	அருண் பிரசாந்



கலைஞானகேசரி
கணபதிப்பிள்ளை பரஞ்சோதி

அமரர் கணபதிப்பிள்ளை பரஞ்சோதி யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த துன்னாலைக் கிராமத்தில் 1924ஆம் ஆண்டு பிறந்தவர். கணபதிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரன் இயல்பாகவே தமிழாற்றல், கலையாற்றல், கைவரப் பெற்றவர். சிறு வயதிலிருந்தே கலை இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்டவர். முப்பது வயதிலிருந்து தன்னை முழுமையாகக் கலைத்துறைக்கு அர்ப்பணித்தவர்.

நடிகன், நாடக நெறியாளன், நாடகாசிரியன், பௌராணிகன், பாடகன், கவிஞன் எனப் பல முகங்களுண்டு பரஞ்சோதிக்கு. துன்னையூர் இந்து கலாசார கலாமன்றத்தின் உருவாக்கத்திற்குக் காரணமானவர்களில் இவரும் ஒருவர்.

தனக்குப் பின் சிறந்த இசைநாடகப் பாரம்பரியத்தை உருவாக்கிய கலைஞன் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சினால் "கலைஞான கேசரி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

கலைக்காகவே வாழ்ந்த கலைஞர் 2004ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் ஒன்பதாம் நாள் கலைமகளின் பாதங்களைச் சென்றடைந்தார்.

உரிமையாளர்,
லாலாசோப் நிறுவனம்,
அச்சுவேலி.

பொ.வன்னியசிங்கம்

Pillaiyar Press, Nallur. ☎ :021 222 6722